**வினா எண் 38636—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாநகராட்சி 43-வது கோட்டம், சன்னியாசிகுண்டு (Extension) நீட்சிப் பகுதிகளில் சாலை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி, 43-வது கோட்டம், சன்னியாசிகுண்டு பகுதியில் வரும் நிதியாண்டில் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**29—**

## சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 40432—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் 7-வது வட்டத்தில் சாலைகள் செப்பனிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே..பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் 7-வது வட்டத்தில் சாலைகள் நகராட்சி மூலம் செப்பனிடப்பட்டு நல்ல முறையில் உள்ளன.

**30—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 41977—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது?

[2005 மார்ச் 24

(ஆ) மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை?

(இ) நிலுவையிலுள்ள பணிகள் எவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) வினா எழவில்லை.

**31—**

## புகையில்லா அடுப்பு

**வினா எண் 43566—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு புகையில்லா அடுப்பு எவ்வளவு நபர்களுக்கு அரசு கட்டிக் கொடுத்துள்ளது?

(ஆ) இதற்காக அரசு ஒதுக்கிய மானியத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு 67,358 புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசால் ரூ.60.00 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2005 மார்ச் 24]

**32—**

## குடிநீர்த் தேக்கத் தொட்டி

**வினா எண் 44622—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூரில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூர் பேரூராட்சி, குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ரூ.26.35 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**33—**

## தேசிய சாண எரிவாயுத் திட்டம்

**வினா எண் 51307—திரு. கா. தி. இளையகண்ணு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் தேசிய சாண எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2005 மார்ச் 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு தொகுதியில் தேசிய சாண எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*(ஆ) ஏற்காடு தொகுதிக்குட்பட்ட அயோத்தியாப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் 11 சாண எரிவாயு கலன்களும், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 9 சாண எரிவாயு கலன்களும், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில 7 சாண எரிவாயு கலன்களும் 2003-2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் இத்திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.*

**34—**

**ஈமக்கிரியை மண்டபம்**

**வினா எண் 52324—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கற்கோயில் ஊராட்சி, தொழுதூரில் ஈமக்கிரியை மண்டபம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சீர்காழி தொகுதி, கற்கோயில் ஊராட்சி, தொழுதூரில் ஈமக்கிரியை மண்டபம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை.*



2005 மார்ச் 24]

**35—**

**மயானக் கொட்டகை**

**வினா எண் 52457—திரு நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம்,பெருமங்கலம் ஊராட்சி, பெருமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் தெருவிற்கு மயானக் கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சி, பெருமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் தெருவிற்கு மயானக் கொட்டகை அமைத்துத்தர தற்போது வாய்ப்பு இல்லை.*

**36—**

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 52592—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, ஆற்றங்கரை தெரு, புங்கனூர் ஊராட்சி, கீழத்தெரு, சேந்தங்குடி ஊராட்சி, கீழத்தெரு, கற்கோயில் ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2005 மார்ச் 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 தொகுப்பு வீடுகளும், புங்கனூர் ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 10 தொகுப்பு வீடுகளும், 1999-2000 ஆம் ஆண்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 20 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. சேந்தங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 11 தொகுப்பு வீடுகளும், கற்கோயில் ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 11 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**37—**

### இலவச வீடுகள்

**வினா எண் 52595—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், சேந்தங்குடி ஊராட்சி, கீழத்தெரு ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், சேந்தங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 11 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.



2005 மார்ச் 24]

**38—**

### தொகுப்பு வீடுகள்

**வினா எண் 52606—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் பஞ்சாயத்து புதுப்பட்டினம் ஊராட்சி தக்கால் (மற்றும்) வள்ளியம்மை நகர் ஆரப்பள்ளம் ஊராட்சி மலையமான் கோட்டகம், நரிமுடுக்கு ஆகிய இடங்களில் புரட்சித் தலைவரால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை சரி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**39—**

### கான்கிரீட் மயானக் கொட்டகை

**வினா எண் 55916—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் முதலியார் இன மக்கள் பயன்படுத்தும் மயானக் கொட்டகையை கான்கிரீட் மயானக் கொட்டகையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் சீர்காழி நகரில் உள்ள முதலியார் இன மக்கள் பயன்படுத்தும் மயானக் கொட்டகையை கான்கிரீட் மயானக் கொட்டகையாக மாற்ற தற்போது திட்டம் எதுவும் இல்லை.

**40—**

## குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 57230—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி, தொண்டைமானேந்தல் ஊராட்சி, ஈச்சங்குடி கிராமம் மற்றும் புதுவாக்காடு கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்துத் தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், தொண்டைமானேந்தல் ஊராட்சியில் உள்ள ஈச்சங்குடி குடியிருப்பில் தனி மின்விசைத் திட்டம் 2003-04 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. மேலும், இதே ஊராட்சியிலுள்ள புதுவாக்காடு குடியிருப்பில் உதயமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது மேல்நிலைத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**41—**

## குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 57234—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அறந்தாங்கி, ஆமாஞ்சி ஊராட்சி, இடையன்காடு கிராமம் மற்றும் துரையரசபுரம் புதுக்காலனி கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்துத் தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், ஆமாஞ்சி ஊராட்சியைச் சேர்ந்த இடையன்காடு குடியிருப்பில் 2001-ல் நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலமும், துரையரசபுரம் புதுக்காலனி குடியிருப்பில் 2003-04 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலமும் குடிநீர் வழங்கப்பெறுகிறது.

**42—**

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 58342—திரு அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி 22-வது பகுதி ஆண்டிப்பட்டியில் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 22-வது கோட்டம் ஆண்டிப் பட்டியில் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்ய ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது. 2004-2005 ஆம் நிதியாண்டிற்குள் இப்பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

43—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 58374—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொண்டைமானேந்தல் ஊராட்சி, தொண்டைமானேந்தல் கிராமம், இடையன்கொல்லை கிராமம் மற்றும் ரெத்தினக்கோட்டை ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், ரெத்தினக்கோட்டை ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் காலனியில் 2003-04 ஆம் நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

ஆவுடையார்கோவில் ஒன்றியம், தொண்டைமானேந்தல ஊராட்சியைச் சேர்ந்த தொண்டைமானேந்தல் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியின் மூலம் உதயமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஆதலால் இக்குடியிருப்பில் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

மேலும், தொண்டைமானேந்தல் ஊராட்சியைச் சேர்ந்த இடையன் கொல்லை குடியிருப்பில் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் உதயமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இன்றி நேரிடையாக விநியோகிக்கப்படுகிறது.



44—

## சிறு பாலம் கட்டுதல்

**வினா எண் 59871—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, வண்ணாரப்பேட்டை பகுதியில் சிறு பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, வண்ணாரப் பேட்டை பகுதியில் சிறு பாலம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். நகராட்சி நிதிநிலை சீரடைந்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

45—

## குடிநீர் அசுத்தமாவதைத் தடுத்தல்

**வினா எண் 60107—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் ஒவ்வொரு வீட்டிலும் கட்டப்படும் நச்சுத் தடை மலக்குழியில் (Septic Tank Choke-pit) போடப் படுவதால் குடிநீர் (நிலத்தடி நீர்) அசுத்தமாவதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சிப் பகுதியில் வீடுகளில் கட்டப்படும் நச்சுத் தடை தொட்டி (Septic Tank Choke-pit) சுற்றுச்சுவர் நீர் உறிஞ்சும் அமைப்பில் கட்டப்படுவதில்லை. நச்சுத்தடை தொட்டியின் சுற்றுச்சுவர் நீர் உறிஞ்சாவண்ணம் முற்றிலும் சிமெண்ட் பூச்சு பூசப்படுகிறது. இதனால் குடிநீர் அசுத்தமாவதற்கான வாய்ப்புகள் இல்லை.

**46—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 60108—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, தலைஞாயிறு ஊராட்சி, தெற்குத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தலைஞாயிறு ஊராட்சி, தலைஞாயிறு குடியிருப்பில் தெற்குத் தெரு ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் 1991-1992 ஆம் ஆண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இரண்டு சிறு மின்விசைப் பம்பும் இரண்டு கைப்பம்பும் இயங்கி வருகின்றன. இது முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும்.



**47—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 60275—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, எண் 9-ஏ கரியமாணிக்கம் ஊராட்சி, கரியமாணிக்கம் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், 9-ஏ கரியமாணிக்கம் ஊராட்சியைச் சேர்ந்த கரியமாணிக்கம் குடியிருப்பில் 1993 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போதைய மக்கள்தொகைக்குக் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி தேவையில்லை.

**48—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 60369—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செயதி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி தெற்கு, பிச்சங்குடியிருப்புப் பகுதி மற்றும் கோபாலசமுத்திரம் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியத்திலுள்ள ஆயிங்குடி ஊராட்சியில், பிச்சங்குடியிருப்பு மற்றும் கோபாலசமுத்திரம் பகுதிகள் தனிக் குடியிருப்புகளாக இல்லை. ஆயிங்குடி தெற்குக் குடியிருப்பின் பகுதிகளாக உள்ளன. மேற்கூறிய பகுதிகளை உள்ளடக்கிய ஆயிங்குடி தெற்குக் குடியிருப்பில் முறையே 1990-91 மற்றும் 2001-02 ஆகிய வருடங்களில் நிறைவேற்றப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**49—**

### குடிநீர் வசதி

**வினா எண் 61542—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, வெளியாத்தூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் ஒன்றியம், விளானூர் பஞ்சாயத்தில் உள்ள வெள்ளியாத்தூர் குடியிருப்பிற்கு கானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 4 பொதுக் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**50—**

### மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 63509—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, சா. அய்யம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட மேலகருங்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், அய்யம்பாளையம் ஊராட்சியில் மேலகருங்காடு, கருங்காடு குடியிருப்பின் ஒரு பகுதியாக உள்ளது. கருங்காடு குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போதைய மக்கள்தொகைக்கு இது போதுமானது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### தென் மாவட்டங்களில் நீல நாக்கு நோயால் ஆடுகள் இறப்பு—விவசாயிகளுக்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சோ. இராசேந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தென் மாவட்டங்களில் சென்ற ஆண்டு பெய்த மழையின் காரணமாக ஆடுகள் ஆயிரக்கணக்கில் நீல நாக்கு நோய் தாக்கி இறந்ததால்

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பருவ மழைக் காலங்களில் நீல நாக்கு நோய் ஆடுகளைத் தாக்கும். இந்நோய்க்கு எதிரான தடுப்பூசி இல்லாததால் நோய்த் தடுப்பு முறைகளை கால்நடை வளர்ப்போர் கையாள வேண்டும்.

சென்ற ஆண்டு பெய்த பருவ மழையின் காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு நீல நாக்கு நோய் தாக்கியுள்ளது:

| வ.எண் | மாவட்டம் | இறந்தவை |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 8,939 |
| 2. | மதுரை | 579 |
| 3. | தூத்துக்குடி | 6,222 |

நோய்த் தடுப்பு நடவடிக்கையாக பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கப்பட்டு, பட்டிகளின் அருகிலுள்ள புதர்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நோய் பட்டிகளின் அருகில் தேங்கியுள்ள தண்ணீர் மூலம் பரவுவதால் தண்ணீர் தேங்கவிடாமல் ஆடு வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இத்துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய்த் தாக்கி இறந்த ஆடுகளுக்கு இழப்பீடு கொடுக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி நிவாரணத் தொகையினைப் பெற சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரப்பட்டனர். அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணைகளை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி அதன்பேரில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விவரம் கோரப்பட்டுள்ளது, அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணைகளை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பி, அதன்பேரில் குறித்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நிவாரண நிதியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஆடுகளை பாதிக்கக்கூடிய நீல நாக்கு நோய்க்கு உண்டான தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்று கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் எல்லாம் குறிப்பிடுகின்றார்கள். புதிய தடுப்பூசி மருந்து ஏதும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தால் ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குப் பதில் சொல்லட்டும், அடுத்து கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலேயே இதுவரை நீல நாக்கு நோய்க்குத் தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. தற்போது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களது சீரிய ஆட்சியில் நீல நாக்கு நோய்க்கான புதிய தடுப்பூசி மருந்து தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது களப் பரிசோதனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இம்மாமன்றத்திற்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல ஆடுகள் இறக்கும் சமயத்தில் தற்போது நிவாரண நிதி குறைந்தபட்சம் ரூ.300 என்ற அடிப்படையில் அரசு வழங்கி வருகிறது. இந்த நிவாரணம் என்பது, போதுமான அளவிற்கு இல்லை. ஆட்டினுடைய தற்போதைய விலை மதிப்பு என்பது கிட்டத்தட்ட 4,000 ரூபாய் வரை இருக்கிறது. ஆகையினால், இந்த நிவாரணத் தொகையைக் கூட்டி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 மார்ச் 24

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் 1997 ஆம் ஆண்டு நீல நாக்கு நோயால் இறந்த ஆடுகளுக்கு, ஆடு ஒன்றுக்கு ரூ.300 மட்டுமே நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இயற்கை இன்னல்களால் இறந்த ஆடு ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் இழப்பீடு வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதே அளவு நிவாரணத் தொகை நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்த ஆடுகளுக்கும் வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 265 முதல் 267 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 172 முதல் 174 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*முற்பகல் 10-05*

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.



2005 மார்ச் 24]

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் 109 மற்றும் 110 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- எழுதுபொருள் மற்றும் அச்சு**

**(இ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**(உ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(ஊ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 23-3-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துகளுக்கு வருவாய்த் துறையின் சார்பாக என்னுடைய பதிலுரை... (குறுக்கீடு)

## 5. தகவல் கோரல்

### எழுதி வைத்துக்கொண்டு படித்தல்

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடத்திலே ஒரு சிறிய விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இவருக்காக நான் சொல்லவில்லை. பொதுவாகவே சொல்கிறேன். இந்த அவையிலே உறுப்பினர்களேகூட குறிப்பு வைத்துக்கொண்டு பேசலாமே தவிர, முழுக்கப் படிக்கக்கூடாது. இப்படி, பாரதம் மாதிரி இரண்டு நாளைக்கு, மூன்று நாளைக்குப் படித்தால், எல்லோரும் படிப்பதற்கு அனுமதி உண்டா என்பதை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். Rules-ல் amend ஆகிவிட்டதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிய விளக்கத்தைத்தான் அவர் படிக்கிறார். (குறுக்கீடு) இல்லை. ஏற்கெனவே நீங்கள் இதுபற்றிக் கேட்டு, இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறார்கள். அதே பதில் இப்போதும் பொருந்தும்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு**

**(இ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**(உ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(ஊ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

தொடர்ச்சி





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேள்வி கேட்பவர்களும் குறிப்பு வைத்துக்கொண்டுதான் கேட்கிறார்கள், பேசுகிறார்கள். ஆகவே, பதிலுரையையும் குறிப்பு வைத்துக்கொண்டுதான் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய அரிய கேள்விகளுக்குப் பதிலுரையாக என்னுடைய வருவாய்த் துறையின் பதில் அமைந்திருந்தது. இருப்பினும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவப் பெருமக்களுக்கு, மீண்டும் அவர்களுடைய வாழ்வாதாரங்கள் திரும்பக் கிடைப்பதற்கு எவ்வளவு பெரிய நிவாரணங்களை வழங்கியிருக்கின்றார்கள் என்ற பட்டியலை ஒரு நாள் மட்டுமல்ல, இரண்டாவது நாளும் நீட்டித்துப் படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்ற விளக்கத்தினை இங்கு தந்து, என்னுடைய பதிலுரையைத் தொடர்கின்றேன்.

முழுவதும் சேதமடைந்த 4,440 கண்ணாடி இழை கட்டுமரங்களை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 23.31 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், முழுவதும் பழுதடைந்த 8,140 படகு மற்றும் கண்ணாடி இழைப் படகு, வல்லம் இவற்றை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு 52,500 ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 42.73 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், பழுதடைந்த 1,775 இயந்திரப் படகுகளைச் சரிசெய்ய இனம் ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 53.25 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், முழுவதும் பாதிப்படைந்த அல்லது காணாமல்போன 2,655 படகுகளுக்கு இனம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வீதம் மொத்தம் 132.75 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், 4,147 கட்டுமரங்கள் பழுதுபார்க்கவும் மற்றும் மறு கட்டுமானம் செய்யவும் இனம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் கூடுதல் நிதி உதவியாக 2.07 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வில் மீண்டும் மறுமலர்ச்சியை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் 395.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக் கருணையுள்ளத்தோடு வழங்கினார்கள் என்பதனை இந்த அவைக்கு அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட துயரத்தினால் பாதிப்பு அடைந்த குடும்பத்தினருக்கு இன்னும் அவர்கள் வாழ்வாதாரங்களை நடத்த காலதாமதமாகும் என்ற நிலையில், சமையல் பொருட்கள் உட்பட 1,000 ரூபாய் பணத்துடன் ஒரு குடும்பத்திற்கு, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,526 வீதம் 122 கோடி ரூபாய் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், டிராக்டர் ஓட்டுநர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் ஆழிப் பேரலையால் இறந்தவர்களின் உடலை அப்புறப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டனர். அவர்களது பணியினைப் பாராட்டும் விதமாக, நபர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் மதிப்பூதியம் வழங்க, 1,19,07,500 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

சிறு வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், நடமாடும் தற்காலிகக் கடை உரிமையாளர்கள் ஆகியோருக்கு ஆழிப் பேரலையின்போது ஏற்பட்ட பாதிப்புக்கு தலா 2,000 ரூபாய் வீதமும், நிரந்தரக் கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதமும் நிவாரணம் வழங்க ஏதுவாக மாண்புமிகு அம்மா அவர்கள் 5 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கினார்கள்.

முற்பகல் 10-10

நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஆழிப் பேரலையால் விவசாய நிலங்களில் துவர்ப்பு, உப்பு நீர் கலப்பு ஏற்பட்டுள்ளதால், அந்த விளைநிலங்கள் பாதிப்புக்குள்ளாயின. மேற்படி விவசாய நிலங்களை பண்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு ஹெக்டேருக்கு 12,500 ரூபாய் வீதம் செலவிட அனுமதித்து 17 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒப்பளிப்பு வழங்கியிருக்கின்றார்கள் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆழிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்ட கீழ்மணக்குடி-மேல்மணக்குடி இடையே இருந்த பாலத்தை மீண்டும் மேற்படி கிராமங்களை இணைப்பதற்கு ஏதுவாக தற்காலிக இரும்புப் பாலம் அமைக்க 1.04 கோடி ரூபாய் நிதி வழங்கி உடனடியாக பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கடலூர் மாவட்டத்தில் ஆழிப் பேரலையின் காரணமாக இறால் மற்றும் நண்டுப் பண்ணை உரிமையாளர்கள்,



மீன்குஞ்சு வளர்க்கும் பண்ணை உரிமையாளர்கள், மீன் போக்குவரத்து செய்யும் உரிமையாளர்கள், ஐஸ் கட்டிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் முதலியன பாதிப்புக்குள்ளாயின. இவர்களுக்கு மானியமாக வழங்குவதற்கு 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் படகுத் துறையைப் பழுதுபார்க்க 5 இலட்சம் ரூபாயும், கன்னியாகுமரி படகுத் துறையைப் பழுதுபார்க்க 189 இலட்சம் ரூபாயும் மானியமாக நிதி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். சுனாமி தாக்குதலால் பாதிப்புக்குள்ளான மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி மையங்களைப் பழுதுபார்த்தல், நதி முகத்துவாரங்களில் தூர் வாருதல், மீன்பிடித் தொழிலை மீண்டும் மேற்கொள்ள ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு என 9.94 கோடி ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மத்திய அரசு தற்போது கூடுதலாக 367.20 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இதுவரை மொத்தம் 617.20 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். சுனாமி நிகழ்வு தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவில் சில பகுதிகளிலும் மேலும் சில வெளிநாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. ஆனால், அங்கெல்லாம் நடந்த நிவாரணப் பணிகளுக்கு ஒரு முன்மாதிரியாக நிவாரணப் பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்கி, பாதிக்கப்பட்டவர்களுடைய இதயத்தில் நம்பிக்கை ஒளியை, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்பதை இந்தியா மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் உள்ள அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட நிவாரணப் பணிகள் சிறப்பாக அமைந்ததைக் விளக்கிக் கூறுவதற்கு இலங்கை அரசு இரண்டு மூத்த அதிகாரிகளை அழைத்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகாரிகளை இலங்கைக்குச் சென்று தமிழக அரசு எடுத்த நிவாரணப் பணிகள், செயல்படுத்தப்பட்ட முறையை எடுத்துச் சொல்ல அனுப்பி வைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறாக வருவாய்த் துறை நடைமுறையிலுள்ள நிருவாகப் பணிகளை கவனிப்பது மட்டுமல்லாமல், நிவாரணப் பணிகளையும் சேர்த்து சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையினுடைய பதிலாக, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் அமைந்துள்ள இந்த அரசு ஏழை எளிய மக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை மேம்பாட்டுக்காக பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதேசமயம் கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களை அருந்துவதால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்பதையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களின் கோரப் பிடியிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு உள்ளது. மேலும், அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கடத்தி வரப்படும் கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத போலி மது பானங்களை அருந்துவதால் மதுபானங்கள் அருந்துவோருடைய உடல் நலம் பெருமளவு பாதிக்கப்படுவதுடன், அரசுக்குப் பெருத்த வருவாய் இழப்பும் ஏற்படுகின்றது. எனவே, கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களை அறவே ஒழிப்பதும், பிற மாநிலங்களிருந்து கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்கள் கடத்தி வருவதைத் தடுப்பதும், அவற்றை அருந்துவதிலிருந்து ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களை மனம் திருந்தச் செய்து அவர்களை மாற்றுப் பணிகளில் ஈடுபடுத்தி, அவர்களுடைய வாழ்க்கையில் வளம் கொழிக்கும் வகையில் மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவதையும் இந்த அரசு குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இச்சூழ்நிலையில் மக்கள் உடல் நலனுக்குக் கேடு விளைவிக்காத, பாதுகாப்பான மதுபானங்களைச் சட்டபூர்வமாக கிடைக்கச் செய்வதும், அதன்மூலம் அரசுக்கு நியாயமாக வரக்கூடிய வருவாயை உறுதி செய்வதும் பெரிதும் அவசியம் என்று அரசு கருதுகிறது.

முற்பகல் 10-15

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மதுபான மொத்த விற்பனையை, 1983 முதல் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. முன்னாள் உரிமதாரர்கள், ஆயத்தீர்வை செலுத்தப்படாத போலி மதுபானங்களை, அவர்களுடைய கடைகளில் விற்பனை செய்து, அரசுக்கு முறையாக வரக்கூடிய வருவாயைப் பெருமளவு பாதிக்கச் செய்ததாலும், அரசு நிர்ணயித்த சில்லறை விற்பனை விலைக்கு மேலாக விற்பனை செய்து, முறைகேட்டில்



ஈடுபட்டதாலும், மேலும் அவர்கள் தங்களுக்குள் கூட்டணி அமைத்துக்கொண்டு, அறிவிக்கை செய்த கடைகளில் 45 விழுக்காடுகளுக்கு மேலான கடைகளை எடுத்து நடத்த முன்வராததாலும், தொடர்ந்து அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தியதாலும், மாண்புமிகு அம்மா அவர்கள், மதுபான சில்லறை விற்பனையை, அரசு நிறுவனமான, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே (TASMAC) 29-11-2003 முதல், தமிழ்நாடு முழுமையும் எடுத்து நடத்தும்வண்ணம், உரிமம் வழங்க ஆணையிட்டார்கள். தொலைநோக்குப் பார்வையோடு, மிகத் துணிச்சலாக மேற்கொண்ட இந்த முடிவால், அரசின் வருவாய் பெருமளவு பெருகியதோடு, தீர்வை செலுத்தப்படாத போலி மதுபானங்களின் நடமாட்டம் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், சில்லறை விற்பனையை ஆரம்பித்த 29-11-2003 முதல் 28-11-2004 வரையிலான ஓராண்டு காலத்தில் எட்டிய விற்பனை, 5,441 கோடி ரூபாயாகும். சில்லறை விற்பனையை தனியார் நடத்திய, இதற்கு முந்தைய ஓராண்டு காலமான 29-11-2002 முதல் 28-11-2003 வரையிலான விற்பனை மதிப்பு, 3,877 கோடி ரூபாயாகும். சில்லறை விற்பனையை, 'டாஸ்மாக்' எடுத்ததால், ஓராண்டில் விற்பனையின் கூடுதல் மதிப்பு (Additional Sales Value) 1,564 கோடி ரூபாயாகும் என்பதனை அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பது எனது கடமையாகும். இது, கடந்த ஆண்டு தனியார் விற்பனையோடு ஒப்பிடும்போது, 40.34 விழுக்காடு கூடுதல் வளர்ச்சியாகும். 29-11-2003 முதல் 28-11-2004 வரையிலான ஓராண்டு காலத்தில், 'டாஸ்மாக்' மதுபான சில்லறை விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய், 4,441.88 கோடி ரூபாயாகும். முந்தைய காலகட்டத்தில், அதாவது, 29-11-2002 முதல் 28-11-2003 வரையில் தனியார் மதுபான சில்லறை விற்பனை செய்தபோது, அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய், 3,146.48 கோடி ரூபாய் மட்டுமேயாகும். சில்லறை விற்பனையை 'டாஸ்மாக்' எடுத்துக்கொண்ட பிறகு, ஓராண்டு காலத்தில், அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் மட்டும் 1,295.40 கோடி ரூபாயாகும்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 29-11-2003 முதற்கொண்டு, மதுபான சில்லறை விற்பனையைச் சிறப்பாக நடத்தி வருகிறது. 2004 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் நடைபெற்ற விற்பனையின் மதிப்பு, 5,340 கோடி ரூபாயாகும். முந்தைய நிதியாண்டில், இதற்கு இணையான காலத்தில், 2003 முதல் பிப்ரவரி 2004 வரை

நடைபெற்ற மதுபான விற்பனையின் மதிப்பு, 3,826 கோடி ரூபாய் மட்டுமேயாகும். இவ்வாறு நடப்பு நிதியாண்டில் மட்டும், கடந்த 11 மாதங்களில் நடைபெற்ற விற்பனையின் கூடுதல் மதிப்பு, 1,514 கோடி ரூபாயாகும். நடப்பு நிதியாண்டில், 2004 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தை, 2003 ஏப்ரல் முதல் 2004 பிப்ரவரி வரை, 11 மாத காலத்துடன் ஒப்பிட்டால், அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய்—Additional Revenue—1,151.66 கோடி ரூபாயாகும்.

முற்பகல் 10-20

இன்னும் நான் சற்று விளக்கமாக இங்குக் குறிப்பிட வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கு ஆயத்தீர்வை, 2002-2003-க்கும், 2003-2004-க்கும், Excise தீர்வையினுடைய வருமானம் குறைந்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டினைச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சற்று விளக்கமாக அதற்குப் பதிலளிக்க வேண்டும் என்றால், 2002-2003 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை அதிகமாகவும் அதாவது ஒரு நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் முடிய உள்ள காலமாகும். 2002-2003 தீர்வை ஆண்டுக்கான காலம், அதாவது ஆயத்தீர்வை ஆண்டுக்கான காலம், 16-9-2002 முதல் 15-9-2003 வரையிலாகும். இது 28-11-2003 வரை நீட்டிக்கப்பட்டது. 2002-2003 ஆம் நிதியாண்டில், தனியார்கள் கடை நடத்துவதற்காக அவர்களிடமிருந்து முன் பணமாகப் பெற்ற உரிமைத் தொகை, அதாவது Privilege Amount, 2002 செப்டம்பர் முதல் நான்கு மாதங்களில் வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் 629.51 கோடியாகும். இந்த உரிமைத் தொகை - Privilege Amount, 2002-2003 ஆம் நிதியாண்டு செப்டம்பர் 15-க்குப் பின்பு உள்ள ஆறு மாத காலத்திற்கும் மற்றும் 2003-2004 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்திற்கும் சம்பந்தப்பட்ட தொகையாகும். எனவே, 2002-2003 ஆம் நிதியாண்டில் பெறப்பட்ட உரிமைத் தொகை - Privilege Amount ரூபாய் 629.51 கோடியில், ரூபாய் 314.75 கோடி, 2002-2003 ஆம் நிதியாண்டிற்கும், ரூபாய் 314.75 கோடி 2003-2004 ஆம் நிதியாண்டிற்கும் சம்பந்தப்பட்டதாகும். 2002-2003 ஆம் நிதியாண்டில் விற்கப்பட்ட மதுபானங்களின் மூலம் கிடைத்த ஆயத்தீர்வை வருவாய் ரூபாய் 2,113.61 கோடியாகும். இதில் அந்த நிதியாண்டில் பெற்ற, ஆனால் இரண்டு நிதியாண்டுகள் சம்பந்தப்பட்ட உரிமைத் தொகை - Privilege Amount ரூபாய் 629.51 கோடி அடங்கியதாகும். இந்த உரிமைத் தொகையான ரூபாய் 629.51 கோடி, 2002-2003 ஆம் நிதியாண்டிலே செலுத்தப்பட்ட காரணத்தினால், மொத்தத் தொகையும் 2002-2003 ஆம் நிதியாண்டுக்



கணக்கிலேயே சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவேதான், அந்தக் குறைபாடு, அங்கே நிதிநிலை அறிக்கையிலே குறைபாடு இருக்கின்ற காரணத்தை நான் இங்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், 2003-2004 ஆம் நிதியாண்டு பிற்பகுதியில்... (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்லிவிடுகிறேன். அப்புறம் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே ஆயத்தீர்வையிலே கிடைத்திருக்கிற வருவாய் பற்றிச் சுட்டிக்காட்டியிருக்கிறார். என்னுடைய சந்தேகம், தனியாரிடம் வருகிறபோது, நாம் வாடகையோ, அலுவலர்களுக்கான ஊதியங்களோ கொடுப்பதில்லை. நீங்கள் இப்போது சுட்டிக்காட்டியிருக்கிற வருமானம், அந்த வாடகை, இருக்கிற அலுவலர்களுக்கு நீங்கள் கொடுக்கிற தொகை, இவையெல்லாம் போகக் கிடைக்கிற நிகர இலாபமா அல்லது மொத்த வருவாயா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் இப்போது சொல்லிக்கொண்டு வருவது மொத்த வருவாய். முன்பு நம் மொத்த விற்பனையை டாஸ்மாக் நடத்திக்கொண்டு வந்தது. சில்லறை விற்பனையைத் தனியார் நடத்திக்கொண்டு வந்தார்கள். சில்லறை விற்பனையைத் தனியார் நடத்திக்கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு விற்பனையைத் தனியார் நடத்திக்கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு நாம் கொடுத்து 20 சதவீதம் அங்கே கமிஷனாக—இலாபம்—அவர்களுக்கு நாம் கொடுத்து வந்தோம். அந்த 20 சதவீதமும் அந்த இலாபமும் தற்போது நமக்குக் கிடைக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், கடந்த காலங்களில் இந்த மது விற்பனையை டாஸ்மாக் எடுத்த காலத்திலிருந்து அல்லது இந்த மது விற்பனையை அரசு தன் கையில் எடுத்துக்கொண்ட காலத்திலிருந்து, சராசரியாக ஒரு மாதத்திற்கு 12 இலட்சம் பெட்டிகள்தான் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஆனால், நம் அரசு சில்லறை விற்பனையை மேற்கொண்டபோது, இன்றைக்கு சராசரியாக 18 இலட்சம் பெட்டிகள் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்பட்டிருக்கிறது. அந்த இரண்டு காரணங்களினால்தான் இன்றைக்கு மதுபான சில்லறை விற்பனையின் மூலம் அரசுக்குக் கூடுதலான இலாபம் கிடைக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் எந்தத் தவறுக்கும் இடம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை இங்கே தந்தார்கள். சில்லறை விற்பனையிலே 2002-2003-லே ரூ.3,877 கோடியாக இருந்தது. 2003-2004-ல் ரூ.5,441 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சில்லறை விற்பனையிலே எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நாங்கள் கேட்க விரும்புவது எல்லாம், டாஸ்மாக்குக்கு supply செய்கிறவர்கள் - manufacturers யார் மதுவை உற்பத்தி செய்கிறார்களோ, அவர்கள் டாஸ்மாக்குக்கு அங்கே கொண்டுவந்து, மதுவை விற்பனை செய்கிறார்கள். அப்போது, அவர்கள் excise duty கட்ட வேண்டும். அவர்கள் மட்டும்தான் excise duty கட்ட வேண்டுமே தவிர, சில்லறை வியாபாரிகள் excise duty கட்டுவதில்லை. இது நீங்கள் கொடுத்த புத்தகம். நான் முதலிலே காட்டியது, அது Finance Department-லேயிருந்து கொண்டுவந்து காட்டிய புத்தகம். இப்போது நீங்கள் கொடுத்த புத்தகத்திலேயே என்ன காட்டியிருக்கிறீர்கள் என்றால், மாநில ஆயத்தீர்வை, அதாவது பக்கம் 28 நிதிநிலை குறிப்பு பகுதி-1, Budget Memorandum Part I அதிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், 2003-2004 கணக்குகள் ஆயத்தீர்வை என்று சொல்லி 1,657.09 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு ஒரு விளக்கம் சொன்னீர்கள். Financial year என்பது ஒன்று. மது விற்பனை செய்வது என்பது ஒன்று. Financial year என்பது 1-4-லிருந்து ஆரம்பிக்கிறது. மது விற்பனை என்பது செப்டம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கிறது அல்லது நவம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கிறது என்று சொன்னீர்கள். அதிலே 629 கோடி ரூபாய் வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படிப் பகிர்ந்து அளித்தால்கூட, 2003-2004-ல் 1,657 கோடி என்பது மிகவும் குறைவு, உங்கள் கணக்குப்படியே பார்த்தால்கூட. இப்போது 2004-2005-ல் 2,360 கோடி என்று காட்டியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு அதிகமாக வருவாய் வந்திருக்கிறது. அந்த ஆண்டு மட்டும் வருவாய் குறைவதற்குக் காரணம், எங்கேயோ குறைபாடு இருக்கிறது. நான் அரசாங்கத்தைக் குற்றம் சொல்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. இந்தக் குறைபாட்டிற்கு யார் காரணம்? அந்தக் குறைபாடு நடந்திருந்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நான் பல்வகையான இந்த வருவாய் ஒப்பீட்டிற்கு சரியான விளக்கம் கொடுத்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் அதை இங்கே ஏதோ உள்நோக்கத்தோடு கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இதில் எந்தவித ஐயப்பாட்டிற்கோ, சந்தேகத்திற்கோ இடமில்லை. இன்னும் நான் தெளிவாக இங்கு சில விளக்கங்களை அளிக்க இருக்கின்றேன். அதாவது, 2003 நவம்பர் மாதத்தில் தனியாரிடமிருந்த சில்லறை விற்பனை உரிமம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு சட்ட ரீதியாக மாற்றப்பட்டது. முன்பெல்லாம் சில்லறை விற்பனை தனியாரிடம் இருந்தபோது ஒரு கலால் ஆண்டிற்கான மொத்த உரிமைத் தொகை ஒட்டுமொத்தமாக அந்தக் கலால் ஆண்டு துவக்கத்திலேயே செலுத்தப்பட்டு வந்தது. சில்லறை விற்பனை டாஸ்மாக் நிறுவனத்தில் மாற்றப்பட்டபின் இந்த உரிமைத் தொகைக்குப் பதிலாக, சிறப்பு உரிமைத் தொகை என்ற முறை ஏற்படுத்தப்பட்டு மாதா மாதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதாவது டாஸ்மாக் நிறுவனம் சிறப்பு உரிமைத் தொகையை கலால் ஆண்டு முதலிலேயே மொத்தமாகச் செலுத்தாமல் மாதா மாதம் செலுத்தி வருகிறது. இந்த மாற்றத்தை 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தியதால் அந்த நிதியாண்டில் ஆயத்தீர்வை என்ற தலைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மறுபடியும் 2004-2005 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை என்ற தலைப்பில் பார்த்தோம் என்றால், வருவாய் கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்பது தெரியவரும். அதாவது திருத்திய மதிப்பீட்டில் 2,360 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும், விற்பனை வரியிலும் மதுபான விற்பனைமூலம் கணிசமான அளவும் உயர்ந்துள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, விற்பனை வரியிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை. ஒழுங்காக விற்பனை வரியிலே ஆண்டாண்டுதோறும் ஏறக்குறைய 10 சதவிகிதம் உயர்ந்துகொண்டே வருகிறது. ஆனால், excise duty-யிலேதான் குழப்பம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரே என்ன சொன்னார் என்றால், 2002-2003-ல் 12 இலட்சம் கேஸ்கள் விற்பனை ஆயின. 2003-2004-ல் 18 இலட்சம் கேஸ்கள் விற்பனை ஆகியிருக்கின்றன என்று சொன்னால், 6 இலட்சம் கேஸ்கள் அதிகமாக விற்பனை ஆகியிருக்கின்றன. அப்போது அந்த 6 இலட்சம் கேஸ்களுக்கும் excise duty அதிகமாக வந்து டாஸ்மாக்கிற்குக் கிடைத்திருக்க வேண்டும். அது கிடைக்கவில்லை.

இப்போதே நீங்கள் பதில் சொல்ல வேண்டும் என்பதல்ல. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எல்லா விவரமும் தெரிந்தவர்கள். அவரும் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் இருவரும் சேர்ந்து - நான் யாரையும் - அரசாங்கத்தையோ, யாரையும் குற்றம் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டீர்கள், அதற்கு அவர் பதில் சொல்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை, தவறு நடந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எங்கே நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து உரியவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் விளக்கத்தை முழுமையாகப் படிப்பதற்குமுன் அவர்கள் குறுக்கிட்டதனால் சொல்லமுடியவில்லை. இன்னும் அவர் கேட்ட விளக்கம் எல்லாம் பின் பகுதியில் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, 2002-2003 ஆம் நிதியாண்டு கணக்கிலே சரிசெய்யப்பட்டது. ஆனால், 2003-2004 ஆம் நிதியாண்டு பிற்பகுதியில் மதுபான விற்பனையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே மேற்கொள்ளும் என்ற கொள்கை முடிவை அரசு எடுத்ததன் காரணமாக தனியாரிடம் உரிமைத் தொகை, privilege amount, முன்பணம் ஏதும் பெறும் நிலை ஏற்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதாவது ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டால்கூட, 2002-2003 ஆம் நிதியாண்டிலுள்ள 6 மாதத்திற்குள்ள உரிமைத் தொகை - அதாவது ரூபாய் 314.75 கோடியாகும். எனவே, உண்மையிலேயே மதுபான விற்பனை மூலம் கிடைத்த ஆயத்தீர்வை வருவாயையும், அடுத்த ஆண்டிற்கு சம்பந்தப்பட்ட உரிமைத் தொகையையும் கணக்கிட்டால் 2002-2003 ஆம் ஆண்டில் வருவாய் ரூபாய் 1,798.86 கோடியாகும்.

முற்பகல் 10-30

இதேபோன்று 2003-2004 ஆம் நிதியாண்டில் மதுபான விற்பனை மூலம் கிடைத்த ஆயத்தீர்வை வருவாய் ரூபாய் 1,657.10 கோடியுடன் அந்த நிதியாண்டு கணக்கில் எடுத்துக்கொள்ளத் தகுதியான உரிமைத் தொகை ரூபாய் 314.75 கோடியைச் சேர்த்து கணக்கிட்டால், அந்த நிதி ஆண்டுக்கு உரிய வருவாய் ரூபாய் 1,971.85 கோடியாகும். எனவே, 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு, 2002-2003 ஆம் நிதி ஆண்டைவிட ரூபாய் 172.99 கோடி கூடுதலாக வருவாய் கிடைத்துள்ளது என்பது மிகச் சரியான கணக்காகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு பல்வேறு வினாக்களை... (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் கருத்து சொன்னீர்கள். அதற்கு பதில் சொல்லிவிட்டார். விட்டுவிடுங்கள். மறுபடியும் அதிலே தோண்டிக்கொண்டிருக்க வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை. தயவுசெய்து அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதற்காகச் சொல்லவில்லை. கேட்டீர்கள் அதற்கு ஒரு விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** குற்றமே சொல்லவில்லை நான். நான் சொல்வது — இப்பொழுது நானும் அமைச்சரும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு அமைச்சர் என்றிருந்தால், அந்த அமைச்சருக்கு இலாக்காவிலே நடக்கின்ற எல்லா விவரமும் தெரியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், டாஸ்மாக்கி-ல் எங்கேயோ ஒரு கோளாறு இருக்கிறது. அந்தக் கோளாறு எங்கே இருக்கிறது; அதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விவரங்களை எடுத்துச் சொன்னேனே தவிர—வருவாய் பெருகி இருக்கிறது. Sales Tax அதிகமாகியிருக்கிறது. இவற்றிலே எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால், excise duty-யிலே மட்டும் box-கள் பன்னிரெண்டு இலட்சத்திலிருந்து பதினெட்டு இலட்சம் box-கள் விற்பனையானதற்குப் பிறகு excise duty குறைந்திருக்கிறதே, அதற்கு சரியான கணக்கு தாருங்கள் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கு சரியான விளக்கத்தை, உண்மையாக இருக்கின்ற விளக்கத்தை அளித்தேன். இதில் எந்தவிதமான குறைபாடும் இல்லை. டாஸ்மாக் நிறுவனம் சில்லறை விற்பனையை அரசு எடுத்துக்கொண்டதற்குப் பின்னால், ஆயத்தீர்வை வருவாய்

கூடியிருக்கிறது. விற்பனை வரி கூடியிருக்கிறது. ஒட்டுமொத்த அரசினுடைய வருவாயும் கூடியிருக்கிறது என்பதை நான் இங்கு திரும்ப மாண்புமிகு உறுப்பினருக்கு பதிலாகச் சொல்லி, எங்கள் மடியில் கனம் இல்லை. ஆகவே, எங்களுக்கு வழியில் பயம் இல்லை என்பதனையும் நான் இங்கு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கள்ளச்சாராயம் காய்ச்சுவதையே தொழிலாகக்கொண்டு, பின்பு திருந்தி வாழ விரும்பும் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்தம் வாழ்வில் ஒளி ஏற்றிட மாண்புமிகு அம்மா அவர்கள் 3.73 கோடி ரூபாய் அனுமதித்து, அவர்கள் திருந்தி வாழ்வதற்கு உண்டான வழிவகைகளையும் ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுவரை மறுவாழ்வு நிதி மூலம் 3,043 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ளனர். அவற்றில் பெரும்பாலும் கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்துதல், அண்டை மாநிலங்களிலிருந்து போலி மதுபானம் மற்றும் கள்ளச்சாராயம் கடத்துதலைத் தடுத்தல், கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களுக்கு அருகிலுள்ள மதுபானக் கடைகளை மூடுதல், டாஸ்மாக் சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு ஊதியம் அதிகரித்தல், கிராமப்புறத்தில் மதுபானக் கடைகளை மூடுதல் போன்றவற்றை முன்மொழிந்துள்ளனர்.

கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களை முழுமையாக ஒழிப்பதில் இந்த அரசு தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில், ஏப்ரல் 2004 முதல் பிப்ரவரி 2005 வரை காவல் துறையும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தியுள்ளன. உதாரணமாக, 561 முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகள், தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 77.95 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டது. கர்நாடகா மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்திவரப்பட்ட 3.26 இலட்சம் சாராயப் பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டன. 2.98 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவி கைப்பற்றப்பட்டது. 321 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட 4,379 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. 58.84 இலட்சம் லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. 5,338 கள்ளச் சாராயம்



வடித்தல் குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1.52 இலட்சம் கள்ளச் சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1.43 இலட்சம் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

முற்பகல் 10-35

கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி வழியாக கடத்திவரப்பட்ட போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத 45,566 லிட்டர் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கைப்பற்றப்பட்டது. இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கடத்தல் குற்றத்தில் 1,874 குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 3.05 இலட்சம் லிட்டர் அளவுள்ள 'கள்' கைப்பற்றப்பட்டது. 1.4 இலட்சம் லிட்டர் மதுக்கஷாயம் கைப்பற்றப்பட்டது. கள்ளச் சாராய வழக்குகளில் இணக்கக் கட்டணம் வசூலித்த வகையிலும், நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதத் தொகை மூலமும் அரசுக்கு 2.64 கோடி ரூபாய் வருவாயாக கிடைக்கப்பெற்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றுக்கு அருகில், விதிகளை மீறி எந்த மதுபானக் கடைகளும் இல்லை. இருப்பினும், சில்லறை விற்பனையை அரசு நிறுவனமே நடத்துவதால் சட்ட விதிகளை மட்டும் பாராமல் பொதுமக்களின் உணர்வுகளுக்கும் மரியாதை அளிக்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 20 ஆண்டு காலமாக சில்லறை விற்பனையை தனியார் நடத்திய சில இடங்களில் எந்தத் தரப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இருப்பினும், டாஸ்மாக் சில்லறை விற்பனையை விதிமுறைகளுக்குட்பட்டு நடத்தினாலும், அதே இடங்களில் தொடர்ந்து நடத்திட எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்களின் உணர்வுகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் தமிழகத்தில் பிப்ரவரி 2005 வரை 1,203 கடைகள் அவ்வாறு மறு கடைகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிராமப்புறத்திலுள்ள மதுக் கடைகளை மூட வேண்டிய அவசியம் குறித்து சில உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். தற்போது கிராமப்புறங்களில் 3,704 கடைகள் உள்ளன. கள்ளச் சாராயம் ஏற்கெனவே அதிகமாக உள்ள 3,894 கிராமங்களை கரும்புள்ளி கிராமங்களாக காவல் துறை அறிவித்துள்ளது. தற்போது கிராமங்களில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகள்

மூடப்பட்டால், அந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் கள்ளச் சாராயம் பெருகி, அருகிலுள்ள கிராமங்களுக்கும் பரவும் நிலை ஏற்பட்டு, ஏழையெளிய மக்களின் வாழ்வில் பல இடர்பாடுகளை ஏற்படுத்தும். எனவே, தற்போதைய நிலை தொடர்வதே சரியானது எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாஸ்மாக்கில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இராசேந்திரன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். சில்லறை விற்பனையை டாஸ்மாக் ஆரம்பித்தவுடன், பகுதிநேர தற்காலிக ஒப்பந்த விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் 1,000 ரூபாயும், மேற்பார்வையாளர்களுக்கு 2,000 ரூபாயும் தொகுப்பு ஊதியமாக வழங்கப்பட்டது. பணியாளர்களிடமிருந்து எந்தவித கோரிக்கையும் பெறாமலேயே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் 1-1-2004 முதல், அதாவது அவர்கள் பணியில் சேர்ந்த ஒரு மாதத்திலேயே அவர்கள் எதிர்பாராத வகையில் விற்பனையாளர்களுக்கு 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும், மேற்பார்வையாளர்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும் தொகுப்பு ஊதியத்தை உயர்த்தி வழங்கி ஆணையிட்டார்கள். அவர்கள் ஒப்பந்த அடிப்படையில், தற்காலிக பகுதிநேர ஊழியர்களாக பணிபுரிபவர்கள் என்பதால் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட சட்ட விதிகளே பொருந்துமெனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ள ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய வினாக்களுக்கும் பதில் அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தாலும், காலத்தின் அருமை கருதி பெரும்பாலான வெட்டுத் தீர்மானங்களுக்கு பதில் அளித்துள்ளேன். இந்தப் பதிலுரை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மனநிறைவை அளிக்குமென்று கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையினுடைய என்னுடைய பதிலை இங்கு நான் அளிக்க விரும்புகின்றேன். 140 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் பதிவுத் துறை, தொன்மையான துறைகளில் ஒன்றாகும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு கூடிய வழிகாட்டுதலால், இத்துறை தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது. இத் துறை வருவாய் ஈட்டித் தருவதில் வணிக வரி, மதுவிலக்கு மற்றும்



ஆயத்தீர்வைத் துறைகளுக்கு அடுத்து மூன்றாவது பெரிய துறையாக விளங்குகின்றது. பொதுமக்கள் நலனுக்காகவே அல்லும் பகலும் அயராது உழைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கிரய ஆவணங்கள் போன்ற ஆவணங்களுக்கு விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை கணிசமாகக் குறைப்பட்டதால், இத்துறை கடந்த 2003-2004 ஆம் நிதியாண்டில் 15.90 இலட்சம் ஆவணங்களைப் பதிவுசெய்து 1,732.91 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது என்பதைப் பெருமையுடன் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். இந்த வருவாய், அதற்கு முந்தைய 2002-2003 ஆம் ஆண்டு வருவாயைவிட 5.10 சதவிகிதம் அதிகமாகும். நடப்பாண்டில் அதாவது 2004-2005, பிப்ரவரி 2005 வரை 1,626.24 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலகட்ட வருவாயான 1,506.81 கோடி ரூபாயைவிட 7.92 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

முற்பகல் 10-40

## நிர்வாக அமைப்பு

பதிவுத் துறைத் தலைவர் தலைமையின்கீழ் செயல்படும் இத் துறையில், 9 மண்டலங்களும், 50 பதிவு மாவட்டங்களும், 558 சார் பதிவாளர் அலுவலகங்களும் உள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களையும் 100 சதவிகிதம் துறைத் தணிக்கை செய்யும்பொருட்டு 45 தணிக்கைக் குழுக்கள் ஒவ்வொன்றும், ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையில் இயங்கி வருகின்றன. ஆவணங்களைப் பதிவுசெய்வது மட்டுமின்றி, திருமணப் பதிவுகள், சங்கம் மற்றும் சீட்டுப் பதிவுசெய்தல், கூட்டாண்மை நிறுவனங்களில் உதவி ஆகிய பணிகளையும் இத்துறை பொதுமக்களுக்கு ஆற்றி வருகிறது.

## சமாதானத் திட்டம் 2004

வழிகாட்டி மதிப்பைவிட குறைவான மதிப்பில் ஆவணங்களைப் பதிவுசெய்த பொதுமக்கள் பலர், முந்தைய ஆட்சியில் நீண்ட நாட்களாக ஆவணங்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படாமல் நிலுவையில் இருந்ததால், பெரிதும் அல்லல் உற்றனர். பொதுமக்களின் நலனில் எப்போதுமே அக்கறை கொண்ட நமது மாண்புமிகு அம்மா அவர்கள், சமாதானத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை 2002 ஆம் ஆண்டிலும், அதேபோல 2004 ஆம் ஆண்டிலும் அறிமுகப்படுத்தி ஆணையிட்டார்கள். இதன் அடிப்படையில் தற்போது நிலுவையாக உள்ள 51,434 ஆவணங்களில்,

11-3-2005 வரை 17,222 ஆவணங்கள் தீர்வு செய்யப்பட்டு 43.75 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், பொதுமக்கள் பெருமளவில் முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதால் பளு அதிகம் உள்ளது என்பதை உணர்ந்து அவர்களின் நலன் கருதி கிரய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையை, 13 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைத்து ஆணையிட்டார்கள். இதன்மூலம் பொதுமக்களுக்கு 638.71 கோடி ரூபாய் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முத்திரைத் தீர்வை குறைக்கப்பட்டதனால், அரசு வருவாய் எவ்வகையிலும் குறையவில்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அடமானம், ஒப்படைப்புடன் கூடிய அடமானம், உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு, குத்தகை போன்ற ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையையும் குறைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், குடும்ப உறுப்பினர்களிடையே சொத்து பரிமாற்ற ஆவணங்களான பாகப் பிரிவினை, விடுதலை, ஏற்பாடு, கூட்டுப் பங்காண்மை கலைப்பு போன்றவற்றின் மீதான முத்திரைத் தீர்வையை 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். கடன்கள் மீதான உரிமை மாற்ற ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையை 6 சதவீதத்திலிருந்து 0.1 சதவிகிதமாகவும், பதிவுக் கட்டணத்தை 1 சதவீதத்திலிருந்து 0.1 சதவிகிதமாகக் குறைத்தும், உயர்ந்தபட்சக் கட்டணமாக முத்திரைத் தீர்வைக்கு 1 இலட்சம் ரூபாய் எனவும், பதிவுக் கட்டணத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் எனவும் நிர்ணயித்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள்.

## போலி முத்திரைத்தாள்கள் புழக்கம் தடுத்தல்

பதிவுத் துறையில் போலி முத்திரைத்தாள்கள் புழக்கத்தை முழுமையாகத் தடுத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதனை நான் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். போலி முத்திரைத்தாள் புழக்கம் தொடர்பாக, இம்மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணையில் இருந்து 19 வழக்குகளை, மத்திய அரசு குற்றப் புலனாய்வுத் துறையின் C.B.I. விசாரணைக்கு உட்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள்



ஆணையிட்டார்கள். முத்திரைத்தாளின் உண்மைத் தன்மையினை அறிந்திட அனைத்து சார் பதிவகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன. ஆவணங்களை வெள்ளைத் தாளில் எழுதி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை, பணமாக அல்லது கருவூல செலுத்துச் சீட்டு பதிவு அலுவலர் பெயருக்கு வரைவோலை மூலமாகச் செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுமக்கள் அறிந்திட அரசு விளம்பரமும் செய்துள்ளது. முத்திரைத் தீர்வையைச் செலுத்த ஒரு மாற்று வழி ஏற்படுத்த பரிசீலிக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு ஆவணப் பதிவிற்குத் தேவைப்படும் முத்திரைத் தாள்களின் முக மதிப்பு 100 ரூபாய்க்குள் வரையறுக்கப்பட, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. எஞ்சிய தொகையை வங்கிகளில் செலுத்திடவும், வழிவகை செய்யப்பட உள்ளது. சார்பதிவகங்கள் வழி முத்திரைத்தாள்கள் விற்பதை ஊக்குவிப்பதற்காக அவர்களிடம் இருக்கக்கூடிய முத்திரைத்தாள் இருப்பு உச்சவரம்பை 50 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, மாண்புமிகு அம்மா அவர்கள் 1.50 இலட்சம் ரூபாயாக 1-3-2003 முதல் உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள்.

## முத்திரைத்தாள் விற்பனையாளர் கணக்குகளைச் சரிபார்த்தல்

முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகள், மாவட்ட பதிவாளர்களால் காலமுறை திடீர் ஆய்வுகள் செய்யப்படுகின்றன. இதன் விளைவாக முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகளில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 2003 முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இதுவரை 46 வழக்குகள் மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன. யார் தவறு செய்தாலும் அதைத் தடுத்து நிறுத்தி, நிர்வாகத்தில் தூய்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நோக்கத்தின்படி செயல்படும் இவ்வரசு, போலி முத்திரைத்தாள்களை விற்பவர்கள் மற்றும் புழக்கத்தில் விடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க உறுதிபூண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்பச் செயல்பாடுகள். மக்களுக்குத் தேவையான ஆவணங்கள் காலதாமதமின்றி துரிதமாகக் கிடைப்பதற்கு ஏதுவாக பதிவுத் துறை முழுமையாக கணினிமயமாக்கப்படுவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய கொள்கையாகும். இதனைச் செயல்படுத்தும்முகத்தான், பதிவுத் துறையில்

350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை, தகவல் தொழில்நுட்ப வசதியுடன் விரைவாகப் பரிசீலித்திட, பதிவுத் துறையின் Star திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு வழியான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக பதிவுத் துறை தனது சேவைத் தரத்தை பல மடங்கு மேம்படுத்தியுள்ளது. இதனால் சார்பதிவகங்களில் ஆவணப் பதிவை, ஒரு மணி நேரத்திற்குள் முடித்திடவும், வில்லங்கச் சான்றுகளை 5 மணித்துளிகளில் பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. ஏனைய சேவைகளும், சில மணித்துளிகளில் முடித்திட ஏதுவாக, துறைப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

REGINET என்பது பதிவு அலுவலகங்களை இணைக்கும் தனிப்பட்ட ஒரு வலைப் பின்னல் (Net Work) ஆகும். இந்த இணைப்பின் பலனால் எந்த ஒரு அலுவலகத்தின் தகவலும் பிற அலுவலகங்களில் பார்க்கப்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே, சான்றிட்ட நகல்கள், திருமணச் சான்றின் வடிப்பு மற்றும் சங்கம் சீட்டு சம்பந்தப்பட்ட விவரங்களையும் வீட்டிலேயே பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மீதமிருக்கும் 258 அலுவலகங்களையும் கணினிமயமாக்கல் மற்றும் சொத்துரிமை பெயர் மாற்றங்கள், வருவாய்ப் பதிவேடுகளில் உடனுக்குடன் செய்ய ஏதுவாக, மாநிலம் முழுவதும் இணைப்பு வசதி ஏற்படுத்துதல் ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வழிகாட்டு மதிப்புகளில் உள்ள முரண்பாடுகள் களையப்பட்டு விரைவில் சீரமைக்கப்படும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2000-2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பதிவுத் துறையின் ஆண்டு வருவாய் 1,094.14 கோடி ரூபாயாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு பதிவுத் துறை மிகப் பெரிய மறுமலர்ச்சி பெற்று, 2001-2002 ஆம் ஆண்டில் 1,264.20 கோடி ரூபாய், 2002-2003 ஆம் ஆண்டில் அது 1,648.86 கோடி ரூபாய், 2003-2004 ஆம் ஆண்டில் அது உயர்ந்து 1,732.91 கோடி ரூபாய், 2004-2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 வரை (மேசையைத் தட்டும் ஒலி) 1,626.24 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டு சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1996 முதல் 2001 வரை மொத்த வருவாய், அதாவது 5 ஆண்டுகளில் 4,522.99 கோடி ரூபாயாகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைகளையும்,



ஆலோசனைகளையும் பெற்று, இத்துறை 2001 மே மாதம் முதல் 2005 பிப்ரவரி மாதம் வரை, அதாவது 4 ஆண்டுகளில் மட்டுமே 6,272.21 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய் ஈட்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதல் பெற்று இங்கு முத்திரைத்தாளில் மாண்புமிகு உறுப்பினர் இலட்சுமணன் அவர்கள் கேட்டதற்கு இங்கே பதிலாக மாண்புமிகு அம்மா அவர்கள் கூறச் சொல்லியிருக்கின்றார்கள். தற்போது அமலில் இருக்கும் சமாதானத் திட்டத்தை 30-4-2005 வரை நீட்டிக்கவும், 30-11-2004 அன்று நிலுவையாக இருந்த ஆவணங்கள் என்பதை மாற்றி இந்தச் சலுகை அறிவிக்கை செய்த 28-12-2004 அன்று பதிவு செய்யப்பட்டு, மதிப்பினை நிர்ணயிப்பதற்காக தனித் துணை ஆட்சியர் (முத்திரை)-யிடம் அல்லது தனித் துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு அனுப்ப வேண்டி சார் பதிவாளர்களிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த சமாதானத் திட்டத்தினுடைய கால நீட்டிப்பை 30-04-2005 வரை நீட்டித்து ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கான என்னுடைய பதில்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்கள் முதன்முதலில் நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, அனைத்து அரசு அச்சுப் பணிகளும், பலரும் பாராட்டும் வகையில் அரசு நிர்ணயம் செய்யும் காலக்கெடுவிற்குள் நல்ல தரத்துடன் சீரிய முறையில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியும், அரசின் முக்கியமான ஆவணங்கள் மற்றும் கமுக்கத் தன்மை வாய்ந்த ஆவணங்களின் இரகசியங்கள் காப்பாற்றப்பட்டு, இத்துறை 174 வருடங்களாக தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் அச்சுப் பணிகளைச் செயலாக்கும் அரசு அச்சகங்களின், பணியின் தரத்தினை மேம்படுத்திட மாண்புமிகு அம்மா

அவர்களின் சீரிய ஆலோசனையின்படி, அரசு மைய அச்சகத்தில் முதன் முறையாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல வண்ணங்களில் அச்சிடும் இரண்டு அதிவேக 6 unit web offset இயந்திரங்கள் 1992 ஆம் ஆண்டிலேயே அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டன.

நவீனமயமாக்குவதின் தொடர்ச்சியாக 2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி அரசு மைய அச்சகத்தில் முதன் முறையாக ஒரே நேரத்தில் இரண்டு வண்ணங்களில் அச்சிடும் நவீன இயந்திரத்தினை நிறுவிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்தார்கள்.

அரசு அலுவலகங்களுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் அவசியம் என்பதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையிலுள்ள அனைத்து கிளை அச்சகங்களுக்கும் முதன் முறையாக 2005 ஆம் ஆண்டில் fax வசதி ஏற்படுத்தித் தந்தார்கள்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் இயங்கும் அரசு மைய அச்சகம், சென்னை மற்றும் கிளை அச்சகங்களில் 84 அரசுத் துறைகளின் 1,384 கேட்பு அலுவலகங்களுக்கு 2,675 வகையான 38 கோடி நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

2004-2005 ஆம் ஆண்டில் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள அச்சுப் பணிகள், செயலாக்கம் செய்யப்பட்டுள்ளன.

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு சம்பந்தப்பட்ட பல்வேறு உரைகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

2004-2005 ஆம் ஆண்டு அரசுத் தேர்வுத் துறைக்கான 10 ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கான பொதுத் தேர்வு விடைத் தாட்கள் 4 கோடி பிரதிகள் அச்சிட்டு வழங்கப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டமான புதிய குடும்ப அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் 39 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் சிறந்த முறையில் விரைந்து செயலாக்கம் செய்யப்பட்டு, தரத்துடன் அச்சிட்டு வழங்கப்பட்டன.

பொது மக்களின் பயன்பாட்டிற்கென 2005 ஆம் ஆண்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைக்கான உள் தாள்கள் 1.53 கோடி பிரதிகளும், 2006 ஆம் ஆண்டுக்கான புதிய குடும்ப அட்டை



விண்ணப்பப் படிவம் 1.78 கோடி பிரதிகளும், ஒப்புதல் படிவங்களும் தரமான காகிதத்தில் மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

மாநிலக் கணக்காய்வுத் துறைக்கான அறிக்கைகள், ஓய்வூதியதாரர்களுக்கான விவரங்களைப் பராமரிக்கும் பதிவேடு போன்றவை 15.55 இலட்சம் ரூபாய் மதிப்பில் அச்சிட்டு வழங்கப்பட்டன.

பொது மக்களுக்குத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ்கள், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், பத்திரப் பதிவு நகல் படிவம், வாகனப் பதிவுச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் மற்றும் 13 வகையான வாகனப் போக்குவரத்து வரி வில்லைகளும் மற்றும் தமிழ்நாடு அரசிதழில் பெயர் மாற்றம், மத மாற்றம் போன்ற அறிவிக்கைகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

சட்டத் துறையின் புத்தகங்கள், இந்திய அரசின் தமிழாக்கச் சட்டப் புத்தகங்கள், சீருடைப் பணியாளர் தேர்வுக்கான விடைத் தாட்கள், அழைப்புக் கடிதம், தகுதி நீக்கச் சீட்டு போன்றவை 1.13 கோடி பிரதிகள் அச்சிட்டு வழங்கப்பட்டன.

தேர்தல் துறைக்கான சுவரொட்டிகள், கையேடுகள், தேர்தல் சின்னங்களின் புத்தகம் மற்றும் வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் போன்ற 9.56 கோடி பிரதிகள் அச்சிட்டு வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விடைத் தாட்கள் தேவைக்கேற்ப அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான உள் நோயாளி மற்றும் புற நோயாளிகளுக்கான அனுமதிச் சீட்டு, மருந்துச் சீட்டு, X-Ray cover, பரிசோதனைச் சீட்டுகள் மற்றும் பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

முற்பகல் 10-55

உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், தினந்தோறும் உரிய நேரத்திற்குள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் தேவையான தரமான கார்பன் தாட்கள், ஸ்டென்சில் பேப்பர், மைகுழல், வெள்ளைத் தாட்கள், படிப்பெருக்கித் தாட்கள், கோப்பு அட்டைகள் போன்ற எழுதுபொருட்களும், தட்டச்சுப்

பொறிகள், படிப்பெருக்கி இயந்திரங்கள் போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, துறைகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன. பொதுத் தேர்தல் காலத்தில் அனைத்து வாக்குச் சாவடிகளுக்குத் தேவையான பொருட்கள் இத்துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, உரிய காலத்திற்குள் வழங்கப்படுகின்றன. இவ்வாறாக மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆட்சியில், அரசுப் பணிகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சிறப்பாகவும், நேர்த்தியாகவும், தரமானதாகவும் அச்சிட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதல் பெற்று துறைவாரியாக புதிய அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வருவாய்த் துறை:**—மணமேல்குடி, எடப்பாடி, எட்டையபுரம் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட ரூ.138 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நவீன முறையில் நில அளவை செய்வதற்கு ஏதுவாக, ஒட்டுமொத்த பணி நிலைய சாதனங்கள் (Total Stations) வாங்கி இரண்டு மாவட்டங்களுக்கு வழங்கிட ரூ.24 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள கணினிகளை நிலை உயர்த்த, ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வருவாய்த் துறை நூலகங்களை மேம்படுத்த ரூ.28.57 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பழைய கார்களுக்குப் பதிலாக முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டிற்காக குளிர்சாதன வசதி கொண்ட 22 புதிய கார்களையும் மற்றும் 4 ஜீப்புகளும் வாங்கி வழங்க, ரூ.105.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தலைமைச் செயலக வருவாய்த் துறையில் கணினிகள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.14.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு இரும்பு அலமாரிகள் வாங்குவதற்காக ரூ.2 இலட்சமும், கணினி அறையில் தடுப்பு வசதி மற்றும் குளிர்சாதன வசதி செய்து கொடுக்க ரூ.1 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நில நிர்வாக ஆணையருக்குப் புதிய மடிக்கணினி (Laptop Computer) வாங்க ரூ.1 இலட்சமும், புதிய ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.1 இலட்சமும், ஐந்து கணினிகள் மற்றும் ஸ்கேனர்கள் வாங்க ரூ.2 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.4 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் திட்ட சிறப்பு ஆணையர் அலுவலகத்திற்கு நான்கு கணினிகள் வாங்க ரூ.2.20 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய புதிய அறிவிப்புகள்**

மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு அச்சகப் பணியாளர்களின் கோரிக்கையினை பரிவுடன் ஆய்வு செய்து சொந்த அலுவல்களுக்கான ஈட்டா விடுப்பினை (Leave on Private Affairs) 1,897 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் அனுமதிக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மைய அச்சகத்திற்குக் கூடுதல் நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்து நிறுவ, ரூ.55.51 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

அரசு கிளை அச்சகம், மதுரைக்கு வழக்குப் பட்டியல் மற்றும் அச்சிடும் நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவிட ரூ.44.59 இலட்சம் வழங்கி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசு மைய அச்சகத்திலிருந்த இரண்டு வேன்கள், ஒரு லாரி போன்ற ஊர்திகள் கழித்து ஒதுக்கப்பட்டுவிட்டதால், அரசு அச்சுப் பணியின் பாதுகாப்புத் தன்மையைக் கருதி இரண்டு புதிய வேன்கள் ரூ.10 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 மார்ச் 24

அரசு எழுதுபொருள் கிடங்கில் ரூ.10 கோடி மதிப்புள்ள எழுது பொருட்கள் தினசரி இருப்பில் வைக்கப்படும். இந்தக் கிடங்கு 150 ஆண்டு பழமை வாய்ந்த கட்டடமாகும். அக்கட்டடத்தின் கதவு, ஜன்னல், கம்பி வலை, மின் இணைப்பு ஆகியவற்றின் பழுதினைச் சரிசெய்து எழுதுபொருட்களைச் சரியான முறையில் பாதுகாத்து வழங்கிட ரூ.12 இலட்சம் நிதி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்கென மனமகிழ் மன்றங்களைத் துவக்கவும், அம்மன்றங்களில் உள்ளரங்க விளையாட்டுச் சாதனங்கள் கொள்முதல் செய்ய ரூ.25,000 மற்றும் தொழிலாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கிட ரூ.20,000, ஆக மொத்தம் ரூ. 45,000 ஆண்டுதோறும் வழங்கிட தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அரசு அச்சகங்களில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தற்போது ரொட்டி மற்றும் தேநீர்ப் படி பிரதி மாதம் 100 ரூபாய் மற்றும் ஈய அச்சு எழுத்துக்கள் வார்க்கும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் பால் படியாக நாளொன்றுக்கு 2 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப ரொட்டி மற்றும் தேநீர்ப் படியினை உயர்த்தி பிரதி மாதம் 150 ரூபாய் ஆகவும் மற்றும் ஈய அச்சு எழுத்துக்கள் வார்க்கும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சத்துள்ள மாத்திரை மற்றும் பால் படியினை நாளொன்றுக்கு 5 ரூபாய் வீதமாகவும், 2,210 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை ஆவணத்திற்கு முத்திரைத் தீர்வை செலுத்திட புதிய நடைமுறை. ஆவணத்திற்குத் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை முத்திரைத்தாளாக அல்லாமல் பணமாக அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் செலுத்திடவும், இவ்வாறு வங்கிகளில் செலுத்தப்படும் முத்திரைத்



2005 மார்ச் 24] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தீர்வையை மின்பதிவேடுவழி நிர்வகிக்கப்படவும் அதற்குத் தேவையான ஒரு மையத் தகவல் தொகுப்பு அமைப்பை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சார்பதிவகங்களை கணினிமயமாக்கல்: இதுவரை கணினிமயமாக்கப்படாத சார்பதிவகங்களில், 150 சார்பதிவாளர் அலுவலகங்களை ஆண்டு ஒன்றுக்கு 4.22 கோடி ரூபாயில் கணினிமயமாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தகவல் தொகுப்பு மையம்: சென்னை, பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு தகவல் மையத்தை அமைத்திடவும் மாநிலத்தில் பிறிதொரு இடத்தில் அவசர காலத்திற்குத் தகவல்களை எடுக்க ஒரு கூடுதல் மையமும் 5 கோடி ரூபாய் அளவில் ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் சார்பதிவகங்களுக்கு அரசு கட்டடம் கட்டுதல். இந்த ஆண்டு 10 சார்பதிவகங்களுக்கு 1.50 கோடி ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கணினிமயமாக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் சேவையின் தரத்தை மேம்படுத்துதல். ஐந்து சார்பதிவகங்களில் தொடுதிரை கணினி ரூபாய் 10 இலட்சம் அளவில் இவ்வாண்டு அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**பத்திரப் பதிவு:**—பதிவுத் துறை வழங்கும் சான்றுகளில் பாதுகாப்பு வில்லை ஒட்டுதல். அசையாச் சொத்துக்கள் குறித்து ஆவணப் பதிவு, திருமணப் பதிவு, சங்கப் பதிவு, சீட்டுப் பதிவு, கூட்டு நிறுவனப் பதிவு மற்றும் பதிவுற்ற பிறப்பு, இறப்பு, திருமணத் தகவல் ஆகியவற்றை இத் துறை வழங்கி வருகிறது. இத்துறையால் அளிக்கப்படும் சான்றுகளின் மெய்த் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், துறையால் அளிக்கப்படும் சான்றுகள் பதிப்புகளில் ஆண்டு ஒன்றுக்கு 2.5 இலட்சம் ரூபாயில் ஒரு சிறப்புப் பாதுகாப்பு ஒட்டு வில்லை Hologram பொருத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் இருப்பிடமாய், ஆற்றலின் இருப்பிடமாய், துணிவின் இருப்பிடமாய்த் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒட்டுமொத்தத்

தமிழகம் உயர்ந்து, வளம்பெற ஓய்வின்றி பாடுபட்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களையும், அதனால் மக்கள் அடையும் சிறப்பான பயன்களையும் கண்டு, இந்த நாடே அவர்களைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த உலகமே அவர்களை வியந்து பாராட்டி விருதுகளையும், பதக்கங்களையும் வழங்கிக் கொண்டு இருக்கின்றது. தமிழகத்தின் மேம்பாட்டிற்காக, சிந்தித்துச் செயல்படுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் இணையற்ற வழி காட்டுதலில், தமிழகம் வளர்ச்சியின் புதுப்புது பரிமாணங்களைச் சந்தித்து வருகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக ஏனைய மாநிலங்களுக்கு எல்லாம் ஒரு முன்மாதிரியாக அம்மா அவர்கள் தமிழகத்தை உயர்த்தி உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் கடலோரப் பகுதிகளைச் சுருட்டி அடித்த சுனாமியால் பாதிக்கப்பட்ட பல நாடுகள் இன்னும் தங்களது அடிப்படை கடமைகளை நிறைவேற்றித்தர இயலாமல் அலைமோதிக் கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலோ மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனைப்படியும், வழிகாட்டுதலின்படியும், தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், நிரந்தர நிவாரணப் பணிகள் குறித்து இலங்கை அரசு நேரில் கேட்டுப்பெற்று, தனது நாட்டில் அதன்படியே செயல்பட முனைகிறது என்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்கபூர்வமான சிந்தனைக்கும், செயல் ஆற்றலுக்கும் இதைவிட வேறு எடுத்துக்காட்டு எதுவும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தச் சீரிய வழிகாட்டுதலின்படிதான் இந்த அரசின் ஒவ்வொரு செயலும் ஆக்கம் பெறுகிறது, ஒவ்வொரு துறையும் முதன்மைத் துறையாக உருவாகி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் கோரியவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கெடுப்பிற்கு முன்பாக பேசுவதற்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், கொஞ்சம் உட்காருங்கள்.

## 6. விதி 110-ன்கீழ் அறிக்கை

### (அ) மாணவருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல் மற்றும் பெற்றோரை இழந்த மாணவருக்கு வைப்பு நிதி வழங்குதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் இரண்டினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தை தலைசிறந்த மாநிலமாக, முன்னணி மாநிலமாகத் திகழச் செய்வதில் அம்மாநிலத்தில் உள்ள மனிதவள ஆற்றல் மாபெரும் பங்கு வகிக்கிறது. இத்தகைய மனிதவள ஆற்றலை மேம்படுத்துவதில் கல்வியின் பங்கு மிக மிக இன்றியமையாததாகும். எனவேதான் எனது அரசு கல்வித் துறையின்பால் தனி அக்கறையும், அதீத கவனமும்கொண்டு அத் துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்விக்கு மட்டும் 4,348.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதே இதனைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டும். 2001 ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 4 ஆண்டுகளில் கல்வித் துறையில் பல்வேறு சிறப்பானத் திட்டங்கள் தீட்டப்பட்டு, அத்திட்டங்கள் யாவும் மிகச் செம்மையுடன் நிறைவேற்றப்பட்டு, நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப் பள்ளி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்போன்றே அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியும் தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் இடைநிற்றல் வீதம் 16 விழுக்காடாக இருந்தது. பள்ளிக் கல்விக்காக பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றியதன் காரணமாக 2004-2005 ஆம் ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் கல்வித் திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதில் ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழ்நாடு திகழ்கிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது. உலக வங்கி, ஐரோப்பிய கூட்டமைப்பு மற்றும் மைய அரசின் பிரதிநிதிகள் அடங்கிய அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கூட்டு ஆய்வுக் குழு சமீபத்தில் தமிழ்நாட்டில் 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' செயலாக்கப்படுவதைப் பாராட்டியதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதியை ஏற்படுத்தித் தருவதிலும், அனைத்து வயதுக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும், தமிழ்நாடு தொடர்ந்து சீரான முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் திட்டச் செயல்பாடுகளின் வேகம் மற்றும் தரம் நன்றாக உள்ளது. எனவே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோளை இம்மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே அடைந்துவிடும் என்று அந்த ஆய்வுக் குழு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

19-3-2005 அன்று சென்னையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் ஆய்வுக் கூட்டத்தை நடத்திய மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் தமிழக அரசின் சிறப்பான செயல்பாட்டை வெகுவாகப் பாராட்டி உள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு பள்ளிக் கல்வியை அளிப்பது என்பது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அகில இந்திய அளவிலான குறிக்கோள் ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு வகுத்துள்ள இந்த இலக்குக்கு முன்னதாகவே இக்குறிக்கோளை நாம் அடைந்துவிடுவோம் என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10 ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.



முற்பகல் 11-10

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ, மாணவியர் இடையில் நிறுத்திவிடாமல், தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில், தற்போது அவர்களுக்குப் இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தற்போது 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவசமாகப் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் 8.5 இலட்சம் மாணவ மாணவியருக்கு 46.45 கோடி ரூபாய் செலவில் இலவசப் பாட நூல்களை ஆண்டுதோறும் அரசு வழங்கி வருகிறது. இந்நிலையில் பள்ளிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தொடர்ந்து கல்வி பயில உற்சாகம் அளித்து, அவர்களது பெற்றோருடைய கல்விச் செலவின் பளுவைக் குறைத்து தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10 ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி இலவசப் பாட நூல்கள் வழங்கப்படுவதை மாற்றி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாட நூல்கள் வழங்குவது என்று நான் முடிவெடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 1 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் தேவையான பாட நூல்கள் அனைத்தும் இலவசமாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் இத்திட்டம் வரும் கல்வியாண்டு முதலே அதாவது 2005-2006 ஆம் ஆண்டிலிருந்தே செயல்படுத்தப்படும். தற்போது விரிவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்மூலம் 6 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் 12 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதற்காக ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதல் செலவாகும். இதன்மூலம், வரும் கல்வியாண்டில் இலவசப் பாட நூல்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியரின் மொத்த

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 24

எண்ணிக்கை 97 இலட்சமாக உயரும் என்பதையும், இதற்காக எனது அரசு மொத்தம் 61.45 கோடி ரூபாய் செலவிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய், விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவ்வாறான சூழ்நிலைகளில் அத்தகைய குழந்தைகள் தங்களது கல்வியை இடையில் நிறுத்திவிடாமல் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் அவர்களது கல்விப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இந்தப் புதிய திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் நிதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்றுவரும் 1 கோடியே 12 இலட்சம் மாணவ, மாணவியரில் ஒருவர்கூட எந்தக் காரணத்தாலும் தங்களது கல்வியை இடையில் நிறுத்திவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தோடும், எதிர்பாராமல் அவர்களது குடும்பத்தில் ஏற்படும் இழப்பால் அந்தக் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற மனித நேயத்தோடும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் விழைந்துள்ளேன்.

தமிழகத்தின் மனித வள ஆற்றலை மேம்படுத்தும் வகையில், அனைத்துக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்கப்படுவதை வெற்றிகரமாக நிறைவேற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எனது அரசு உறுதிபூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 மார்ச் 24]

முற்பகல் 11-15

## (ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு புதிய குடியிருப்புகள் கட்டித் தருதல் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-12-2004 அன்று தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை சுனாமிப் பேரலைகள் பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் மாநிலத்தின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்துவந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், வாழ்வாதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர். எதிர்பாராத இந்த இயற்கை இன்னலின் விளைவாக, 8,000-க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வீடுகளையும். வாழ்நாள் முழுவதும் தாங்கள் சேமித்த பொருட்களையும் இழந்து பெரும் துன்பத்துக்கு உள்ளாயின.

சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் அத்தொழிலைச் சார்ந்துள்ள ஏறத்தாழ மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், மீன் பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு சிறிது காலம் பிடிக்கும் என்கின்ற காரணத்தால், அக்குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்திட தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏப்ரல் 2005 முடிய வழங்கிடவும் நான் ஆணையிட்டேன்.

பாதிப்படைந்த மீனவர்கள் வலை, கட்டுமரம், படகுகள், விசைப் படகுகள் ஆகியவற்றை வாங்குவதற்குத் தேவையான மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு தொழில் செய்வோர், நிலங்கள் பாதிக்கப்பட்டோர், ஆதரவற்றோர், விதவைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் போன்ற ஒவ்வொரு பிரிவினருக்கும் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சுனாமியால் பாதிப்பு அடைந்த குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது. இதுவரை தமிழக அரசு சுனாமி நிவாரணப் பணிகளுக்காக 902 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் வகையில், வீடு இழந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றத்தைத் தாங்கக்கூடிய தரமான நிரந்தர வீடுகள் கட்டித் தரப்பட வேண்டியது அடுத்த கட்டப் பணி ஆகும்.

இவ்வாறு நிரந்தர வீடுகள் கட்டித் தரும் பணியில் தன்னார்வ அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச மறுவாழ்வு அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்று தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று, நிரந்தர வீடுகள் கட்டித் தர பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த அமைப்புகள் மூலம் கட்டித்தரப்பட உள்ள வீடுகளையும், தமிழக அரசால் கட்டப்பட உள்ள வீடுகளையும், ஒழுங்கு அமைப்புடனும், விதிமுறைகளுக்கு உட்பட்டும் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே, இதற்கு ஏதுவாக சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானக் கொள்கை ஒன்றை வகுத்தளிக்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது.

கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் வீடுகள் கட்டப்படும்போது, மைய அரசால் 1991 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கடற்கரையோர கட்டுப்பாட்டு விதிகளை, அதாவது Coastal Regulation Zone notifications-ஐப் பின்பற்றித்தான் வீடுகள் கட்டப்பட வேண்டும். தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை மாவட்டங்கள் பெரும்பாலும் CRZ-2 மற்றும் CRZ-3 ஆகிய வகைப்பாடுகளின்கீழ் வருவன ஆகும்.

நகரங்களைச் சார்ந்த பெருமளவில் கட்டுமான வளர்ச்சி அடைந்த பகுதிகள் CRZ-2-ன்கீழ் வரும். ஏனைய கிராமப் பகுதிகள் CRZ-3-ன்கீழ் வருகின்றன. இவ்விரண்டு பகுதிகளிலும் ஏற்கெனவே, அதாவது 1991 ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்திருந்தால் அவற்றைப் புதுப்பித்துக் கட்டலாம். புதிய கட்டடங்கள் எழுப்புவதற்குக் கூடுதலாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை, கட்டடத்தின் உயரம், காலியாக இருக்க வேண்டிய பகுதி போன்றவை குறித்து சில விதிமுறைகள் உள்ளன. பொதுவாக கடல் உயர்மட்ட அளவிலிருந்து, அதாவது High Tide Line-லிருந்து 200 மீட்டர் வரை உள்ள பகுதி எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படக்கூடாத No Development Zone ஆகும்.

கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள மக்கள் தங்கள் படகுகள் மற்றும் வலைகளை வைத்துக்கொள்வதற்கும்,





தங்களது மீன்பிடித் தொழிலைச் சிரமமின்றி மேற்கொள்வதற்கும் ஏதுவாக கடலுக்கு அருகில் இருக்கவேண்டியது அவசியம் ஆகும். அதேநேரம் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படாத வகையில், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டு அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதும் அவசியம் ஆகும். எனவே, இதற்கேற்ற வகையில் விதிமுறைகளுக்குட்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 1,30,000 குடும்பங்களுக்கு அவரவர் விரும்புகின்ற இடங்களில், புதிய, தரமான இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக்கூடிய கான்கிரீட் வீடுகளைக் கட்டித்தர எனது அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகத் தேவைப்படும் நிலத்தை அரசே இலவசமாக வழங்கும். ஒவ்வொரு வீடும் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 300 முதல் 325 சதுர அடி கட்டடப் பரப்பளவு கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு குடியிருப்பு வளாகமும் முறையாகத் திட்டமிடப்பட்டு, குடிநீர், சாலை வசதி, தெரு விளக்குகள், மழைநீர் சேகரிப்பு, வடிகால்கள், சமுதாயக் கூடம், சத்துணவுக் கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கும்.

முற்பகல் 11-20

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாக தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட குடியிருப்புகள் கட்டித் தரப்படும். ஒவ்வொரு குடியிருப்பும் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 235 முதல் 250 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும். இந்தப் புதிய வீடுகள் கட்டும் மாபெரும் திட்டத்திற்கு ஏறத்தாழ 1,950 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்திற்கு மைய அரசும், உலக வங்கியும் பெருமளவு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகுதி பாதிப்படைந்த காரை வீடுகளைப் பழுதுபார்க்க, சேத மதிப்பீட்டின் அடிப்:படையில் கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கப்படும்:

20 ஆயிரம் ரூபாய் வரை சேத மதிப்பீடு இருந்தால், முழு மானியமாக 20 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும். சேத மதிப்பீடு 20,001 ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரை இருந்தால், குறைந்தபட்சத் தொகையான 20 ஆயிரம் ரூபாய் மற்றும் 20 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு 75 சதவிகிதம் நிதியுதவி வழங்கப்படும். 50 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக சேத மதிப்பீடு இருப்பின், குறைந்தபட்சத் தொகையாக

42,500 ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான சேத மதிப்பீட்டில் 50 சதவிகிதம் நிதியுதவி வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு வீட்டிற்கு 75 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

இம்மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும்போது, கீழ்க்கண்ட பொது விதிமுறைகளைக் கடைப்பிடிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது:

**கடல் உயர்மட்ட அளவு – High Tide Line–லிருந்து 200 மீட்டர் தொலைவுக்குள் உள்ள பகுதி:**

கடற்கரையோர கட்டுப்பாடு விதிமுறைகளின்படி, 200 மீட்டருக்குள் இருந்த சேதமடைந்த வீடுகள் 1991 ஆம் ஆண்டுக்கு முன்பே உரிய அங்கீகாரத்துடன் கட்டப்பட்டிருந்தால் மட்டுமே மீண்டும் பழுதுபார்க்க இயலும். எனவே, முற்றிலும் அல்லது பெரும்பகுதி பாதிப்படைந்துள்ள அனைத்துக் கூரை மற்றும் காரை வீடுகளின் உரிமையாளர்கள் விரும்பினால், 200 மீட்டருக்கு அப்பால், 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய புதிய வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். அவ்வாறு அவர்கள் விரும்பாமல், சேதமடைந்த தங்கள் பழைய வீடுகளையே புதுப்பித்துக்கொள்ள விரும்பினால், அவர்கள் தாங்களே பழுதுபார்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். 200 மீட்டருக்குள் உள்ள பாதிப்படையாத காரை வீடுகளில் உள்ள குடும்பங்களும் பாதுகாப்பு கருதி, அரசு தரும் மாற்று இடத்தில் வீடு பெற விரும்பினால், அவர்களுக்கு அரசு சார்பிலோ, தொண்டு நிறுவனங்கள் சார்பிலோ புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

**200 மீட்டரிலிருந்து 500 மீட்டருக்குள் இருக்கும் பகுதி:**

1. இப்பகுதியில் முழுவதுமோ அன்றி பகுதியாகவோ பாதிப்படைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழுவதும் பாதிப்படைந்துள்ள காரை வீடுகள் புதிதாகக் கட்டப்படும். 500 மீட்டருக்கு அப்பால் வசிக்க விருப்பம் தெரிவிப்பவர்களுக்குப் புதிய வீடுகள் 500 மீட்டருக்கு அப்பால் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்ல விரும்பாதவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களிலேயே வீடுகள் கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்படைந்த காரை வீடுகளில் உள்ளவர்களுக்கு, 500 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை எனில், அவர்களது வீடுகளைப் பழுதுபார்க்க ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு நிதியுதவி அளிக்கப்படும்.



**500 மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி:**

1. முழுவதும் அல்லது பகுதி பாதிப்படைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழு பாதிப்படைந்த காரை வீடுகள் ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய வீடுகள் அந்தந்த இடங்களிலேயே கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்படைந்துள்ள காரை வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு அரசு நிதியுதவி வழங்கும்.

**பொது விதிமுறைகள்:**

1). புதிய வீடுகள் கட்ட அரசு இலவசமாக நிலம் வழங்கும். இவ்வாறு வழங்கப்படும் நிலத்தின் பரப்பு கிராமப் பகுதிகளில் 3 சென்ட் ஆகவும், நகராட்சிப் பகுதிகளில் 1-1/2 சென்ட் ஆகவும் இருக்கும்.

முற்பகல் 11-25

2. புதிய வீடுகள் கட்டித்தர முன்வரும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அப்பணியை மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். இந்நிறுவனங்கள் புதிய வீடுகள் கட்டித் தருவதற்கும் சேதம் அடைந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கும் தங்களது நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

3. வீடுகளின் உரிமையாளர்கள் தாங்களே வீடு கட்டிக்கொள்ள விரும்பினால் அதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அரசு நிர்ணயிக்கும் உச்சவரம்புத் தொகைக்கு உட்பட்டு கட்டடப் பணிகளின் முன்னேற்றத்திற்கேற்ப நிதி உதவி அளிக்கப்படும்.

4. தொண்டு நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவியுடன் வீட்டு உரிமையாளர்கள் ஆகியோரால் வீடுகள் கட்ட முடியாத நிலையில், அரசே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும்.

5. புதிய வீடுகள் வழங்கப்படும் அனைத்து இனங்களிலும் பழைய இடம் மற்றும் வீடு அரசுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

6. புதிய வீடுகள் கட்டித் தருவதால் காலி செய்யப்படும் இடங்கள் தடை ஆணைப் புத்தகத்தில் பதியப்பட்டு பொதுப் பயன்களுக்காக ஒதுக்கி வைக்கப்படும். மேற்கண்ட இடங்களில் படகுகள், வலைகள் போன்றவற்றை வைக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

7. வல்லுநர்களின் உதவியோடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி வரைபடம் மற்றும் விவரக் குறிப்பீடுகளின் அடிப்படையில், அதாவது, Designs and Specifications அடிப்படையில் வீடுகள் கட்டப்பட வேண்டும்.

8. புதிதாக கட்டப்படும் அனைத்து வீடுகளும் 10 ஆண்டுகளுக்குக் காப்பீடு செய்யப்படும்.

9. புதிய வீடுகளின் உரிமை, மனைவி மற்றும் கணவர் பெயரில் கூட்டாக வழங்கப்படும். இருவரில் யாரேனும் ஒருவர் உயிருடன் இல்லாமல் இருந்தால், உயிருடன் இருப்பவர் பெயரோடு முதல் குழந்தையின் பெயரையும் இணைத்து வீடுகள் வழங்கப்படும். மேற்கண்ட வீடுகளை 10 ஆண்டுகளுக்கு விற்பனை அல்லது அடமானம் செய்வது தடை செய்யப்படும். மனைவி தன் பெயரில் உள்ள சொத்து உரிமையை கணவருக்கு எந்த வகையில் எழுதித்தந்தாலும் சட்டப்படி அது செல்லுபடி ஆகாது.

மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி, அனைத்து மாவட்டங்களிலும் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளவும், அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பம் மற்றும் நிலத்தின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப சிறு மாற்றங்களைச் செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். அவ்வாறு மாற்றங்களைச் செய்யும்போது சம்பந்தப்பட்ட குடியிருப்புப் பகுதி முழுமைக்கும் ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்றவும், அரசால் நியமிக்கப்பட்டுள்ள கிராம அளவிலான குழுக்களைக் கலந்து ஆலோசிக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானம் தொடர்பாக எனது அரசால் வகுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை கடலோரப் பகுதிகளில் நேர்த்தியோடும், பாதுகாப்போடும் நிரந்தர வீடுகள் அமைவதை உறுதி செய்திட வழி வகுக்கும். இந்தக் கொள்கை சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள கடலோரப் பகுதி மக்களாலும், அனைத்து அமைப்புகளாலும் பெரிதும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். இந்தக் கொள்கையின் அடிப்படையில் கட்டப்படும் வீடுகள் மக்களுக்குப் பாதுகாப்பான நிரந்தர மறுவாழ்வை அளிக்கும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. மானியக் கோரிக்கைகள் 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- எழுதுபொருள் மற்றும் அச்சு**

**(இ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**(உ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(ஊ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, unapproved layout பகுதியிலே இருக்கக்கூடிய வீடுகள், அந்தக் காலியிடங்கள் பதிவு செய்யப்பட்டு, அந்த ஆவணங்களை இன்னும் பதிவுத் துறை அலுவலகத்திலேயே பிடித்து வைத்திருக்கிறார்கள். அவற்றை இன்னும் release செய்யவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றை விடுவிக்க தகுந்த உத்தரவுகளை பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகள் தொடர் வறட்சிக்குப் பின்னால், இந்த ஆண்டு சிறிது மழை பெய்திருக்கிறது. மழை பெய்திருந்தாலும்கூட, பரவலாக எல்லா இடங்களிலும் அந்த மழை கிடைக்கப்பெறவில்லை. இன்றும் பல்வேறு பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருந்துகொண்டு

இருக்கின்றன. சில கால்வாய் பாய்கின்ற பகுதிகளிலேகூட, கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் சென்றடையவில்லை. அந்த dry lands எல்லாம் விவசாயம் செய்யாமல் விடுபட்ட நிலங்களாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிகளில் எல்லாம், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கையினைப் பெற்று, விளையாத அந்த நிலங்களுக்கு நிலவரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட, இப்போது புறம்போக்கு நிலங்களில் உள்ள—பல இடங்களிலே, நகரங்களிலே, குறிப்பாக, மதுரை, நெய்வேலி போன்ற நகரங்களில்—கட்டடங்களை இடித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அரசுப் பொதுத் தேர்வுகள் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில், அந்த வீடுகளெல்லாம் இடிக்கப்படும்போது பள்ளி மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர முடியாத அளவிற்குச் சிரமப்படுகிறார்கள் என்கின்ற கோரிக்கை வருகிறது. எனவே, அந்தப் பள்ளித் தேர்வுகள் முடியும் வரையாவது அதை நிறுத்தி வைப்பதற்கு அரசு ஆவனசெய்யுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிலே எதிர்பார்த்தோம். கூட்டுறவுச் சங்கக் கடன்கள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாண்டு காலம் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வருவாய் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து நடைபெறுவதால் விவசாயிகளிடத்திலே பெரிய பாதிப்பு இருக்கிறது. ஆகையால் அந்த வருவாய் நீதிமன்றத்திலுள்ள வழக்குகளை தற்போது அரசு ஒத்திவைக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு) ஒவ்வொருவரையும் கூப்பிட முடியாது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி இங்கே கொடுத்துக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை பதிவு செய்யக்கூடாது என்பதற்காகத் தெரிவிக்கிறேன். 2000 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது தி.மு.க. ஆட்சி எடுத்த கொள்கை முடிவின் காரணத்தால் அதிகமாக இருக்கக்கூடிய பணியாளர்களை ஓய்வில் அனுப்ப வேண்டுமென்கிற முடிவு எடுத்ததன் காரணத்தால் அவர்கள் அனுப்பப்பட்டார்களே தவிர, இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, எங்கள் அம்மாவின் தலைமையிலே அமைந்ததற்குப் பிறகு அவர்கள் அனுப்பப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது ஏதோ தி.மு.க. ஆட்சியில்தான் இவர்கள் பணியில் சேர்ந்தார்கள் என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் அது தவறு. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 1-1-1991 அன்று இவர்களை பணியிலே நீங்கள் அமர்த்தினீர்கள், தலைவர் அவர்கள் ஒரு அரசாணையை வெளியிட்டார் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள், எங்கள் ஆட்சியில்தான் இவர்களைப் பணிநீக்கம் செய்யாமல் வேறு துறைக்கு மாற்றி இருப்பார்கள் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் தவறான தகவலைத் தரக்கூடாது. என்னிடத்தில் வைத்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் இதை அவைத் தலைவருடைய கவனத்திற்கு நேரிலேயே கொடுக்க விரும்புகிறேன். 1999 முதல், வாரியம் தன்னுடைய செலவினங்களைக் குறைப்பதற்காக எடுத்த அனைத்து நடவடிக்கைகளில் இது ஒன்று என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு அரசாணை வெளியிட்டிருக்கிறீர்கள். அரசாணை எண் 198. அது 28-11-2001 அன்று அந்த ஆணை பிறப்பித்து, 862 பணியாளர்களை நீங்கள் பணிநீக்கம் செய்திருக்கிறீர்கள். அதிலும் உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் தடையாணை பெற்று, மீதம் இருக்கின்ற 765 பணியாளர்கள் இன்று பணியில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் நீங்கள் பணிப் பாதுகாப்பு உறுதி தரவேண்டும். பணிநீக்கம் செய்யப்பட்ட 97 பணியாளர்களுக்கும் இந்த அரசு மீண்டும் பணி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தத் துறையை மேலும் வலுவடையச் செய்யும் வகையில், பெண்களுக்கு நெசவுப் பயிற்சி கொடுக்கும் வகையில் நெசவுப் பயிற்சி நிலையங்கள் அதிக அளவில் அமைத்திட வேண்டுமென்றும், தறிகள் அதிகமாக வாங்கிட வேண்டுமென்றும், அவற்றை வாங்கிட அதிக அளவில் நிதி ஒதுக்கிட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன். கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அரசுத் துறைகளான மருத்துவமனைகள், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மின்சார வாரியம் போன்ற துறைகள் வாங்கிட



வேண்டுமென்று அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை கூறுவதற்கு நிறைய நேரம் இருக்கின்றது. குறுக்கீடு இல்லாமல் இறுதியாக அவர்கள் பதிலுரை கூறும்போது சொல்லலாம். நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணம் அடைந்தால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின்கீழ் கருணைத் தொகையாக ரூபாய் 20 ஆயிரம் தருவதாக எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கி வந்ததைத் தொடர்ந்து இந்த அரசும் கடைப்பிடித்து வருகிறது. இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற பொருளாதார சூழ்நிலையிலே அந்தத் தொகை குறைவாக இருப்பதால், ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தி.மு.க. ஆட்சியில், அன்றைய முதல்வர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஊராட்சி...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர். அவர் வில்லங்கமாகப் பேசும்போது, நாங்களும் வில்லங்கமாகத்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசும்போது.... (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். திரு. பெரியசாமி பேசுவார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லங்கம் என்று கூறுவது தவறு. இதில் வில்லங்கம் என்ன இருக்கிறது?

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசுகிறபோது இந்தக் கருத்தைச் சொன்னார். அப்போது தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்ட அரசாணையை எடுத்து வைத்து நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது மறுபடியும் சொல்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதை 1997 ஆம் ஆண்டு நீங்கள் கொண்டு வந்தீர்கள். கொண்டு வந்த திட்டம் மொத்தமே, 635 கிராம ஊராட்சிகளுக்கு மட்டும்தான் 5 ஆண்டு காலத்திலே. வெறும் 635, வெறும் ஊராட்சிகளுக்கு மட்டும்தான், ஒன்றியத்திற்குக்கூட கிடையாது. ஆனால், நீங்கள் கொண்டுவந்த திட்டம் ஏற்கெனவே சுவர்ண ஜெயந்தி கிராம ரோஜ்கார் யோஜனா என்ற மத்திய சர்க்கார் திட்டம். இந்திரா ஆவாஸ் யோஜனா, மத்திய சர்க்கார் திட்டம். மகிளா யோஜனா, மத்திய சர்க்கார் திட்டம். இந்தத் திட்டங்களுடைய நிதியெல்லாம் சேர்த்து நீங்கள் ஒரு பெயர் வைத்துக்கொண்டீர்கள். ஏனென்றால் மத்திய சர்க்கார் கொண்டுவந்த திட்டத்திற்கு யோஜனா, போஜனா என்பதெல்லாம் மக்களுக்குத் தெரியாது என்பதற்காக நீங்கள் இதற்கு பெயர் வைத்துக்கொண்டீர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று பெயர் வைத்துக்கொண்டீர்களே தவிர, இந்தத் திட்டம் மத்திய அரசின் பெருமளவு நிதியோடு இணைக்கப்பட்டு நடைபெற்ற திட்டம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. புகழேந்தி அவர்களே, திரு. பெரியசாமி பேசட்டும். (குறுக்கீடு) அவர் பேசுவார். (குறுக்கீடு) அவர் பதில் சொல்லும்போது பேசுவார். திரு. பெரியசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பெரியசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) ஐயா வேலு உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேலு, வேலு, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பெரியசாமியைப் பேசவிடுங்கள்.

**திரு. அன்பில் பெரியசாமி:** நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் அன்றைய முதல்வர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஊராட்சி வீதம் அடிப்படை வசதிகள் அனைத்தும் பெற்று தன்னிலை பெற்ற கிராமமாக மாறியது. ஆனால், நீங்கள் அந்தத் திட்டத்தை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்து 385 வட்டாரங்களிலும் ரூ.1 கோடி மூலதனத்தில் 385 தொழில்களைத் தொடங்குவதாக அறிவித்தீர்கள். ஆனால், இதுவரை 213 வட்டாரங்களில்தான் திட்டம் தொடங்கப்பட்டு உற்பத்தி தொடங்கி இருப்பதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். மீதமுள்ள வட்டாரங்களில்



தொழில் திட்டங்களை எப்போது தொடங்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. தி.மு.க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை பதிலுரையிலே சொல்வார்கள். (குறுக்கீடு) திரு. பொன்முடி, பதிலுரையில் சொல்வார்கள். திரு. பெரியசாமியைப் பேசவிடுங்கள்.

**திரு. அன்பில் பெரியசாமி:** தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஒன்றியங்களுக்குமே கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் 1,006 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதிலே தகுதியுள்ள விண்ணப்பங்களை பரிசீலனையில் நாங்கள் வைத்திருக்கிறோம். அதிலே ஒரு தொழில் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அரசு நிர்ணயம் செய்து இருக்கக்கூடிய விதிமுறைகளுக்கு உட்பட்டு வருகிறபோதுதான் அவர்கள் பயனாளிகளாகவோ அல்லது தொழில் முனைவோர்களாகவோ ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. அன்பில் பெரியசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறும்போது...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி. (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லும்போது கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், திரு. வேலு, என்ன, திரு. பெரியசாமியை பேசவே விடமாட்டீர்கள் போல் இருக்கிறதே!

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறும்போது 213 வட்டாரங்களில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் தொடங்கிய திட்டம் என்றால் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் மட்டும்தான், அந்தப் பகுதியில் இந்தத் தொழில் தொடங்கியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கேகூட அவருடைய திருச்சி 2-வது தொகுதியிலே ஒரு தொழில் முனைவோரைக் கொண்டு வந்து அரசாங்கத்திடம் அடையாளம் காட்டுவாரேயானால், நாளைக்கேகூட தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே எதிர்க்

கட்சி, ஆளும் கட்சி என்பது கிடையாது. எங்கள் அம்மா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றத்திலே பேசுகிறபோது அருமையான கருத்தை அவ்வப்போது சொல்லி வருகிறார். இந்த அவையிலே உட்கார்ந்திருக்கிற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும்தான் நான் முதலமைச்சர் என்று அடிக்கொரு தடவை சொல்லியிருக்கிறாரே தவிர, ஆளும் கட்சிக்கு ஒரு முதலமைச்சர், எதிர்க் கட்சிக்கு என்று ஒரு முதலமைச்சர் என்று என்றைக்கும் எங்கள் அம்மா குறிப்பிட்டதே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி, அமைச்சர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அடுத்த தலைப்புக்குப் போங்கள்.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது என் தொகுதியிலே தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக எனது தொகுதி...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** தொடங்கப்பட்டது என்று நான் சொல்லவில்லை. தொடங்குவதற்கு தொழில் முனைவோர்கள் யாரையாவது அடையாளம் காட்டினால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் சொன்னேன்.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் துறையில் எங்கள் மாவட்டத்தில் சிட்கோ வளாகங்களில் உள்ள சாலைகள் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளன. அந்தச் சாலையைப் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்திலுள்ள வாழவந்தான்கோட்டை பகுதியில் மகளிர் தொழில் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் மகளிர் தொழில் பூங்காக்கள் அமைத்தால் 50 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்கும் என்று அறிவித்தீர்கள். அந்தச் சலுகை மேற்படி மகளிர் தொழில் பூங்காவிலுள்ள மகளிர் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

திருச்சி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வட்டார மருத்துவமனை, வட்டம்சாரா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேலும் 300-க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. மின் மருத்துவக் கருவி பழுதுபார்க்கும் நிலையம் திருச்சியில் இல்லாத காரணத்தால் மின் மருத்துவக் கருவி பழுதுபார்க்கும் நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, இங்கே பல்வேறு



திட்டங்களை நீங்கள் அறிவித்திருந்தாலும்கூட, மகளிர் சுயஉதவிக் குழுக்களை அதிகமான அளவிலே நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.

*முற்பகல் 11-55*

குறிப்பாக, எங்கள் மாவட்டத்திலே மாவட்டத் தொழில் மையம் சார்பாக வேலைவாய்ப்புப் பெறுகின்ற இளைஞர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே இந்த அரசாங்கம் சிறப்பான முறையிலே நிதியை ஒதுக்கி, அதுவும் மானியத்துடன் ஒதுக்கி, சம்பந்தப்பட்ட தொழில் மையத்தின் மூலமாக அவர்கள் தேர்வு செய்யப்பட்டு, வங்கிகளுக்கு அனுப்பும்பொழுது, ஒருசில பகுதிகளிலே இருக்கின்ற வங்கிகள், அந்த நிதியைக் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு அந்த நிதியைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல எனது தொகுதியிலே தென்னூர் மற்றும் கோட்டை இலக்கி பாலங்கள் மிகக் குறுகியதாக உள்ளதால் அவற்றை அகலப்படுத்த மதிப்பீடு தயார் செய்து, மாநகராட்சி நிதிநிலை அறிக்கை கொடுத்து, தீர்மானம் நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு மிக விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குழுமணி மற்றும் உறையூர் பகுதிகளிலே இருக்கின்ற பாலங்களை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நீண்டநாட்களாக எனது தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருக்கின்றது. குறிப்பாக, உறையூர் பகுதியில் கல்நாயக்கன் தெரு, கல்லிடை மேட்டுத் தெரு மற்றும் பெரிய மலைப்பாறை ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலும், கல்லாங்காடு பகுதியிலும் அரசின் சார்பிலே முறைப்படி அளந்தும் பட்டா வழங்காமல் இருக்கின்றது. எனவே, வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதிக்குட்பட்ட காஜா மலை அரசு குடியிருப்புகளில் உள்ள வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளன. அவற்றைச் சீர்செய்து செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல திருச்சி மாநகரத்திலே பெரும்பாலான பகுதிகளிலே மின் கம்பங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தக் கம்பங்களை எல்லாம் புதியதாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. அன்பில் பெரியசாமி] [2005 மார்ச் 24

மன்னார்புரம் தந்தை பெரியார் வளைவிலிருந்து கலைஞர் நகர் குடியிருப்பு வரை பிரதான குழாய் செல்கிறது. அந்தக் குழாய் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றதால், அங்கே இருக்கின்ற பகுதிகளுக்குச் சீரான குடிநீர் வழங்குவதற்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் குழாயைப் புதியதாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதி திருச்சியிலே பாலக்கரை மேம்பாலப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நான்கு மேம்பாலப் பணிகளை அறிவித்தார்கள். அந்தப் பணிகளில் மூன்று பாலப் பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன. ஆனால், ஒரு பாலப் பணி, பாலக்கரை பாலப் பணி மட்டும் மெதுவாக, மிக மெதுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை விரைவில் முடித்து, அங்கே இருக்கின்ற பொதுமக்களுடைய போக்குவரத்து நெரிசலைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சம்பந்தா சம்பந்தம் இல்லாமல், உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ஒரே ஒரு clarification. அமைச்சரவர்கள் தவறான தகவலை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். இது என்ன கட்டப் பஞ்சாயத்தா? உட்காருங்கள். திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.



2005 மார்ச் 24]

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. இராஜரெத்தினம்) தலைமை)**

***திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மலரின் குணம் மணம் பரப்புவது; தாயின் குணம் அன்பு செலுத்துவது. எங்கள் அம்மாவினுடைய குணம் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற குணத்திற்கேற்ப—இன்றைக்குத் தன் மக்களை ஆட்சியில் அமர்த்துவது ஒன்றே குறிக்கோள் என செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தலைவர்கள் மத்தியிலே—தன்னலம் பாராமல், மக்களுக்காக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மனிதருள் மாணிக்கம், பெண் குலத்தின் கலங்கரை விளக்கம், தமிழகத்தின் தங்கத் தாரகை, ஆசியாவின் Iron Lady, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி இன்று ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

2001 முதல் இன்றுவரை நடைபெறுகின்ற அம்மாவினுடைய ஆட்சியானது பெண்களுக்குக் கிடைத்த ஓர் அதிர்ஷ்டமான ஆட்சி என்றே கூறலாம். பெண்கள் நலம் பெற, அவர்கள் வாழ்க்கைத் திறனை மேம்படுத்த, சமூகத்திலே அவர்களுக்குச் சுய மரியாதை, சுய கௌரவம், சம அந்தஸ்து கிடைக்க எத்தனை எத்தனை திட்டங்களை, செயல்பாடுகளை இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதேநேரத்திலே பெண்களுடைய திறமையை வெளிக்கொணர, ஒரு தூண்டுகோலாக இன்றுவரை மாண்புமிகு அம்மா அவர்கள் பல செயல்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

நண்பகல் 12-00

ஒரு சமுதாயத்தினுடைய மேம்பாடு என்பது பெண்களுடைய வளர்ச்சியைப் பொறுத்தே அமைகின்றது. பெண்களைவிடப் பெரும் சக்தி ஏதும் இல்லை என்பதால்தான், 'பெண்ணிற் பெருந்தகை யாவுள' என்று வள்ளுவர் பாடியுள்ளார். இந்த நேரத்திலே எனக்கு ஒரு கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றது. "மகளிரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால் மாநிலத்திலே போரில்லை, சாக்காடு இல்லை" என்ற கவிதை வரிகளுக்கேற்ப, இன்றைக்கு மகளிரே ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற, நல்லாட்சியை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். முந்தைய காலங்களில் பெண்களை சக்தியாகவும்,

தெய்வமாகவும் பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பெண்கள் சாதனைகள் படைக்கின்ற சக்தியாகவும், மக்களுக்கு இன்னல்கள், இடையூறுகள் வராமல் காக்கின்ற தெய்வமாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேநேரத்திலே இன்றைக்கு பெண்கள் அரசியலிலிருந்து, அரசு உயர் அதிகாரிகள் வரையிலும் மிகச் சிறப்பாக திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதற்கெல்லாம் காரணம், எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் ஆணித்தரமாக இந்தச் சபையிலே அறுதியிட்டுக் கூற விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாட்டினுடைய முதுகெலும்பே சிறுதொழில் துறையாகும். இன்றைக்கு மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மாவட்டத் தொழில் மையங்கள் புதியதாக சிறுதொழில்கள் தொடங்குவதற்கு சிறந்த வழிகாட்டியாகச் செயல்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு அம்மா அவர்கள் ஊரகப் பகுதியிலே வேளாண் மக்கள் பயன்படுகின்ற வகையிலே அறிவித்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நாட்டிலேயே யாரும் அறிவிக்காத சிறப்பானதொரு திட்டமாகும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் கூடங்கள் அமைக்க இதன்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 28-2-2005 வரை 138.43 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 213 திட்டங்களுக்கான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது எனவும், உற்பத்தி தொடங்கியுள்ள தொழில் அலகுகளில் 5,638 மகளிர் உட்பட மொத்தம் 8,335 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்துள்ளது எனவும், மேலும் 165 திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன என்பதையும் நான் மிகவும் வரவேற்கின்றேன். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஊரகப் பகுதியிலே படித்த வேலைவாய்ப்பில்லாத இளைஞர்கள் தொழில் தொடங்க ஊக்க சக்தியாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோருக்கு உதவித்தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் புதிய தொழில் தொடங்க வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களிலிருந்து 20 ஆயிரம் மகளிருக்கும், பிரதமர் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 5 ஆயிரம்



மகளிருக்கும், ஆக ஆண்டுக்கு 25 ஆயிரம் மகளிர் வீதம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து 2006 வரை 1,25,000 மகளிருக்கு பயிற்சி அளிக்க தொழில் வணிகத் துறைக்கு ஆணையிட்டுள்ளதை வரவேற்கின்றேன். அதேநேரத்திலே பெண்கள் சார்பாக எனது நன்றியையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டிலே இயங்கிவரும் கயிறு வாரியம் மூலம் கயிறு தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு 2004-2005 ஆம் ஆண்டு காலத்திற்கு ரூ. 4,235.50 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து 2,000 மகளிருக்கு கயிறு இழை தயாரிக்கும் பயிற்சி அளித்து, மோட்டார் பொருத்தப்பட்ட ராட்டைகளை வழங்க திட்டம் வகுத்துள்ளதைப் பாராட்டி, மகளிருக்காக பாடுபடும் ஒரே தலைவி எங்கள் புரட்சித் தலைவியே என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் நார் உற்பத்தி, மற்றும் கயிறு முறுக்குதல் ஆகிய தொழில்கள் ஆரம்ப நிலையிலே உள்ளன என்று எண்ணி, அதைக் கருத்தில்கொண்டு, இத்துறையை வளர்ச்சி அடையச் செய்து, அதன் வாயிலாக கிராமப்புற மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை அளிக்கவும், அவர்களின் வருவாயை அதிகரிக்கவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் அம்மா அவர்களின் அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆசியாவினுடைய Iron Lady என பாராட்டப்படும் மாண்புமிகு அம்மா அவர்கள், முதன்முறையாக 5 இடங்களிலே மகளிர் தொழில் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளதை மகளிர் பிரதிநிதியாகிய நான் பெரிதும் வரவேற்கின்றேன். 2004-2005-ல் சிறுதொழில் முனைவோருக்கு 3 தொழில்நுட்பப் பூங்காக்களை புறநகர்ப் பகுதிகளில் அமைக்க சிட்கோ நிறுவனம் முனைந்துள்ளது. இப்பகுதிகளில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்கள் பெறும் கடன்களின் வட்டிக்கு, வட்டி மானியமாக ஆண்டுக்கு மூன்று விழுக்காடு வழங்க ஆணையிட்டதை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

பிற்பகல் 12-05

அதேபோன்று சிட்கோ தொழிற்பேட்டைக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம், திரு.வி.க. தொழிற்பேட்டை, ஒசூர் தொழிற்பேட்டைகளில் செயல்படுவதை தொழில் முனைவோர்கள் பலரும் வரவேற்கின்றனர். கிராமப்புறங்களிலேயிருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடி அலைவதைத் தடுக்கும் விதமாக பின்தங்கிய தொகுதியான என்னுடைய மேல்மலையனூர்

[திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்] [2005 மார்ச் 24

தொகுதியிலே சிட்கோ மூலம் மகளிர் தொழிற்பூங்கா[illegible] அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் என்னுடைய கோரிக்கையாக முன்வைக்கின்றேன்.

மேலும், என்னுடைய தொகுதியிலே மகளிர் குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இக்குழுக்களுக்கு கயிறு இழை தயாரிக்கும் பயிற்சி அளித்து, மோட்டார் பொருத்தப்பட்ட கயிறு ராட்டைகள் வழங்கும் திட்டத்தை எங்கள் தொகுதியிலே அளித்திட வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளைத் தங்கள் முன்னே வைக்கின்றேன். நிச்சயம் நீங்கள் நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது.

சென்ற தி.மு.க. ஆட்சியிலே தேயிலைக்கு விலை கேட்ட சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளை நிர்வாணமாக நடுத் தெருவிலே அடித்துத் துன்புறுத்தியதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதை நினைவில்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளைக் காப்பாற்ற "ஊட்டி டீ" என்ற பெயரிலே தேயிலைத் தூளை பொது விநியோகக் கடைகளின் மூலம் விற்பனை செய்து, 28-8-2001 முதல் விற்பனை தொடங்கியது என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி நிர்வாண நிலைக்குத் தள்ளப்பட்ட சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகள், இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம், ஏழைகளின் இரட்சகனாக விளங்கக்கூடிய எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 188 கிராமிய கதராடை நூற்பு நிலையங்களும், 67 உப கிளைகளும், 12 நேபாள தறி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கதர்த் துறை மூலம் 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என்றும், இதில் 12,500 பேர் கிராமியப் பெண்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராமப்புறப் பெண்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எந்த அளவுக்கு அக்கறை உள்ளது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டே போதுமானதாக இருக்கின்றது. தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஆண்டுதோறும் கதர் இரகங்க்ளின்மீது 30 சதவீதம் தள்ளுபடியும், பட்டு இரகங்களின்மீது 20 சதவீதம் தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.



2005 மார்ச் 24] [திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்]

தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தச்சு மற்றும் கருமாரத் தொழில்களை மிக முக்கியமான தொழில்களாக அடையாளம் கண்டுள்ளதை நான் பெரிதும் வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியிலே அவலூர்ப்பேட்டை ஊராட்சியிலே அதிக அளவிலே தச்சுத் தொழில் நடைபெற்று வருகின்றது. இங்கிருந்து மரச் சாமான்களை சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு விற்பனை செய்கின்றனர். மாண்புமிகு அம்மா அவர்கள் அவலூர்ப்பேட்டை, வளத்தி ஆகிய ஊராட்சிகளில் கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, தச்சுத் தொழிலை மேம்படுத்தி, வேலைவாய்ப்பைப் பெருக்கிட வேண்டும் என்ற அன்பான கோரிக்கையைத் தங்கள் முன்னே வைக்கின்றேன்.

இந்தியாவிலேயே பனைத் தொழில் உற்பத்தியிலே தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலே உள்ள 8.01 கோடி மரங்களிலே, 4.61 கோடி பனை மரங்கள் தமிழ்நாட்டிலே மட்டும் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பனைத் தொழில் செய்வோர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆறு இலட்சம் நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இதை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

என்னுடைய மேல்மலையனூர் மற்றும் செஞ்சி ஆகிய இரண்டு தொகுதிகளிலும் பனை மரங்கள் அதிகமாக உள்ளதால் இங்குள்ள மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே பனைசார் தொழில்கள் தொடங்கவும், பதநீர் உற்பத்தி செய்யவும், வழிவகை செய்தால் இங்குள்ள மக்களுக்கு வருமானம் பெருகும்; அதே நேரத்திலே வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் பனைசார் தொழில் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக என்னுடைய அன்பான கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

அதேநேரத்திலே பனை மரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கின்றன. அதனால் ஏரிக் கரைகளிலே பனை மரங்களை நட்டு வளர்ப்பதற்கு அரசு ஊக்குவிக்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையையும் நான் இங்கே தங்கள் முன்னே வைக்கின்றேன்.

பிற்பகல் 12-10

வேளாண் விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே பட்டு உற்பத்தித் தொழிலிலே 2004-2005 ஆம் ஆண்டில் 5,700 நபர்களுக்கு வேலையை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதில் பிப்ரவரி 2005 வரை 8,840

நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 5,700. ஆனால், சாதனை படைத்த இலக்கு 8,840. இலக்கை மிஞ்சிய சாதனை படைத்தவர்தான் எங்கள் புரட்சித் தலைவி என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிலும், எப்பொழுதும் இலக்கை மிஞ்சிய சாதனை படைக்கும் எங்களது தாய், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே சுனாமி வேகத்திலேயே மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளித்து, என்றும் மக்கள் மனதில் அம்மாவாக, எங்கள் மன 'தில்' அம்மாவாக திகழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே, நிர்வாகச் சீர்கேட்டால் கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட நிதி நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தன்னுடைய நிர்வாகத் திறமையால் கோமா நிலையிலிருந்த நிதி நிலைமையை சுய நினைவிற்குக் கொண்டுவந்த பெருமை எங்கள் அம்மா அவர்களையே சாரும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்று ஒருசில நபர்களே இலாபம் ஈட்டிவந்த அயல்நாட்டு மது விற்பனை, மணல் விற்பனை இவற்றையெல்லாம் அரசே ஏற்று நடத்தி, அனைத்து வருமானங்களையும் அரசின் கஜானாவிற்கே திருப்பிய மாண்புமிகு அம்மா அவர்களின் பொருளாதார அறிவைக் கண்டு, இன்றைக்கு இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும் நம்மிடம் வழிமுறைகளைக் கேட்கும் நிலையில் உள்ளன என்பதை எண்ணி தமிழக மக்கள் மிகவும் பெருமைப்படுகின்றார்கள். இது ஒரு பெரிய சாதனை அல்லவா?

தமிழ் மொழிதான் தன் உயிர், தான் தான் தமிழ்த் தாயின் மகன் என்று தன்னைத் தானே போற்றிக்கொள்ளும் தலைவர்களும், தன் வீட்டுப் பிள்ளைகளுக்கு வடமொழிப் பெயர்களையும், தன் வியாபார நிறுவனங்களுக்கு ஆங்கிலப் பெயர்களையும் சூட்டி, தமிழ் மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றவர்கள் இருக்கின்ற வேளையிலே, அறிவியல் தமிழ் கொண்டுவந்து, தமிழ் வளர்க்கும் எங்கள் புரட்சித் தலைவியே, திருட்டு வி.சி.டி. ஒழித்து, கொடியவன் வீரப்பனை அழித்து, புதிய வீராணம் கொடுத்து, சாதனை படைத்த எங்கள் புரட்சித் தலைவியே, தாயின் முதல் எழுத்தை குழந்தைகளுக்குத் தலைப்பெழுத்தாகப்



போடலாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, தாய்க் குலத்திற்குப் பெருமையைத் தேடித் தந்த எங்கள் அன்னையே, உங்களை வணங்கி ஊரகத் தொழில் துறைமீது எனது கருத்துகளைப் பதிய வைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில்கள், கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கைகளின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீலகிரி மாவட்டத்தின் ஜீவாதாரமாக இருப்பது தேயிலை விவசாயம். இங்கே 65 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் இருக்கின்றார்கள். தற்போது ஒரு கிலோ பச்சைத் தேயிலை 8 ரூபாய்க்கு விற்கிறது. இதே தேயிலை கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு 5 ரூபாய்க்கு விற்றது. அதற்கு முன்னதாக 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிலோ தேயிலை 18 ரூபாய்க்கு விற்றது. நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் எதிர்பார்ப்பது 18 ரூபாய் இல்லையென்று சொன்னாலும்கூட, 15 ரூபாயாவது கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை வாங்குவதற்காக 300 வியாபாரிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவ்வளவு பேர் பதிவு செய்திருந்தாலும்கூட தேயிலை வியாபாரத்தை நிர்ணயம் செய்வது, ஹிந்துஸ்தான் லீவர் போன்ற 5 பெரிய கம்பெனிகள்தான். அங்கே குன்னூரில் இருக்கின்ற ஏல மையத்தில், சிறு தேயிலை விவசாயிகளின் பிரதிநிதிகள் ஏலம் நடைபெறுகின்ற இடத்தில் இடம்பெற வேண்டும் என்று நீண்டகாலமாக தேயிலை விவசாயிகள் கோரி வருகின்றார்கள். அந்த ஏல மையத்திலே விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இதுவரையிலே போடப்படவில்லை. 12-4-2002-ல் இந்த அவையில் சிறு தொழில்கள் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. வில்வநாதன் அவர்கள் அன்றைக்கு பதிலளிக்கின்றபோது தேயிலை விவசாயிகளின் நலனைக் காக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு புதிய ஏல மையம் ஒன்றைத் துவக்கும், அதில் மாநில அரசு அதிகாரிகளும், தேயிலை விவசாயிகளும் இடம் பெறுவார்கள் என்று கூறினார். இதே கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால், இதுவரை புதிய ஏல மையம் ஒன்றும் துவக்கப்படவில்லை. மேலும் குன்னூரில் Tea Serve என்ற.....

[2005 மார்ச் 24

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே 12 தேயிலை ஏல மையங்கள் உள்ளன. அதிலே மின்னணு ஏல மையத்தை, விவசாயிகள் பங்கேற்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் குன்னூரிலே துவக்கி வைத்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். உலகத்திலேயே மின்னணு ஏல மையம்- அவர்களாகவே ஒரு விலையை கேட்டுக்கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கக்கூடிய ஒரு ஏல மையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் துவக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குன்னூரில் Tea Serve என்ற அமைப்பினை 13-9-2003-ல் துவக்கினார்கள். Computer ஏல மையத்தைத் துவக்கியிருக்கின்றார்கள். ஆனால், அந்த Computer ஏல மையத்தில் இன்னும் இரகசிய ஏலம்தான் நடைபெறுகிறது. வெளிப்படையான ஏலம் நடைபெறவில்லை. இந்த கொள்கை விளக்கக் குறிப்பேட்டில்கூட பக்கம் 19-ல் இந்த ஏல மையம் வணிக ஊகங்களைத் தவிர்த்து, நியாயமான மற்றும் வெளிப்படையான வியாபாரத்தின் மூலமாக தேயிலை விலையை நிலைப்படுத்த உறுதி செய்கிறது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை வெளிப்படையாக ஏலம் நடைபெறவில்லை. இரகசியமாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம்போக்கிலே இரகசியமாக என்று சொன்னால் அதன் அர்த்தம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. மின்னணு ஏல மையம் பலபேர் பங்கேற்கக்கூடிய ஒரு மையமாகத்தான் இருக்கிறதே தவிர, அதில் இரகசியமாக எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். இதில் இரகசியம் ஒன்றுமே இல்லை. ஏலம் கேட்கிறபோது கிட்டத்தட்ட 200, 300 விவசாயிகள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட விலையைச் சொல்லி, அந்த விலைக்குக் கீழேயோ, மேலேயோ ஏலம் கேட்கிற முறையிலே கேட்கிறார்கள். அதில் எது சரியாக இருக்கிறதோ, அதன்படி வாங்கிக்கொண்டு போகிறார்கள். இதில் இரகசியம் என்றால் எனக்குப் புரியவில்லை. பொத்தாம்போக்கிலே குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லக்கூடாது.



2005 மார்ச் 24]

**திரு. கா. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏல மையத்தில் முதலில் ஏலம் எடுக்கின்றவர்கள், இந்த விலையைக் கேட்டார், இரண்டாவது ஏலம் எடுத்தவர் இந்த விலையைக் கேட்டார், மூன்றாவது ஏலம் கோரியவர் இந்த விலையைக் கேட்டார் என்று யாருக்கும் தெரியாது. இறுதியாகத்தான் அந்த விலை, இந்த விலைக்கு இந்தத் தேயிலை விற்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதைத்தான் நான் இரகசியம் என்று குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்)

கேரளாவில் இரப்பருக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். அதேபோன்று தேயிலைக்கும் குறைந்த விலை நிர்ணயம் செய்வதற்கு, மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்று காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். அஸ்ஸாம் தலைநகரம், கௌஹாத்தியில் இருக்கின்ற இந்திய தேயிலை ஆராய்ச்சிக் கழகத்தினர் மாத்திரை வடிவிலே தேநீரைத் தயாரித்து இருப்பதாகவும், இரயிலில் போகும்போதுகூட அந்த மாத்திரையை வாயில் போட்டுக்கொள்ளலாம். டீ குடித்ததற்கு அது சமம் என்று ஒரு செய்தியைப் படித்தேன். அதுபோன்று தமிழ்நாட்டிலும் நீங்கள் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொள்வீர்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். மேலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் orthodox இரக தேயிலைத் தூள் தயாரிப்பதற்கான இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கி நிறுவப்பட வேண்டும். அப்படிச் செய்தால் செலவு குறையும், இலாபம் அதிகரிக்கும்.

அடுத்து சிறு தொழில்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள் கொண்டுவந்த பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மாவட்ட அளவில் பயனாளிகளைத் தேர்வு செய்து வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கின்றார்கள். ஆனால், வங்கிகள் சரிவர கடனுதவிகள் அளிக்காமல் தொழில் முனைவோர்களை அலைக்கழிக்கிறார்கள். எங்கள் வங்கியில் குறியீடு முடிந்துவிட்டது என்று சொல்லி மாவட்டத் தொழில் மையத்திற்கு விண்ணப்பங்களைத் திருப்பி அனுப்புகிறார்கள். மீண்டும் மாவட்ட தொழில் மையத்தினர், வேறு வங்கிகளுக்கு அனுப்புகிறார்கள். இதற்குள் புதிய தொழில் முனைவோர்கள் ஓய்ந்துவிடுகிறார்கள். வங்கிகள் மெத்தனமாக இருப்பதைக் கருத்தில்கொண்டு தொழில் முனைவோருக்குக் கடன்கள் வழங்குவதிலுள்ள தாமதத்தைத் தவிர்க்க நமது...

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம், அதன்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிற பணம்-இதிலே ஒரு குறியீடு நிர்ணயம் செய்து இவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்து இவ்வளவு பயனாளிகளுக்குத்தான் தர வேண்டுமென்று உங்களுடைய அரசுதான் உத்தரவு போடுகிறது. அதன் அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பயனாளிகளைத் தேர்வு செய்து வங்கிகளுக்கு அனுப்பி வைக்கிறது. நீங்கள் வேண்டுமானால் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, இன்னும் அதிகமான வங்கிகளுக்கு நிதியைத் தரக்கூடிய அளவிற்கு பயனாளிகளுக்குப் போய்ச் சேருகிற விதத்திலே பெற்றுத் தருகிறபோது, நிச்சயமாக நீங்கள் சொல்லுகிற குறியீட்டை எட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகள் மெத்தனமாக இருப்பதைக் கருத்தில்கொண்டு தொழில் முனைவோருக்குக் கடன் உதவிகள் வழங்குவதிலுள்ள தாமதத்தைத் தவிர்க்க நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 12-4-2002-ல் ஒரு அறிவிப்பு வெளியிட்டார்கள். வங்கி மேலாளர்களை அழைத்து கூட்டம் நடத்த உள்ளேன் என்று சொன்னார்கள். அந்தக் கூட்டம் நடத்தப்பட்டதா, இல்லையா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாவட்டத் தொழில் மையங்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தி அதன் அடிப்படையிலே மாவட்ட ரீதியாக உள்ள வங்கி அதிகாரிகள் இன்றைக்கும் கூட்டம் நடத்தி, இந்த மனுக்களைப் பரிசீலனைக்கு அனுப்பி வைத்து, அதன்மூலம் பயனாளிகளைத் தேர்வு செய்து, நிதி வழங்குகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** முதலமைச்சர் அவர்கள், வங்கி மேலாளர்களை அழைத்து நான் கூட்டம் நடத்துவேன் என்று சொன்னார்கள். அப்படிக் கூட்டம் நடத்தப்பட்டதா? அப்படி நடத்தியிருந்தால் அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது? நடத்தவில்லையென்று சொன்னால் அந்த மாதிரி ஒரு வங்கி மேலாளர்கள் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





1991-1996 வரை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் Common Effluent Treatment Plant, Testing Laboratory போன்ற பொதுக் காரியங்களுக்காக 10% நிலம் ஒதுக்கப்பட்டது. அப்படி பொதுக் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை தற்போது சிட்கோ நிறுவனம் விற்பனை செய்துள்ளது. பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்த நிலங்களை வாங்கியவர்கள் இன்றைக்கு தொழில்களைத் தொடங்க முடியாமல் நிறுத்தியிருக்கின்றார்கள். காரணம், பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தொழில்களைத் தொடங்குவதற்கு நகர்ப்புறம் மற்றும் ஊரமைப்புத் துறை அனுமதி வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட தொழில் முனைவோருக்கு அரசு இதுபற்றி என்ன பரிகாரம் செய்யப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் அருகே கருப்பூர் உட்பட ஐந்து பிரத்தியேக மகளிர் தொழில் பூங்காக்களை அமைக்கும் திட்டம் வரவேற்கக்கூடியதாகும். இதில் பங்கேற்கும் தொழில் முனைவோருக்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளை வழங்க வேண்டும். இந்த யோசனையை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

Single Window Clearance - அதாவது ஒற்றைச் சாளர முறையில் புதிய தொழில்களைத் தொடங்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தடையில்லாச் சான்றை வழங்குவதற்கு 7 நாட்களும், நகர்ப்புறம் மற்றும் ஊரமைப்புத் துறை நிலங்களின் மறுவகை அனுமதி வழங்க 21 நாட்களும் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்களிடம் தடையில்லாச் சான்று பெறுவதற்கு ஆறு மாதமாகிறது. 21 நாட்களில் யாருக்கும் தடையில்லாச் சான்றுகள் கிடைப்பதில்லை. குறிப்பாக, தீயணைப்புத் துறையில் அனுமதி பெறுவதற்கு தொழில் முனைவோர் படாத பாடு படவேண்டிய சூழ்நிலையிருக்கிறது.

சிறு தொழில் வாரியம். இந்த வாரியம் சிறு தொழில்கள் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தலைமைச் செயலாளரைத் துணைத் தலைவராகவும் கொண்டு செயல்படுகிறது. இந்த வாரியத்தில் சிறு தொழில் சங்கத்தினரையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் தொழில் முனைவோருக்கு இயந்திரங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கு

மட்டும் 15 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. நிலத்திற்கும், தொழிற்கூட கட்டடங்கள் கட்டுவதற்கும் உதவிகள் செய்யப்படுவதில்லை. முதல் மூன்று வருடங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் 30 சதவீதம், 20 சதவீதம், 10 சதவீதம் என்று மின் கட்டண மானியம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் தொழிற்சாலைகள் அனைத்தும் கிராமப்புறங்களில் அமைக்கப்படுவதால் விவசாய பம்புசெட்டுகளோடு இணைக்கப்படுகிறது. இதற்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கின்ற வகையில் தனியாக transformer-களை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு ஒன்றியத்தில், 4 பேர் தலா ரூ.25 இலட்சம் செலவில் தொழிற்சாலைகளை ஆரம்பித்துவிட்டால், மற்றவர்களுக்கு தொழில் தொடங்க வாய்ப்பு மறுக்கப்படுகின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதில் உரையிலே தெரிவிக்க வேண்டும். வேறு அரசு வந்தால், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை.....

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்திலேயே ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று குறியீடு வைத்துத்தான் தொழில் தொடங்க வேண்டும் என்பது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய நோக்கம். அதற்கு மேலே போய்விடுகின்றபோது அது பெரிய தொழிலாகி விடுகின்றது.

**திரு. கா. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் ரூ. 25 இலட்சம் செலவில் தொழில்கள் தொடங்க முன்வந்து, அதேபோன்று 4 பேர் ரூ.25 இலட்சம், ரூ.25 இலட்சம் என்று சொல்லி அவர்கள் தொழில்கள் தொடங்கினால், ஐந்தாவது பேருக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறதா என்பதைத்தான் நான் கேட்டேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுதாரர்களின் தகுதியின் அடிப்படையில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி, இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** கதர்த் துறையில் 12-4-2002-ல் சிறு தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, கதர்த் துணிகள் ரூ.42 கோடி மதிப்பில் தேங்கி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி தேங்கி இருக்கின்ற கதர்த் துணிகளை விற்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தில் 97 பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக நியமிக்க முடியவில்லை என்றாலும்கூட நீங்கள் க ந்த....

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. நீதிமன்றத்திற்குள்ளே இருக்கின்ற பிரச்சினை என்கிற காரணத்தால் அதைப்பற்றி இந்த அவையிலே விவாதிக்க முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இரண்டு பிரிவுகள். ஒன்று 862 பேர் வழக்கு மன்றத்திலே தடையாணை பெற்று இருக்கிறார்கள். மற்றவர்கள், அந்த 97 பேர், தடையாணையைப் பெறவில்லை. எனவே, வழக்கு நீதிமன்றத்திலே இருந்தாலும்கூட, நீங்கள் வேலைக்கு எடுத்துக்கொண்டு நீதிமன்றத்திலே சொல்லிவிடலாம். அத்தனை பேரையும் நாங்கள் வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம், எனவே, இந்த வழக்கை முடித்து விடலாம் என்று சொன்னால் வழக்கை முடித்துவிடப்போகிறார்கள். எனவே, அனைவரையும் நீங்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டு காலமாக காலியான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அந்தக் காலி இடங்களில்கூட இந்த 97 பேரை வேலையில் அமர்த்தலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள இரண்டு பிரச்சினைகளை நான் சொல்லி முடிக்கிறேன். குன்னூர் நகராட்சியில் வி.பி. தெருவில், சட்டமன்ற

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், சென்ற ஆண்டு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நான் ரூ.3,63,000 ஒதுக்கினேன். இன்றைக்கு அந்த வேலையை குன்னூர் தாசில்தார் அவர்கள் நிறுத்திவிட்டார்கள். காரணம், நிலம் ரெவின்யூ புறம்போக்கு என்று சொல்லி நிறுத்தி இருக்கின்றார்கள். அந்த நகராட்சி நிர்வாகத்தில், அந்த நிலம் நகராட்சிக்கு என்று இருக்கிறது. எனவே, இந்த வேலை மீண்டும் நடைபெற நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குன்னூர் நகராட்சி பஸ் நிலையம் நெரிசலாக இருக்கிறது. இந்த பஸ் நிலையத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணன்.

***திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு கதர் மற்றும் கதர் சார்ந்த கிராமத் தொழில்கள், கைத்திறன் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த எங்கள் சமூக நீதிக் காவலர், தமிழ்க்குடிதாங்கி, மருத்துவர் ஐயா அவர்களுக்கும், இளைய தளபதி மாண்புமிகு மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும், என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கதர், பட்டுப் பூச்சி வளர்த்தல், பனைபொருள் தயாரிப்பு, கைத்திறன் பொருள் உற்பத்தி ஆகியவை தமிழ்நாட்டில் பெரும்பான்மை மக்களுக்கு அன்றாட வேலைவாய்ப்பையும், நிரந்தர வருமானத்தையும் தேடித் தருபவை. இந்த அரசு, பெருவாரியான பிரிவுகளுக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. இதனால் பெருவாரியான மக்கள், சொல்லப்போனால் ஆதிதிராவிட மக்கள் மற்றும் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களது சமூக நீதிக் காவலர் மருத்துவர் ஐயா அவர்கள் அடிக்கடி சொல்லி வருவதை ஞாபகப்படுத்தி, சமுதாயத்தின் அடிமட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் வாழ்வு உயர வேண்டுமானால் கிராம மக்கள் அதிகம் பேர் ஈடுபட்டுள்ள கிராம கைத் தொழிலுக்கு, பரம்பரை கைத்திறத் தொழிலுக்கு கை கொடுத்து, அதற்கு அதிக நிதி வழங்க வேண்டுமென நான் சார்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-30

2003-2004 ஆம் ஆண்டு 200 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, குறைவான அளவே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 150 மெட்ரிக் டன் இலக்கினை எய்தவில்லை. 112 மெட்ரிக் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. இது எப்படி? தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பட்டு கொள்முதல் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன? காஞ்சிபுரம் பட்டு பரிமாற்ற மையத்துடன், சேலம், கும்பகோணம் போன்ற இடங்களிலும் பட்டு பரிமாற்றம் செய்தால் பட்டு கொள்முதல் கூடுவதற்கு வாய்ப்புள்ளது. இதனால் அண்டை மாநிலமான பெங்களூர் பகுதியில் நமது வியாபாரம் குறையும்.

தமிழ்நாடு அரசு, கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கும் மானியத் தொகை நிதி மாறாமல் இருப்பது எப்படி? 2005-2006 ஆம் ஆண்டு கதர்த் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 16-ல் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு சிறப்பு உதவி என 4 திட்டங்களுக்கு அரசால் உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை 2004-2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 20-ல் உள்ள அதே விவரங்கள் மறுபடியும், மறுபடியும் சொல்லப்பட்டிருக்கின்றன. 2005-2006 ஆம் ஆண்டு இத்திட்டங்களுக்கு கூடுதல் நிதி இல்லையா? கதர் ரகத் துணிகளின் உற்பத்தி மதிப்பு இலக்கு 2004-2005 ஆம் ஆண்டு 15 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டில் அதை 9 கோடி ரூபாய் என குறைத்துக் காட்டுவதற்குக் காரணம் என்ன?

கதர் வாரிய நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணம் அடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக, கருணைத் தொகையாக ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை நூற்பாளர் மற்றும் நெசவாளர் பயன்பெற்றுள்ளனர்? அதேபோல 60 வயதடைந்த மூத்த நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ.250 வீதம் எத்தனை நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலணி தயாரிப்பு அலகுகள். கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் 19 காலணி தயாரிப்பு அலகுகள் உள்ளன. இங்கு பணியாற்றும் ஆயிரம் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருணைத்தொகை எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். 2001-லேயிருந்து 2004 ஆம் ஆண்டு வரை 1 கோடியே 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பட்டு கைவினைஞர்களின் நல நிதியானது 10 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்கள் கைவினைஞர்களின் நலனைக் கருதி வழங்கியிருக்கிற தொகை 2 கோடியே 42 இலட்சத்து 41 ஆயிரத்து 285 ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிக்க நன்றி. காலணி தயாரிப்பு அலகுகள். கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் 19 காலணி தயாரிக்கும் அலகுகள் உள்ளன. இங்கே பணியாற்றும் ஆயிரம் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தயார் செய்யும் காலணி இனங்களை விற்பனை செய்திட, தலைமைச் செயலக வளாகத்தில் தனியாக ஒரு விற்பனைக் கூடம் ஆரம்பித்தால், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் தங்களுக்குத் தேவையான காலணிகளை விருப்பப்படி வாங்கிக்கொள்ள ஏதுவாக இருக்கும். இந்த அரசு இதற்கான ஏற்பாட்டைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவிலை சோப்பு விற்பனை. வாரியத்தின் சோப்பு வகைகள் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதால் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு? 2004-2005 ஆம் ஆண்டு கதர் வாரியத்திற்கு மானியமாக அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 33-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு 42 கோடி ரூபாய். 2004-2005 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் 33 கோடி ரூபாய். கடந்த ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 34-ல் சொல்லப்பட்டிருக்கிறது. 2004-2005 ஆம் ஆண்டுக்கான, அதாவது ஒரே ஆண்டுக்கு 2 புத்தகங்களில், இரண்டு தொகைகளில் மானிய நிதி ஒதுக்கீடு என்பது எப்படி?



பிற்பகல் 12-35

அடுத்து, பனைப்பொருள். சுமார் 30,000 ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் கைவினைப் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டு உழைத்து தயாரித்தளிக்கும் பனைப் பொருட்கள் விற்பனை மூலம் வருவாய் 2004-2005 ஆம் ஆண்டில் 575.14 இலட்சம் ரூபாய் எனக் கூறப்பட்டுள்ளது. இது, 2004-2005 ஆம் ஆண்டுக்கான விற்பனை இலக்கான 1,430 இலட்சம் ரூபாய் என்பதில் மூன்றில் ஒரு பங்குதான். அப்படியானால் பனைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் 30,000 ஆதிதிராவிடர் குடும்பங்களின் வாழ்வு நிலை எப்படி மேம்பாடு அடையும்? ஆகவே, சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கிராமியத் தொழில்களுக்கு, கைவினை தயாரிப்புப் பொருட்களுக்கு மேலும் நிதி உதவி அளித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் நிதி ஒதுக்கீடு. சிறு தொழில்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் கடைசிப் பக்கத்தில் சிறு தொழில்கள் துறையின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி கிராமத் தொழில்களில், சிறு தொழில்களுக்கான செலவு 2004-2005 ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு 55 கோடி ரூபாயிலிருந்து, 2004-2005 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் 44 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல தொழில்கள் என்ற தலைப்பிலான செலவினமும் திட்ட மதிப்பீடான 369 இலட்சம் ரூபாயிலிருந்து 320 இலட்சம் ரூபாய் என திருத்திய மதிப்பீட்டில் குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 2005 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் கடன்கள் என்ற தலைப்பில் 8 கோடி ரூபாய் அளவில் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கடன்கள், சிறு தொழில் கடன்கள், யார் யாருக்கு, எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற விவரத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் தோல் பதனிடும் தொழிலும், தோல் பொருட்கள் தயாரித்தலும் அதிகமாக உள்ளது. எங்கள் சமுதாய மக்கள் அதிலே செயல்பட்டு வருகிறார்கள். இத்தொழில் வளர்ச்சி அடைய அரசு கூட்டுறவு தோல் பதனிடும் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

அதேபோல அந்தியூர் பகுதியில் பருத்தி அதிகமாக - என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்கிறேன் - அந்தியூர் தொகுதியில் பருத்தி அதிகமாக விளைந்துகொண்டிருப்பதால், அங்குள்ள நெசவாளர்களின் கனவை நனவாக்கும் வகையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நூற்பாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்டு பர்கூர், தட்டக்கரை, தாமரைக்கரை, தேவர்மலை, தரிசுகண்டி, கல்வராயன்மலை போன்ற சுமார் 20 குக்கிராமங்கள் இருக்கின்றன. மலைப் பகுதிகளில் அங்கு மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். அரசு வனத் துறைக்குச் சொந்தமான காடுகளில் விளையும் கடுக்காய், நெல்லிக்காய், மாம்பழம், கடுகு, புளி போன்ற பொருட்களைத் தனியாருக்கு டெண்டர் விடுவதை இரத்து செய்து, அம்மலைவாழ் மக்களுக்கு டெண்டர் இல்லாது உரிமம் வழங்கி அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், "அருந்ததியர்"-க்கு தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று — மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் அருந்ததியினருக்கென தனி இட ஒதுக்கீடு தர வேண்டுமென தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன். எங்கள் சமூக நீதிக் காவலர், தமிழ்க் குடிதாங்கி, மருத்துவர் ஐயா அவர்கள் மொத்த மக்கள்தொகையிலுள்ள சாதிவாரிக் கணக்கின்படி விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு வேண்டுமென்று போராடி வருவதன் அடிப்படையில் அருந்ததியர் சாதியினருக்குத் தனி இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணன், இரண்டு மணித்துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மேலும், தமிழகம் முழுவதும் கதர் வாரியத்தின் கதர்த் துணி விற்பனை தேக்கம் அடைந்துள்ளது. இந்த நிலையைப் போக்க சிறப்புத் தள்ளுபடி செய்து விற்பனை செய்ய அரசு முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சிறு தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்கு மானியத்துடன் கடன் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். இதனால் கிராமப்புறங்களில் சிறு தொழில்கள் அதிகமாகப் பெருக வாய்ப்பு இருக்கிறது. எனவே, படித்த



வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அப்பகுதியிலேயே வேலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நமது கிராமம் என்ற ஒரு திட்டம் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாங்களும்கூட நல்ல திட்டம் என்று நினைத்தோம். ஆனால், சென்ற ஆண்டு 15 இலட்சம் ரூபாயை சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கி, இதுவரை பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதைப் பற்றி மாவட்ட திட்ட அலுவலரிடம் கேட்டால், இதற்கும் உங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து நல்ல ஒரு தீர்வை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியைப் பற்றி கொஞ்சம் பேசுகிறேன். இன்றைக்கு நாடு சுதந்திரம் அடைந்து *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு நிமிஷம்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதி கோரிக்கையை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** தொகுதிபற்றிப் பேசிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு சுதந்திரம் அடைந்து இதுவரையில் என்னுடைய தொகுதியிலே கலைக் கல்லூரி எதுவுமேயில்லை. ஏற்கெனவே இதுபற்றி அவையில் பேசியிருக்கிறேன். இன்றைக்கு பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம், ஏழை எளிய மக்கள் எல்லாம் 40, 50 கிலோ மீட்டர் சுற்றளவு கடந்து கல்லூரிக்குப் போக வேண்டியிருப்பதால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் கல்லூரிக்குப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. கல்லூரிக்குப் போக முடியவில்லை. ஏற்கெனவே அவையில் இதுபற்றிப் பேசியிருக்கிறேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* அந்தியூர் தொகுதியில்தான்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கிருஷ்ணன் மற்றவற்றையெல்லாம் கல்வி மானியத்திலே பேசிக்கொள்ளலாம். *(குறுக்கீடுகள்)* கல்வி மானியத்திலே பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** பருத்தி அதிகமாக விளைகின்ற சூழ்நிலையில், ஒரு நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இன்றைக்குப் படித்த பட்டதாரிகள் எல்லாம் வேலையில்லாமல், என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர நமது அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர்த் துறை, கைத்தறி மற்றும் பல்வேறு தலைப்புகளிலே வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி, எனது உரையைத் தொடங்குகின்றேன். நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்ற முதல் கூட்டம் என்று கருதுகின்றேன். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய தேயிலைத் தோட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு அறிவிப்பை இங்கே வெளியிட்டார்கள்.

நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தேயிலை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் சரியான விலை கிடைக்கக் கூடிய அளவிலே, கூட்டுறவுத் துறையின் மூலமாக இதைக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். அப்படி ஒரு தகவலைச் சொன்னார்கள். ஆனால், தற்போதுள்ள நிலையில் மற்ற பகுதிகளில் இருக்கின்ற மாதிரி, சிறு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற தேயிலை விலை குறைந்துபோய், அதன் மூலமாக அந்தப் பகுதியிலே தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் மத்தியிலே, ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை. எனவேதான் என்னுடைய கோரிக்கை, இந்தத் தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஏதாவது மானியம் கொடுத்து உதவ முடியும் என்றால் அந்த வகையிலே செய்வது சற்றுப் பொருத்தமாக இருக்கும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இதெல்லாம் சிறு தேயிலை விவசாயிகளுடைய பிரச்சினை என்ற முறையிலே நாம் பார்க்க வேண்டும்.

அதுபோன்றே நம்முடைய கதர்த் துறை. கதர்த் துறையைப் பொறுத்தமட்டில் நான் குறையாக அல்லது குற்றம் சாட்டுகின்ற வகையிலே சொல்ல முயலவில்லை.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஊட்டி தேயிலை விற்பனையின் மூலமாக வருகின்ற இலாபத் தொகை, சிறு விவசாயிகளுக்குத் தரப்படும் என்கின்ற அறிவிப்பைத் தொடர்ந்து 2001-2002 ஆம் ஆண்டு ரூ.31,75,000/- வழங்கப்பட்டிருக்கின்றது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.73,13,000/- வழங்கப்பட்டிருக்கிறது. 2003-2004-ல் 1 கோடியே 48 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 2 கோடியே 53 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் வந்த இலாபத்தைப் பிரித்து சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துகின்ற வகையிலே விவரங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். நன்றி. இருந்தாலும் தற்போதைய நிலை சம்பந்தமாக, அந்தப் பகுதியைச் சார்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் பல தகவல்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபோன்று, அந்த விவசாயிகள் மத்தியிலே ஒரு பதட்ட நிலை இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

அடுத்து, நம்முடைய கதர்த் துறையைப் பொறுத்தமட்டில் இப்போது எனக்கு ஒரு சந்தேகம் என்னவென்றால், அது அழிந்து கொண்டிருக்கிறதா அல்லது வளர்ந்து கொண்டிருக்கின்றதா என்ற ஒரு சந்தேகம். காரணம், இப்போது நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள்ளே ஒரு கதர் கடை பகுதியிலே இருக்கின்றது. அதுபோன்று பல்வேறு மாவட்டங்களிலே இருந்து வருகின்ற கதர் ஊழியர்களிலே 97 பேரை எந்தவிதமான காரணமும் இன்றி பணிநீக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கும் நீதிமன்றத்திற்கும் சம்பந்தம் இல்லை. அடுத்த கட்டமாகத்தான் 700 சொச்சம் அதிகமாக வருகின்ற ஊழியர்களை பதவிநீக்கம் செய்துவிடுவார்களோ என்ற ஐயப்பாட்டில் அவர்கள் நீதிமன்றத்திலே தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள்.

எனவே, என்னுடைய வேண்டுகோள் எல்லாம் இந்தத் துறையை நாம் பாதுகாக்கின்ற வகையிலே இந்த ஊழியர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே நாம் இந்தக் காரியங்களைப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஏற்கெனவே, கன்னியாகுமரி

மாவட்டத்திலே இது பிரத்தியேகமான பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்றது. அந்த மாவட்டத்தில் இருக்கின்ற கதர், அந்த போர்டு அல்லது அந்த வாரியம் அதை நெல்லை மாவட்டத்தோடு இணைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் சொல்லப்படுகின்றன. என்னுடைய வேண்டுகோள் எல்லாம், அந்த மாவட்டத்திலிருந்து அந்தத் துறையை நீங்கள் எடுத்துவிட்டால், அந்த மாவட்டத்திலே இந்தக் கதர் என்ற விவகாரத்திற்கே இடம் இருக்காது. எனவே, அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

*பிற்பகல் 12-45*

அதுபோன்று நம்முடைய கயிறு தொழில். ஏற்கெனவே 25, 30 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த கயிறு தொழில் என்பது, கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சொந்தமாக இருந்தது. ஆனால், இன்றையநிலையில் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் தென்னையிலிருந்து கிடைக்கக்கூடிய தேங்காய்ப் பட்டை நாரை எடுத்துக் கொண்டு கயிறு உற்பத்தி செய்கின்ற ஒரு பெரிய தொழிலாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள், தொழிலாளர்கள் வேலை செய்கின்ற அளவில் இங்கு வளர்ந்திருக்கின்றது. ஆனால், இன்றையதினத்திலே நைலான் கயிறும் மற்றும் பலவிதமான கயிறுகளும் வந்ததன் விளைவாக அதனுடைய வியாபாரம் பின்னடைவுக்கு வந்திருக்கின்றது. பொதுவாகச் சொன்னால் நம்முடைய கயிறினுடைய பெரிய market பூராவும் எங்கே இருந்தது என்று கேட்டால் கேரளாவில்தான். அதற்குக் காரணம், நம்முடைய தமிழ்நாட்டில் இருந்து உற்பத்தியாகின்ற அந்தக் கயிறு வெள்ளை நிறமாக இருக்கும். என்ன காரணத்தாலேயோ அது அங்கே கிராக்கியாக இருந்தது. அதற்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டு இருக்கின்றது. இதிலே ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புவது, காலஞ்சென்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.-அவர்களுடைய காலத்திலே கலிங்கராஜபுரத்திலே கயிறு பாய், கயிறு நெட் எல்லாம் உருவாக்கக்கூடிய ஒரு சிறிய குடிசைத் தொழிலாக அங்கே ஆரம்பித்தார்கள். இப்போது அங்கே யாரும் வேலை செய்வதாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், இதை வாங்குவதற்கு ஆள் இல்லை என்று சொல்லுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. என்னுடைய வேண்டுகோள் எல்லாம் - அரசினுடைய துறைகளிலே, நாம் இங்கே பயன்படுத்துகின்ற இந்த கயிறு மெத்தையை நாம் தனியார் துறையிலேதான் வாங்குகின்றோமே தவிர, அரசினுடைய துறை என்ற அடிப்படையிலே நாம் வாங்குவதில்லை. அந்த நிலையை மாற்றி நாம் இதை வாங்குவதற்குத் தயாராகின்றபோது அந்தத் தொழில் இன்னும் முன்னேற்றத்திலே செல்லமுடியும் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.



அடுத்தது, நம்முடைய பனைமரம் சம்பந்தப்பட்ட விவகாரம். இந்தப் பனைமரம் என்பது அது இன்றைக்கு அழிந்து வருகின்ற ஒரு தொழில் என்ற நிலையிலேதான் நான் பார்க்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் பனைமரம் ஏறுகின்ற, பதநீர் இறக்குகின்றவர்கள் யாரும் கிடையாது. அந்த அளவிலே நின்றுபோய்விட்டது. இப்போது தமிழ்நாட்டினுடைய ஈரப் பகுதிகளிலும், விருதுநகர், கோவை மாவட்டங்களிலும், வேறு சில மாவட்டங்களிலும் அந்தத் தொழில் நடைபெறுகின்றது. அதிலே ஏறுகின்ற அந்தத் தொழிலாளர்கள் காலையிலேயும் ஏறி, சாயங்காலமும் ஏறி, இரு வேளையும் 20 மரங்களில் ஏறி, இறங்கி பதநீரை இறக்குகின்ற ஒரு மகத்தான பணியை, தொழிலைச் செய்துவருகின்றார்கள். பதநீர் என்பது மருந்து அம்சங்களைக்கொண்ட ஒரு பொருளாக இன்றைக்கு நாம் பார்க்கின்றோம். அந்தப் பதநீரை இறக்குகின்ற தொழிலாளர்கள் மத்தியிலே இன்று கடுமையான, ஆத்திரம் கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்தப் பதநீர் இறக்குகின்ற தொழிலாளர்கள்—சாதாரணமாக சாராயத்தில் விஷம் சேர்ப்பார்கள் என்று நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால், கள்ளிலே விஷத்தைச் சேர்க்கின்றார்கள் என்று சொல்லி, காவல் துறை அதிகாரிகள் அவர்கள் மீது தவறான, பொய்யான வழக்குகளைப் போட்டு, நீதிமன்றத்திலே இழுத்தடித்து பெரிய தண்டனை வாங்கிக் கொடுக்கின்ற ஒரு நிலை இன்று பல மாவட்டங்களிலே இருக்கின்றது. எனவே, இந்தப் பதநீரிலே விஷத்தைச் சேர்த்தார்கள் என்று சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. அந்த வகையிலே அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதற்கு காவல் துறைக்கு நம்முடைய அரசும், பொறுப்புவாய்ந்த அமைச்சர் பெருமக்களும் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இந்தப் பதநீரைப் பயன்படுத்துவதிலே, இப்போது அதை குளிர் பானமாகப் பயன்படுத்தினால் நீண்டகாலம் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஏனென்றால் இது கடுமையான தொழில். எனவே, அந்த வகையிலே ஒரு குளிர் பானமாக இதை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்வது சிறந்ததாக இருக்கும். அதற்குப் பின்னாலே வருகின்ற licence முறை. ஏறி, இறங்குகிற அந்தத் தொழிலாளி ஒரு வருடத்தில் 60 ரூபாய் அரசிடம் செலுத்தி licence பெறவேண்டும். எனவே, licence வாங்குகிற சம்பிரதாயத்தை அதை நாம் வாங்கக் கூடாது.

நிறுத்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால் இது ஒரு கடுமையான உழைப்பு. எத்தனை மாதங்களுக்கு இருக்கும் என்று கேட்டால், 5 மாதங்கள், 6 மாதங்கள். அதற்கு மேலே அந்தத் தொழிலை அவனால் செய்யவும் முடியாது. அவர்கள் விவசாயத் தொழிலாளியாகப் போய்விடுவார்கள். ஆகவேதான் அந்த 60 ரூபாய் ... (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) 2 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** இரண்டு விஷயங்கள்கூட சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவற்றை வேறு நேரங்களில் பேசலாம்.

**திரு. டி. மணி:** அதேபோன்று பனை மரத் தொழிலாளியின் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவது, அவர்களுடைய licence சம்பிரதாயத்தை மாற்றுவது ஆகிய இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, தேன். தேன் என்று சொன்னாலே, தமிழ்நாட்டிலே ஒரு சிறந்த இடத்தைப் பிடித்திருக்கின்ற ஒரு பகுதி மார்த்தாண்டம் பகுதி. அங்கேயிருக்கின்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே இரண்டாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கின்றார்கள், ஒரு சீசன் வேளையிலே. இப்போது மூன்று மாதங்களாக சீசன் இருந்து, அவர்கள் பல்வேறு ஊர்களுக்கு தேனீக்களைக் கொண்டு சென்று, அந்தத் தேனைச் சேகரித்து, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொண்டு வருகிறார்கள். முந்தைய வருடம் அந்தக் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் அதிகமான கிலோ தேனை கொள்முதல் செய்தது. ஆனால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைச் சொல்கின்றபோது, 1-1/2 டன்தான் இன்றைக்கு purchase பண்ணியிருக்கின்றார்கள் என்ற ஒரு தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்க வளாகத்திலே தேனை வாங்காமல், அங்கே கேன் கணக்கிலே அந்தத் தேனை அதற்கு முன் பக்கத்தில் இருக்கிற தரையிலே போட்டு வைத்திருந்தார்கள். 400 கேன் தேன் இருக்கும். நான் ஒரு படத்தை எடுத்து, மாண்புமிகு அமைச்சருடைய கையிலே கொடுத்திருக்கிறேன்.



எனவே, இந்தத் தேன் உற்பத்தியிலே, நம்முடைய மாநிலத்திலே முதலிடத்தைப் பெறுவது மார்த்தாண்டம், இரண்டாவது இடத்தைப் பெறுவது ஜவ்வாது மலை. ஆனால், இதன் விலையைத் தீர்மானிக்கிறது யார்? நாம் உற்பத்தி செய்கின்ற ஒரு சரக்கினுடைய, ஒரு பொருளினுடைய விலையைத் தீர்மானிப்பது டெல்லியிலே இருக்கின்றவர்கள் அல்ல. அல்லது கேரளாவைச் சேர்ந்தவர்கள் அல்ல. அந்த விலையைத் தீர்மானிப்பதற்கு, அதைச் சேகரிக்கின்ற அதனுடைய சொந்தக்காரர்களுக்கு உரிமை வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** அந்த வகையிலே இந்த விலையை நிர்ணயிப்பதிலே சில கோளாறுகள் வந்து, இப்போது அதை purchase பண்ணுவதிலே மிகப் பெரிய சிரமம் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளும் சரியாக இல்லை, மாநிலத்திலே பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும் சரியாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பொத்தாம்போக்கிலே, மாநிலத்திலே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் சரியில்லை என்று சொன்னால் அதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், நீங்கள் சொல்லியிருக்கிற இந்தக் குற்றச்சாட்டை, ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்கு நேரடியாகத் தந்திருக்கின்றீர்கள். அதன் அடிப்படையிலே அங்கே விசாரிக்கப்பட்டு, உடனடியாக தேனுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கிலோ 48 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து, முதலிலே முன்பணமாக 25 ரூபாய் தரப்பட்டு, மீதியிருக்கிற பணமும் இந்த மாத இறுதிக்குள்ளே தர முடிவு செய்யப்பட்டு, வழங்கப்படும் என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். நேரிலும் தெரிவித்திருக்கிறேன். பொத்தாம்போக்கிலே மாநில அதிகாரிகள் சரியில்லை, மாவட்ட அதிகாரிகள் சரியில்லை, யாருமே சரியில்லை என்று சொன்னால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? உள்நோக்கத்தோடு பேசுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவிர்த்துவிட வேண்டும். ஏற்கெனவே, சம்பந்தப்பட்ட அதிகாரியை, ஓர் எதிர்க்கட்சி உறுப்பினருக்கு மரியாதை தரக்கூடிய வகையிலே நேரடியாக விவாதம் செய்யச் சொல்லி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கிலோ ஒன்றுக்கு 48 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, தந்து முடித்துவிட்டோம். மறுபடியும், மறுபடியும் அதே குற்றச்சாட்டை திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

[திருமதி பா. வளர்மதி] [2005 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த விளக்கத்திற்கு எல்லாம் நன்றி சொல்லலாம். ஆனால், அவர்களுடைய கோரிக்கை என்பது இப்போது விலைவாசி ஏறிப்போய்விட்டது. ஏனென்றால் இவர்கள் லாரியை எடுத்துக்கொண்டு போய்தான் இந்தக் கூடுகளையெல்லாம் கொண்டு வரவேண்டும். தேனை எடுத்துக்கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுடைய விருப்பம் என்பது, விவசாயிகளுடைய விருப்பம் என்பது 45 ரூபாய் அல்ல. 50 ரூபாய் கிடைக்க வேண்டும் தேனுக்கு. அதற்குள்ளே இருக்கக்கூடிய இன்னொரு விவகாரம், அதனுடைய இன்னொரு பகுதியைச் சார்ந்தவர்கள் அவர்களிடமிருந்து நீங்கள் வாங்கிய விலைக்கு எங்களுக்குத் தேனைக் கொடுங்கள் என்று சொல்கின்ற ஒரு தவறான போக்கு அந்த நிர்வாகத்திற்குள்ளே இருக்கிறது என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபார நோக்கத்தோடு வாங்க முடியாது. இது கூட்டுறவுச் சங்கம். என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த விலையிலேதான் வாங்க முடியுமே தவிர, வெளியிலே இருக்கக்கூடிய, கடையிலே விற்கக்கூடிய விலையை, நீங்கள் சங்கமும் தர வேண்டுமென்று சொன்னால், எப்படித் தர முடியும்?

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடையிலே இருக்கக்கூடிய விலையைச் சொல்லவில்லை. இந்த இலாகாவில் இருக்கக்கூடிய இன்னொரு பகுதியினர் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலேயிருந்து நீங்கள் வாங்கிய விலைக்கு எங்களுக்குக் கொஞ்சம் தேனைக் கொடுங்கள் என்று சொன்னால், அவர்களுக்குத் தர இயலாது. 50 ரூபாய் கிடைக்க வேண்டும் என்பதுதான் அந்த விவசாயிகளுடைய விருப்பம். ஏனென்றால் இந்தத் தடவை வந்து இருப்பவர்கள்—season மிகப் பெரிய season—குறைந்தபட்சம் 4 இலட்சம் கிலோவை அங்கே purchase பண்ணியிருக்கலாம். அதைச் செய்வதில் நம்முடைய அதிகாரிகள் சரியான கவனம் செலுத்தவில்லை. யாரையும் தனிப்பட்ட ரீதியாக குறை சொல்லவோ, குற்றஞ்சாட்டவோ விரும்பவில்லை. ஆக..



2005 மார்ச் 24]

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப தவறான தகவலையே மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார். 4 இலட்சம் கொள்முதல் அல்ல. 1 இலட்சத்து 50 ஆயிரத்து 960 கிலோதான் இந்த ஆண்டு பச்சைத் தேன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தடவை வந்திருக்கக்கூடிய season அடிப்படையிலே சரியாக அதை purchase பண்ணினால் 4 இலட்சம் கிலோ பண்ணியிருக்க முடியும். அதைச் செய்யவில்லை என்பதுதான். யார் தவறு செய்தாலும் சரி, அதைச் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அடுத்து.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வேண்டாம். வேண்டாம், நேரம் முடிந்து விட்டது.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதிலுரை வேறு இருக்கிறது. திரு. கண்ணன் (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுங்கள். திரு. மணி பேச்சை முடித்துவிடுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். திரு. கண்ணன்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, ஊட்டி தேயிலையிலே கிடைக்கின்ற இலாபத்தை அங்கே இருக்கின்ற சிறு தேயிலை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், ஊட்டி தேயிலையிலே வருகின்ற ஒட்டுமொத்த இலாபமும் INDCOSERVE நிறுவனத்தைச் சார்ந்தது. அதன் கட்டுப்பாட்டுக்குக் கீழே வருகின்ற 17 INDCO தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் எந்தத் தொழிற்சாலையானது நலிவுற்று இருக்கின்றதோ, அந்தத் தேயிலை தொழிற்சாலைக்கு ஒரு சிறிய தொகை, அந்த இலாபத்திலேயிருந்து

பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால், இந்த இலாபமானது சிறு தேயிலை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதுதான் இன்று இருக்கின்ற யதார்த்தமான நிலை. ஆகவே, இந்த ஊட்டி தேயிலையை விற்பனை செய்வதிலே வருகின்ற இலாபமானது சிறு தேயிலை விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுமா, அதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே சொன்னதே தவறான தகவல். அதன்படி 17 கூட்டுறவுச் சங்கங்கள் அல்ல. 15 கூட்டுறவுச் சங்கங்கள்தான். இந்த 15 கூட்டுறவுச் சங்கங்களிலே நலிவுற்ற விவசாயிகள் ஊட்டி tea-ஐ கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டுவந்து விற்பனை செய்யக்கூடிய அந்த விவசாயிகளிடத்திலிருந்துதான் நாம் பெறுகிறோம். ஆகவே, இதிலே வரக்கூடிய இலாபத்தை அந்த விவசாயிகளுக்கு பகிர்ந்து தருகிறோம். இதை பொத்தாம்போக்கிலே குற்றச்சாட்டு என்று சொல்லக்கூடாது. எந்தப் பகுதியிலே குறை இருக்கிறது என்று சொன்னால், அதில் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு தயாராக இருக்கிறது. ஆக, குற்றச்சாட்டு சொல்வதற்காகச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் சிறு தொழில் துறை சார்பாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். கொள்கை விளக்கக் குறிப்பில் சிறு தொழில்கள் துறையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். தமிழ்நாட்டில் நிலைத்த வேலைவாய்ப்பு அளிப்பதுடன் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் குறுந்தொழில் துறை முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்ட அதேநேரத்தில், 31-12-2004 வரை பதிவுபெற்ற சிறு, குறு தொழில்கள் 4 இலட்சத்து 85 ஆயிரம் என்றும், உற்பத்தி 40 சதவிகிதம் என்றும், ஏற்றுமதி 35 சதவிகிதம் என்றும், வேலைவாய்ப்பில் 35 இலட்சத்து 11 ஆயிரம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுவதாகவும் இங்கே குறிப்பிட்டீர்கள். நிதி அமைச்சர் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கின்றபோது சிறு தொழில் துறை முதலிடமாக உள்ளது என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். சிறு தொழில்கள் செயல் திட்டம் என்ற அடுத்த குறிப்பில் 12-வது பக்கத்தில் அனைத்திந்திய சிறு தொழில்



கணக்கெடுப்பு என்ற தலைப்பில் முதல் 3 கணக்கெடுப்புகள் முறையே 1972-73, 1990-92, 2000-2003-ல் பதிவு செய்யப்பட்ட சிறு, குறுந்தொழில்களுடைய எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 317. தற்போது இயங்குவது 1 இலட்சத்து 79 ஆயிரத்து 385. மூடப்பட்ட சிறு, குறு தொழில்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 27 ஆயிரத்து 832. கிட்டத்தட்ட 40 சதவிகிதம் சிறு, குறு தொழில்கள் புதிய பொருளாதாரக் கொள்கை அமலுக்குப் பின்னால் இங்கே மூடப்பட்டிருக்கின்றன என்று புள்ளிவிவரம் இருக்கின்றது. அப்படிப் பார்க்கின்றபோது, சிறு, குறு தொழில்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கவில்லை, சிறு, குறுந்தொழில்களைப் பாதுகாக்க இந்த அரசு தவறிவிட்டது என்று குறிப்பிட நான் விரும்புகிறேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்று பார்க்கின்றபோது தொலைநோக்குக் கண்ணோடு தமிழக முதல்வர் அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று இங்கே கொண்டுவந்து இருக்கின்றார்கள். வேளாண்மைசார் உணவு பதப்படுத்துதல் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதற்காக ஊரகப் பகுதியில் வேலைவாய்ப்பிற்கும், கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கும் தமிழக அரசால் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. பல்வேறு சலுகைகள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. 15 சதவிகித சிறப்பு மூலதன மானியம், சலுகை மின்சாரம், ஜெனரேட்டர் வாங்க 15 சதவிகிதம்..

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவர் சிறு தொழில் உற்பத்தியாளர்களின் சங்கத்திலே தலைவராகவோ, உறுப்பினராகவோ ஏதோ ஒரு பொறுப்பிலே இருக்கிறார். என்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதை அவர் அறிவார். இருந்தாலும் இது தொடங்கமுடியாமல் இதுபோன்று நலிவுற்று இருப்பதற்கு என்ன காரணம் என்றால், முதலில் இடத்துப் பிரச்சினை, பிறகு பங்குதாரர்களுக்குள்ளே இருக்கிற பிரச்சினை, பிறகு முதலீட்டுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினைகள் வருகிறபோது அவர்கள் தானாகவே விலகிக்கொண்டு போகிறார்களே தவிர—முதலில் ஆர்வத்தோடு வருகிறார்கள். அதன் பிறகு அவர்களே விலகிக்கொண்டு போகிறார்கள். அரசு செய்யக்கூடிய உதவிகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு தொழில் தொடங்குவதற்கு வருவார்களேயானால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து அவர்களை ஊக்குவிக்கும். ஆனால், அரசு சொல்கின்ற நிபந்தனைகளை ஏற்பதற்குத்

தயங்கிவிட்டு அவர்கள் போய்விடுகிறார்களே தவிர, இதில் அரசின் பொறுப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் பதிலுக்கு நன்றி கூறுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குத்தான் அரசு உதவி செய்ய வேண்டும் என்று என்னுடைய கோரிக்கையாக மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்றீர்கள். அதுமட்டுமல்லாமல், தொழில் தொடங்குவதற்குச் சான்றிதழ் வழங்குவதற்குக்கூட காலதாமதமாகிறது என்பதற்காக 12-9-2002 அன்று தற்காலிகச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மாநிலம் முழுவதும் 266 இணையதளங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார்கள். கட்டணம்கூட 50 ரூபாய்தான். 28-2-2005 வரையிலும் 30 மாதங்களில், ஆண்டுக்கு 14,000 என்று, 30 மாதங்களில் 65,596 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் நிரந்தரச் சான்றிதழ் 13,067. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தொழில் தொடங்குவதற்காக 385 ஒன்றியங்களில் 213 பேர்தான் இந்தத் தொழிலைத் தொடங்குவதற்காக இங்கே வந்திருக்கின்றார்கள்; அனுமதி பெற்றிருக்கின்றார்கள். அப்படி அவர்களுடைய முதலீடு 138 கோடியே 43 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்ட அதேநேரத்தில், வேலைவாய்ப்பில் 5,638 மகளிருக்கும், 8,335 பேருக்கு ஒட்டுமொத்தமாக வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் எதிர்பார்த்தபடி புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வெற்றியடையவில்லை, வேலைவாய்ப்புக்கும் பொருளாதார நிலைக்கும் உதவி செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாடகம் என்றால் பெங்களூர்...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** உதவியை அரசாங்கம் அதிகமாகச் செய்து வருகிறது. ஏற்கெனவேகூட தி.மு.க. உறுப்பினர் பேசுகிறபோது அவருக்கு நான் பதில் சொன்னேன். தொழில் தொடங்குவதற்கு முன்வராததற்குக் காரணம், முதலில் ஆர்வத்தோடு வருகிறார்கள்; அதன்பிறகு அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சூழ்நிலை, பிறகு நிலத்தினுடைய விலை, பிறகு இருக்கக்கூடிய சொத்துப் பிணையம், கடன் பெறுவதற்கு உரிய தகுதி நிர்ணயம், இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு காலதாமதம் ஏற்படுவதற்குத் தொழில் முனைவோர்கள்தான் காரணமே தவிர, அரசு அல்ல. அரசு பல்வேறு உதவிகளைச் செய்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு



சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். இயந்திரத் தளவாட முதலீட்டிலே 15 சதவீதம், அதிகபட்சமாக 15 இலட்சம் ரூபாய். 30 சதவீதம், 20 சதவீதம், அதிலே 10 சதவீதம் மின்கட்டண மானியம். அதிலே மகளிருக்கு வேலை கொடுக்கிறபோது 5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் கொடுக்கக்கூடிய தொகை, இப்படிப் பல்வேறு சலுகைகளைத் தந்து தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது அரசு.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூர் என்றால், அதற்கு தொழில் ரீதியாக ஒரு பெயர் உண்டு. Software city என்று அழைக்கப்படுகிறது. அதேநேரத்தில் தமிழகத்தின் தலைநகர் சென்னை என்றால், தொழில் துறை ரீதியாக Automobile city என்று அழைக்கப்படுகிறது. காரணம், குறைந்த செலவில் தரம் வாய்ந்த மோட்டார் உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் நகர் சென்னை நகர் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இவற்றைத் தயாரிக்கின்றார்கள் என்ற நிலை இப்போது இருக்கின்றது. ஆனால், கடந்த காலத்தில் இந்தியாவில் தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழகம் இப்போது எங்கே இருக்கிறது என்று புரியவில்லை. அமைச்சர் அவர்கள் பதில் தரவேண்டும்.

அதேநேரத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தருகின்ற சலுகைகள், அந்த மானியங்கள் எல்லாம் தர உத்தரவிட்ட பிறகும், இங்கே சென்னையிலும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் ஆரம்பிக்க, சிறு, குறுந்தொழில்களுக்குக் கடந்த காலத்தில் கொடுத்துக்கொண்டிருந்த சலுகைகள் கிடைப்பதில்லை. அவற்றை மீண்டும் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

SIDCO—தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் 1970-ல் தொடங்கப்பட்டது. இதுவரையிலும் ஏறக்குறைய 76 தொழிற்பேட்டைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் பராமரித்து வருகிறது. 4,972 மனைகளும், 4,222 தொழிற்கூடங்களையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால், தொழில் துறைக்கு அடிப்படையாக இருக்கின்ற குறுந்தொழில் முனைவோர்கள் இங்கே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள். காரணம், 200 சதுர அடி முதல் 600 சதுர அடி கொண்ட 1,841 குறுந்தொழில் கூடங்கள்தான் இதுவரையிலும் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு

நான் கொண்டுவர விரும்புகிறேன். இனிவரும் காலங்களிலாவது, தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துகின்றபோது, குறைந்தபட்சம் 10 சென்ட் நிலத்தை குறுந்தொழில் முனைவோர்களுக்கு தவணை முறையில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு நிலங்களை நிபந்தனையற்ற முறையில், நிபந்தனைகளைத் தளர்த்தி, குறுந்தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

SIDCO பராமரிப்புச் செலவு 6 சதவிகிதம் என்று அரசாணை உள்ளது. ஆனால், கிண்டி, அம்பத்தூர் போன்ற இடங்களில் நகராட்சியும் 6 சதவிகிதம் கேட்கிறது. அதுவுமில்லாமல், குடிநீர் வாரியமும் 30 சதவிகிதம் கேட்கிறது. ஒட்டுமொத்தமாக பராமரிப்புச் செலவு 6 சதவிகிதம் என்று ஆணை இருக்கின்றபோது, மற்ற நிறுவனங்களும் கேட்கின்ற நிலையிருக்கிறது என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, சிட்கோவில் இருக்கின்ற common purpose land என்று தொழில் முனைவோர்களுக்குத் தந்துவிட்ட பிறகு, அவர்கள் கடனைப் பெற்று கட்டடங்களைக் கட்டிய பிறகு, அவர்களுக்கு வேண்டிய document-ஐ சிட்கோ கொடுக்கத் தயங்குகிறது, காரணம் புரியவில்லை. அதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். உடனடியாக document-ஐக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தொழில் முனைவோர்களுக்குப் பல்வேறு வகையில் கடன் வசதி செய்து வருகிறது. நலிந்த தொழில் முனைவோர்களுக்கு வட்டி, கூட்டு வட்டியைத் தள்ளுபடி செய்கிறது, வரவேற்கிறோம். தாய்கோ வங்கியிலும் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலும், வாங்குகின்ற கடன்களுக்கு வட்டி சதவிகிதம் அதிகமாக இருக்கின்றது. சில கூட்டுறவு வங்கிகளில் 16% வரை வட்டி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். அதைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

SIDCO, TAHDCO நிறுவனங்கள்: ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்கு கோவை, முதலிபாளையம், ஈரோடு இக்கூரிலும் பின்னலாடை தொழிற்பேட்டைகளை அமைத்துத் தந்ததுபோல, பொன்னேரி தொகுதியில் காட்டுப்பள்ளித் துறைமுகத்தில் அமையும்



வெளிநாட்டு ஏற்றுமதி தொழில் பூங்காவில் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு, தொழில் முனைவோர்களுக்கு தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், இன்னும் ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) குறுந்தொழில் முனைவோர்களுக்காக ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறது. ரூ.25 இலட்சம் வரையிலும் கடன் வழங்கும் திட்டம், 12% வட்டி. ஆனால், இதுவரையிலும் குறுந்தொழில் முனைவோர்களுக்கு அதிகபட்சமாக ஏதும் செய்ததாக இல்லை. அதேபோல, சிறு தொழில்கள் நலிவிற்குக் காரணம், job order-கள் இல்லை என்பதுதான். நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டில், HYUNDAI போன்ற கம்பெனி ரூ. 2,200 கோடியில் தொழில் வளாகம் இங்கே ஏற்படுத்த இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். மத்திய பன்னாட்டுக் கம்பெனியானாலும், தனியார்த் துறை கம்பெனியானாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மத்திய மாநில அரசுகள் உருவாக்குகின்ற கம்பெனிகளில் job order-களை, சிட்கோமூலம் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 10 மணித்துளிகளுக்கு மேலாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** ஒரு நிமிடம். தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் 3 பேர், 5 பேர் பணிபுரிகின்ற குறுந்தொழில் கூடங்களில் தேவையற்ற சட்டங்களைக் காட்டி 16 வகையான ஆவணங்களை maintain செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தொழிற்சாலை ஆய்வாளர்கள் என்ற பெயரில், தொழிற்சாலைப் பாதுகாப்பு என்ற பெயரில், தேவையற்ற கெடுபிடிகளை அதிகாரிகள் செய்கிறார்கள். இதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்மா, ஆழக்கடலில் தேடி எடுத்த ஆணி முத்தே,
புயலின் மையத்திலிருந்து புறப்பட்டு வந்த தென்றலே,
செவிப்பறை கிழிக்க மின்னல் ரதத்தில் இடிகளை
ஒவ்வொரு சொல்லிலும் ஏந்திய எங்கள் விடியல் கீதமே,
தேவதைகள் வணங்கும் தெய்வமாய்,
மூங்கில் காட்டில் வீசும் மூலிகைக் காற்றாய்,
கண்களைக் கூச வைக்க வந்த அழகின் வெளிச்சமே,

அம்மா, உங்கள் திருவடிகளுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இலைதான் போட்டிருக்கிறோம்; இன்னும் பரிமாறவேயில்லை. அவசரத்தில் இலையைத் தின்றுவிட்டு ருசியில்லை என்கிறார்கள். பரிமாறுவதற்கு முன்னாலேயே பழிபோடத் தொடங்குபவர்களை என்ன பெயரிட்டு அழைப்பது? இந்த மானியக் கோரிக்கைதான் என்றில்லை. எந்தப் பிரச்சினையென்றாலும் சில பேர் இருக்கிறார்கள். இந்த ஆட்சிக்கு எதிராக ஏதாவது சின்ன விஷயம் கிடைத்தால்கூட, ஊதி ஊதி ஊதி பெரிதாக்கி விடலாம் என்பதில் ஊதுவதில் வல்லவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊதுவது என்பது, அவர்கள் பழக்கத்தில் மட்டுமே வந்ததல்ல. அந்த வித்துவான்கள் விருப்பப்படியே சுனாமி வந்தது. ஐந்து சொட்டு கண்ணீரைச் சிந்திவிட்டு, அரைப்படி இரத்தம் குடிக்கும் அந்தத் தலைவர்கள் ஆஸ்பத்திரியிலே போய் படுத்துக்கொண்டார்கள். கொளுத்தும் வெயிலில் கோட்டையை நோக்கி என்றால் கொடி பிடித்து வருவார்கள். ஆனால், செத்தவனுக்குச் சிந்த அவர்களிடம் கண்ணீர்ப் பஞ்சம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** உயிரோடு இருந்தால்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நான் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எங்கப்பன் குதிருக்குள் இல்லை, (குறுக்கீடுகள்) எங்கப்பன் குதிருக்குள் இல்லை உங்களுக்கு ஏன் கோபம் வருகின்றது? (குறுக்கீடுகள்) எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்று சொன்னால், உங்களுக்கு ஏன் கோபம் வருகின்றது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி... திரு. புகழேந்தி, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி... திரு. பொன்முடி (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஏதாவது கேட்க வேண்டுமென்றால் முன்வரிசையில் உள்ள தலைவர்கள் ஏதாவது பேசலாம். ஒட்டுமொத்தமாக எழுந்து கூக்குரலிடுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, கேட்கட்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியைப் பற்றி ஏற்கெனவே இந்த அவையிலே பேசி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) திரு. பரிதி, திரு. பொன்முடி உட்காருங்கள். உங்களுடைய தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் வளர்மதி அவர்கள் பேசுகின்றபோது (குறுக்கீடுகள்) யாரையும் பெயர் சொல்லி குறிப்பிடவில்லை. ஆனால், தி.மு.க. உறுப்பினர்கள் எப்போதும்போல் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதுபோல்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும் திரு. பரிதி இளம்வழுதி கட்டுப்பாடு மீறி நடக்கிறார். உறுப்பினர், திரு. பரிதி இளம்வழுதி கட்டுப்பாடு மீறி நடக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் கெட்ட வார்த்தைகளில் அமைச்சரைத் திட்டுகிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களைத் திட்டுகிறார். அவர்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, இதேபோல நீங்கள் நடந்துகொண்டிருக்கிற காரணத்தினால், (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி தொடர்ந்து அவை நடவடிக்கைகளைச் சீர்குலைக்கக்கூடிய வகையில் நடந்துகொள்கின்ற காரணத்தால் அவரை அவையை விட்டு அகற்ற வேண்டுமென்று காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். திரு. ஆற்காடு வீராசாமி நீங்கள் கேளுங்கள், கேளுங்கள். (குறுக்கீடுகள்)

(காவலர்கள் திரு. பரிதி இளம்வழுதியை அவையை விட்டு வெளியேற்றினர்.)



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இதுகுறித்து ஏற்கெனவே இந்த அவையிலே பேசப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர்தான் மருத்துவமனையிலே இருந்தார்; அவர், அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலே ஒரு கோடி நிதி கொடுத்தார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்தப் பிரச்சினைக்குள்ளேயே போகவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், அந்தப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்லவிடாமல், திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும், மற்ற தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும், தேவையில்லாமல் இங்கே ரகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள், யாரையும் பெயர் சொல்லிக் குறிப்பிட்டுப் பேசவில்லை. அப்படி இருக்கின்றபோது, வேறொரு நாளில், வேறொரு நேரத்தில், இந்த அவையில் பேசியவற்றையெல்லாம், திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் குறிப்பிட்டு, இப்போது அதைப்பற்றிக் குறிப்பிடுவது தேவையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த அவையில் எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாகிய நாங்கள், குறிப்பாக நான், எந்த நேரத்திலேயும், இந்த அவையினுடைய நேரத்தை ஒரு நிமிடம்கூட வீணாக்க விரும்பவில்லை. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அதுவல்ல. (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆனால், வேண்டுமென்றே எங்களை இந்த அவையிலே இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காகவே, நடவடிக்கை எடுக்கின்ற காரணத்தால் நாங்களாகவே வெளியேறுகிறோம்.

(தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் அவையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து சொட்டுக் கண்ணீரைச் சிந்திவிட்டு அரைப்படி இரத்தம் குடிக்கும் அந்தத் தலைவர்கள் ஆஸ்பத்திரியிலே போய் படுத்துக்கொண்டார்கள். கொளுத்தும் வெயிலில் கோட்டையை நோக்கி என்றால் கொடி பிடித்து வருவார்கள். ஆனால், செத்தவனுக்குச் சிந்த அவர்களிடம் கண்ணீர்ப் பஞ்சம். உயிரோடு இருந்தால் ஓட்டாவது கேட்கலாம். செத்தவனிடம் என்ன கேட்க முடியும் என்ற சித்தாந்தம் அவர்களைத் தடுத்துவிட்டது. உடல் நலம் இல்லையென்றால் உடல் நலம் பெற்ற பிறகு போய்ப் பார்ப்பதை யார் தடுத்தார்கள்?

வாரிசுக்குப் பட்டம் என்றால் வாரிச் சுருட்டிக் கொண்டு திண்டுக்கல் போகிறவர்களுக்கு, பக்கத்திலே இருக்கிற பட்டினப்பாக்கம் தெரியவில்லையா? வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார் என்று பேச்சுக்குப் பேச்சு சொல்கிறவர்கள், சுனாமிக்கு மட்டும் ஏன் சுருண்டு படுத்துக்கொண்டார்கள்? மக்களைச் சந்திப்பது மகத்தான பணி என்று பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் எங்கள் அம்மாவே நேரில் போனார். மூன்றே நாட்களில் முழு வீச்சில் நிவாரணப் பணிகள் நடக்கத் தொடங்கிவிட்டன. சம்பந்தப்பட்ட அதிகாரி ஊரில் இல்லையென்றால், செத்தவருக்கு, பிறகு செய்திகள் வரும். சுனாமியில் மிதந்த மனிதர்களை மட்டுமல்ல மரங்களையும் மீட்ட பெருமை எங்கள் அம்மாவுக்குத்தான் சொந்தம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால்,

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இதற்கு முன்னால் ஈழத்துக்கு இந்தியா தூதுக் குழு அனுப்பியிருக்கிறது. துப்பாக்கி அனுப்பியிருக்கிறது. ஆனால், இரண்டு அதிகாரிகளை இப்போதுதான் அனுப்பியிருக்கிறது. அதுவும் படை நடத்த அல்ல, பாடம் நடத்த. இந்தப் பெருமை யாரால் வந்தது? எப்படி வந்தது? சீறி வந்த அந்த சுனாமியால் மூடிக்கிடந்த கதவுகளை மெதுவாய் தொட்டு வைத்தவர் எங்கள் அம்மா. சோகப் பெருமூச்சுக்குள் சுழன்றுவரும் வீட்டுக்குள் எட்டு வைத்தவர் எங்கள் அம்மா. புன்னகை இழந்த பூக்களைத் தேடி பொட்டு வைத்தவர்





எங்கள் அம்மா. புரட்சியின் பாடலுக்கு மெட்டும் போட்டவர் எங்கள் அம்மா. பூமியின் காயங்களுக்கு கட்டுப் போட்டவர் எங்கள் அம்மா. இந்த ஆட்சிக் காலத்தில் எங்கள் அம்மா செய்து கொண்டிருப்பவை ஒவ்வொன்றும் சாதனைகள் மட்டுமல்ல, சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது எங்கள் அம்மாவால் எனக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்ற பட்டு வளர்ச்சித் துறையை எடுத்துக்கொள்கிறேன்.

எல்லா மாநிலங்களைக்காட்டிலும் பட்டு உற்பத்தியிலே நம்முடைய தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது. இப்பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் தரக்கூடிய விதத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை இந்தப் பட்டு வளர்ச்சித் துறைக்கு அளித்திருக்கிறார்கள். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட முன்மொழிவுகளைப் பரிசீலித்து அம்மா அவர்கள், நிலத்தடி நீர், பருவ மழையின் குறைவினால் குறைந்துவரும் நிலையில், 500 ஏக்கர் என்கின்ற திட்டக் குறியீட்டினை அடைய அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 2003-2004 ஆம் ஆண்டிலே 400 ஏக்கர் அளவிலே மல்பரி பயிரிடுவதற்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள்.

2004-2005 ஆம் ஆண்டில் 348.500 மெட்ரிக் டன் பட்டுக் கூடு உற்பத்தி செய்யப்பட்டது. அதிக அளவிலே வெண்பட்டுக் கூடு உற்பத்தி மூலம் விவசாயிகளின் வருவாய் அதிகரித்திட மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால், நம் நாட்டில் சீனாவிலிருந்து பட்டு இறக்குமதி அதிகரித்து, அதுவும் குறைந்த விலையில் சீனப்பட்டு கிடைத்த காரணத்தினால் நம் நாட்டில் பட்டு உற்பத்தி மிகவும் பாதிப்படைந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 100 முட்டைக்கு சராசரி பட்டுக் கூடு அறுவடை முறையை உருவாக்கி, 2002-2003-ல் 44.7 கிலோ, 2003-2004-ல் 52.06 கிலோ, 2005-ல் 58.40 கிலோ அடையப்பட்டு விவசாயிகளின் வருவாய் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கதர் கிராமத் தொழில் வாரியம். இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த ஆட்சிக் காலத்திலே எல்லாம் நஷ்டத்திலேதான் நடைபெற்று வந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின்

ஆலோசனையின்பேரில், அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் இப்போது இழந்து இருக்கிற நஷ்டத்தை சரிக்கட்டக் கூடிய சூழ்நிலையிலே கதர் கிராமத் தொழில் வாரியம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 12 கூட்டுறவுச் சங்கங்கள், மின்னணு உற்பத்திக்காக 7 கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக துவங்கப்பட்டன. இந்தக் காலகட்டத்திலேதான் கிராமப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு, இலவம் பஞ்சு மற்றும் நிலக்கடலை கொள்முதல் செய்வதில் வரி விலக்கு, அரசின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்பொருட்டு பல்வேறு சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்த கதர் ரகங்கள் 42 கோடி ரூபாய்க்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-ல் பதவியேற்ற பிறகு, இந்தத் துறை ஆய்வின்போது, அம்மா அவர்கள் முடிவெடுத்து, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலமாக, கதர் வேட்டிகள் 3 கோடி ரூபாய் மதிப்பிற்கு விநியோகம் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கி, அழுக்கடைந்த கதர் ரகங்கள் 10.64 கோடி ரூபாய் மதிப்பில் இருந்ததை, அதிகமான தள்ளுபடி வழங்கி, 6.65 கோடி ரூபாய் மதிப்பிற்கு விற்பனை செய்வதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் கதர், பருத்தி, பாலியஸ்டர் இரகங்களுக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும், கதர் பட்டு இரகங்களுக்கு ரொக்க விற்பனைக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும், பட்டு கடன் விற்பனைக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் ஒரே சீராக வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, இதன் பயனாக 41,500 ஏழையெளிய நெசவாளர்கள், நூற்பாளர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல. வாரியத்தின் தயாரிப்பான சோப்புப் பொருட்களின் விலை மலிவாக உள்ளதால், நல்ல தரமாக உள்ளதால், 8-7-2002 அன்று நியாயவிலைக் கடைகள் மூலமாக, விற்பனையை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, அந்த சோப்பு வகைகள்—ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும்



மாணவர்களுக்குத் தேவையான அனைத்து சோப்பு வகைகளும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இதனால், மாதம் ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை விற்பனை செய்த சோப்பு ரகங்கள் ஏறக்குறைய, சராசரியாக 5 மடங்காக இப்போது உற்பத்தி செய்யப்பட்டு, சோப்பு அலகிலே பங்கேற்கக்கூடியவர்கள் இன்றைக்கு இலாபம் சம்பாதித்திருக்கிறார்கள். மேலும், பொதுமக்கள் விரும்பி வாங்கிடும் வகையில், மூலிகா, சுகப்பிரியா, சூப்பர்கிளீன், ரப்-அப், எழில் ஷாம்பு போன்ற புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி, 1 கோடியே 98 இலட்சத்து 11 ஆயிரத்து 747 ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு, இன்றைக்கு கதர் கிராமத் தொழில் வாரியம் இலாபம் ஈட்டியுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேதான், 2003-2004 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட தோல் பொருட்கள், காலணி செய்யக்கூடிய அலகுகள் நடத்துகிறவர்கள், அம்மா அவர்களின் ஆணையின் பேரிலே, ரூபாய் 7 கோடியே 12 இலட்சத்து 4 ஆயிரத்திற்கும் நடப்பு ஆண்டிலே ரூபாய் 7 கோடியே 6 இலட்சத்து 87 ஆயிரத்திற்கும் உற்பத்தி செய்து, அந்தத் தோல் அலகுகளும் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரிலே, இப்போது ஈட்டியிருக்கின்ற இலாபம், ரூபாய் 1 கோடிக்கு மேலாக ஈட்டியிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2003-2004 ஆம் ஆண்டு வரை 1,118 பயனாளிகளுக்கு 4.73 கோடி ரூபாய் விளிம்புத் தொகை மானியம், கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. 2003-2004 ஆம் ஆண்டு 43 பயனாளிகளுக்கு 55 இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகை மானியம் விடுவிக்கப்பட்டிருக்கிறது. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு வழங்கும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டிற்கு கிராமப்புற மக்களுக்காக 3 கோடியே 98 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 2001-2005 ஆம் ஆண்டுகள் வரை மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி, கதர் ரகங்களின் விற்பனை 70 கோடியே 69 இலட்சத்து 73 ஆயிரமும் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை 47 கோடியே 1,000/- ரூபாயும் எய்தப்பட்டு, கிராமக் கைத்தொழில் வாரியம் மிகச் சிறப்பான முறையிலே, அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி செயல்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு தொழில்கள். சிறு தொழில்கள் என்பது, சிறு தொழில், குறுந் தொழில் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இயந்திரம் மற்றும் தளவாடங்களில் 1 கோடி ரூபாய்க்கு மிகாமல் முதலீடு செய்திருந்தால் அதனைச் சிறு தொழில் எனவும், 2.5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் முதலீடு செய்திருந்தால் அதனை குறுந் தொழில் எனவும் வகைப்படுத்தலாம்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு அம்மா அவர்கள்—படிப்படியாக தொழிலை பெருக்கக்கூடிய விதத்தில் நடுத்தரத் தொழிலைப் பெருந் தொழிலாக உயர்த்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் நோக்கம். தமிழ்நாட்டிலே இதுவரை 4.8 இலட்சம் சிறு தொழில் அலகுகள் பதிவு செய்யப்பட்டு, 13,515 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, 35.11 இலட்சம் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்த திட்டம் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். 28-6-2002-ல் மாண்புமிகு அம்மா அவர்களாலே இந்தியாவிலேயே முதன்முதலாக அறிவிக்கப்பட்ட தொலைநோக்குப் பார்வைத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை ஏற்கெனவே நான் பதிலில் சொல்லும்போது சொன்னேன். இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் தொழில் தொடங்க முடியும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே பிறந்த ஒருவர் சென்னையிலே பட்டயக் கணக்கராகப் பணியாற்றி, தூத்துக்குடிக்கு அருகேயுள்ள ஊரகப் பகுதியிலே மீன் எண்ணெய் உற்பத்தி செய்யும் அலகை நிறுவி 100 சதவிகிதம் ஏற்றுமதி செய்து வருகிறார் என்பது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உசிலம்பட்டியிலே, ஊறுகாய் சிறிய அளவிலே தயாரிக்கும் நிறுவனம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மதுரைக்கு அருகில் கப்பலூரில் கூடுதல் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. ஊறுகாய் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தமிழ்நாட்டிலும், ஆந்திர மாநிலத்திலும் கொள்முதல் செய்யப்பட்டு, 50 பைசா, ஒரு ரூபாய் என



பாக்கெட்டுகள் செய்யப்பட்டு கேரள மாநிலத்திலும், மகாராஷ்டிரா மாநிலத்திலும் அமோகமாக விற்பனை செய்யப்படுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் உதித்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே, ஊரக வளர்ச்சியின் ஊற்றுக்கண், ஊரகப் பொருளாதார வளர்ச்சியின் நாற்றங்கால் என்பதை இந்தத் திட்டத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தென்னை நார்க் கழிவு, சுற்றுச்சூழலை மாசுபடுத்துகிறது என்ற நிலை மாறி, இந்தக் கழிவினைத் திரட்டி, கட்டிகளாக மாற்றி, coir pith என்று, முழுவதும் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளை உற்பத்திசெய்யும் தொழில் அலகுகள் பொள்ளாச்சியிலும், கொடுமுடியிலும், கரூரில் பரமத்தியிலும், கன்னியாகுமரி மாவட்டம்—ராஜாக்கமங்கலத்திலும், சிவகங்கை மாவட்டம்— காளையார்கோவிலிலும், திருநெல்வேலியிலும், மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டியிலும் நிறுவப்பட்டுள்ளன. நன்னீர் இறால் பண்ணைகள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிறுவப்பட்டிருக்கின்றன.

நவீன அரிசி ஆலைகள் உலகத் தரத்தை அடைவதற்காக நிறம், தரம் பிரித்து எடுக்கும் இயந்திரத்தையும், பாலிஷ் செய்யும் இயந்திரத்தையும், கூடுதலாகச் சேர்த்து இத்திட்டத்தின்கீழ் புதிய அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. பால் பதனிடப்பட்டு, பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும், மதுரை, பெரம்பலூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, விழுப்புரம், ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலே நிறுவப்பட்டிருக்கின்றன. உலகத் தரத்திலே உயர் தொழில்நுட்பம் அடைய இயந்திரங்களை வாங்குவதற்கு வங்கிகள் நிறுவனங்களுக்கு கடன் தர வேண்டும். அவ்வாறு பெறப்படும் கடனுக்கான வட்டியில் மூன்று சதவிகிதம் வரை ஒவ்வொரு அலகிற்கும் 5 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வரை பின்முனை வட்டி மானியம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே, இந்த பின்முனை வட்டி மானியம் என்பது சிறு தொழில் வரையறைக்கு உட்பட்ட அனைத்து வகை உற்பத்திப் பொருட்களுக்கும் வழங்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டும்தான். மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் அவர்கள் பேசுகின்றபோது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். இந்தப் பின்முனை வட்டி மானியம் என்பது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும்

செயல்படுத்தப்படாத ஒரு முறையை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த காரணத்தினால், பல சிறு தொழில்முனைவோர்கள் இன்றைக்கு ஆர்வத்தோடு வந்துகொண்டிருக்கிறார்கள்.

இதேபோன்று ஐஎஸ்.ஓ. 9000 தரச் சான்றிதழ் பெறுவதற்காக, வங்கியில் கடன் உதவி பெற்றாலோ அல்லது அறிவுசார்ந்த சொத்துரிமை பதிவு செய்வதற்காக கடன் பெற்றாலோ, கடனுக்கான வட்டியிலே மூன்று சதவிகிதம் வரை மானியம் வழங்கப்படும் திட்டம், இந்தியாவிலேயே இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்யக்கூடிய தமிழ்நாட்டிலேதான் செயல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், உலகச் சந்தையிலே சந்தை வாய்ப்பைப் பெருக்குவதற்கு சிறு தொழில் அலகுகள் தனித் தனியே உற்பத்தி செய்யாமல், கூட்டாக இணைந்து உற்பத்தி செய்வதற்கு குழும வளர்ச்சித் தத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, உற்பத்திப் பொருட்களை - தரமான உற்பத்திப் பொருட்களை உருவாக்க ...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** குழும வளர்ச்சித் தத்துவம் என்று பெயரிடப்பட்டு, அதன்மூலம் 5 இலட்சம் ரூபாய் மானியம் பெறுவதற்கு, தஞ்சாவூர் மாவட்டத்திலே வெண்கல உலோகப் பொருட்கள் தயாரித்தல், திருநெல்வேலி மாவட்டத்திலே கோரைப் பாய் தயாரித்தல், திருவாரூர் மாவட்டத்திலே தீப்பற்றாத தென்னம் பாய்கள் தயாரித்தல், மதுரை மாவட்டத்திலே சோப்பு தயாரித்தல், மதுரை மாவட்டத்திலே ஆயத்த ஆடை தயாரித்தல் ஆக 5 திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. சிறு தொழில் நிறுவனங்களின் திறனை மேம்படுத்த உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு 675 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியைப் பெற 50 கோடி ரூபாய் மானியத்தை தமிழ்நாட்டுக்குப் பெற, இதுவரை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரிலே 9 விவர திட்ட அறிக்கைகள் மைய



அரசுக்கு அனுப்பப்பட்டு, 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மானியமும் வழங்கப்பட்டுவிட்டது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மைய அரசு திட்ட மதிப்பீட்டிலே 40 சதவிகிதம் வழங்கும் மானியத்திற்கு ஈடாக மாநில அரசும் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு 40 சதவிகிதம் மானியம், அதாவது அதிகபட்சமாக 2 கோடி - 2 கோடி இணை மானியமாக வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவது இந்தியாவிலேயே அம்மா ஆட்சி நடத்தக்கூடிய தமிழ்நாட்டிலேதான். கிண்டி தொழிற்பேட்டைக்கு 2 கோடி ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டு, ரூபாய் 1 கோடி முன் பணமாக அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் அவர்கள் கிண்டி தொழிற்பேட்டையிலே அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டாகிவிட்டது. இன்னும் ஒரு மாத காலம் அல்லது இரண்டு மாத காலத்திற்குப் பிறகு நீங்கள் கிண்டிக்குப் போகிறபோது, அது உலகத் தரத்திலேயே மிக முக்கியமாக விளங்கக்கூடியதாக கிண்டி தொழிற்பேட்டை அமையும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஓசூர் தொழிற்பேட்டைக்கு 23.94 இலட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி—ஓசூர் தொழிற்பேட்டைக்கு—வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற 5 இலட்சம் மகளிருக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்க வேண்டுமென்கிற ஆணையை ஏற்று, சிறு தொழில் துறைக்கு 75 ஆயிரம் பேர்கள் என்கிற இலக்கு கொடுத்து, அந்த இலக்கின்படி 75,535 மகளிருக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு விட்டது. இவர்களில் கிட்டத்தட்ட 29,500 மகளிர் சுய தொழில் துவங்கியுள்ளார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம், இந்தத் துறையின் மூலமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற மாநிலம் நம்முடைய அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழ்நாடு என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 4 ஆண்டு காலத்தில் 60 ஆயிரம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 59,222 நபர்களுக்கு வங்கிகள் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, 52,288 நபர்களுக்கு 215.15 கோடி ரூபாய் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இன்றைக்கு பயன்பெற்றுள்ள நபர்கள் எல்லாம் தொழில்முனைவோர்களாக வளர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல தேயிலை. இங்கே பேசிய உறுப்பினர் கந்தசாமி அவர்கள், மஹேஸ்வரி அவர்கள் எல்லாம் சொன்னார்கள். நீலகிரி தேயிலையைக் கொள்முதல் செய்வோர்களிடையே தேவையை அதிகரிக்கச் செய்யவும், அதன்மூலம் தேயிலைத் தூளுக்கு உயர்ந்த விலை கிடைப்பதை உறுதி செய்யவும், குன்னூர் மற்றும் கோயம்புத்தூர் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்ட தேயிலைத் தூளுக்கு தமிழ்நாடு விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், மத்திய விற்பனை வரி 1 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் வரிச் சலுகை வழங்கி உள்ளவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீலகிரி மாவட்ட தேயிலைக்கு தமிழ்நாட்டிலேயே பெரிய அளவில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் 'ஊட்டி டீ' விற்பனைத் திட்டத்தை 28-8-2001-ல் துவக்கி வைத்தார்கள். இந்தத் திட்டம் தொடங்கிய நாளிலேயிருந்து 28-2-2005 முடிய ரூ.7,884 இலட்சம் மதிப்பிலான 10,512 மெட்ரிக் டன் 'ஊட்டி டீ' விற்பனை செய்து இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் இம்மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

'ஊட்டி டீ' விற்பனையில் கிடைக்கும் இலாபம் சிறு விவசாயிகளுக்கு தாங்கள் விநியோகித்த பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய ஊக்கத் தொகையாக ரூ.253.48 இலட்சம் கடந்த மூன்று ஆண்டு காலங்களில் வழங்கப்பட்டு, 12,500 சிறு விவசாயிகள் மாண்புமிகு அம்மா



அவர்களின் ஆட்சிக் காலத்திலே பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மின்னணு தேயிலை மையம். தேயிலையின் விற்பனை வீழ்ச்சி தொடர்ந்து நீடித்ததால், தனியார் ஏல மையங்களின் தரகர்கள், கொள்முதல் செய்யும் வியாபாரிகள் கூட்டு சேர்ந்து விலையைக் குறைத்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வரப்பெற்று, அதற்கு நிவாரணம் தரவேண்டுமென்று கேட்டு, அதன் அடிப்படையிலே 12 தேயிலை மையங்கள் உலகத்தில் இருப்பதில், 7 மையங்கள் இந்தியாவில், வெளிநாடுகளில் 5 மையங்கள், அவை அனைத்துமே சாதாரண மையங்கள். ஆனால், தேயிலை உற்பத்தியாளர்களே தங்களது தேயிலைத் தூளுக்கு விற்பனை செய்துகொள்ளலாம், தேயிலைத் தூள் விற்பனையை வெளிப்படையாக— இரகசியமாக அல்ல, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல இரகசியமாக அல்ல வெளிப்படையாக— நடத்துவதற்கு கூட்டுறவு அமைப்பில், Tea Serve என்ற பெயரில் உலகிலேயே முதன்முதலாக புதிய மின்னணு ஏல மையத்தை குன்னூரிலே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 13-9-2003-ல் தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் விற்பனையாகின்ற தேயிலைத் தூளுக்கு வரிச் சலுகை அளித்த பிறகு, ரூபாய் 98 கோடியே 76 இலட்சம் மதிப்பிலான 25,163 மெட்ரிக் டன் தேயிலைத் தூள் இன்றைக்கு விற்பனையாகியிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நீலகிரி மாவட்டத்திலுள்ள 23,000 சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, தேயிலை விலை வீழ்ச்சியடையும் ஆண்டுகளில் ஒவ்வொருவரும் ஆயிரம் ரூபாய் பெற்றுப் பயனடையலாம்; இந்தத் திட்டத்தில் சேர உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ.500/- வீதம் பங்களிப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும்; சிறு தேயிலை விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையான 115 இலட்சம் ரூபாயை, 23,000 சிறு தேயிலை விவசாயிகள் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களே வழங்குகிறேன் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டு, அதுவும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள குந்தா மண்டல தேயிலைத் தோட்டங்களைப் புனரமைக்கும் திட்டத்திற்கு தேயிலை வாரியத்தோடு இணைந்து செயல்படுத்த, 20 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே இந்த அரசால் வழங்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல SAGOSERVE. மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க ஒரு கூட்டுறவு நிறுவனம் அவசியம் என்பதை அரசு கருதியதால், 1981 ஆம் ஆண்டே SAGOSERVE என்கிற தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இந்த SAGOSERVE ஆரம்பித்த பின்னர் ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களுக்கு நிதி வசதி, கிடங்கு வசதி, இவர்கள் தேக்கி வைக்கக்கூடிய, சேமித்து வைக்கக்கூடிய 2.25 இலட்சம் மூட்டைகள் அடுக்கும் அளவுக்கு சொந்தக் கிடங்குகள் வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகுதான் அவர்களுக்கு கிடங்கு வசதியே அமைத்துத் தரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தினசரி tender முறையிலே உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியாகும் விலைக்கு விற்கும் திறனை SAGOSERVE ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இதன்மூலம் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்கிறது. SAGOSERVE மூலம் விற்பனை செய்வதை ஊக்குவிக்கும்வண்ணம் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் பொருட்களுக்கு விற்பனை வரியினை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அதையும் சேர்த்து அறிவித்திருக்கிறார்கள். SAGOSERVE-ல் கொள்முதல் செய்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் ஜவ்வரிசி, ஸ்டார்ச் பொருட்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பரிந்துரையின்பேரில் மத்திய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

தாராள பொருளாதாரமயமாக்கல் கொள்கையால், உலக வர்த்தக ஒப்பந்தங்களால், இறக்குமதி வரி குறைந்ததாலும் கடந்த நான்கு ஆண்டுகளாக ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தொழில் கடுமையான



ஆபத்தினைச் சந்தித்து வருவதாலும் மாண்புமிகு அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 9-2-2005 அன்று எழுதிய கடிதத்தில், மரவள்ளிக் கிழங்கு மாவு, ஜவ்வரிசி மற்றும் மாற்றம் செய்யப்பட்ட கிழங்கு மாவுக்கு உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தின்படி முறையே 100 சதவிகிதம், 150 சதவிகிதம் மற்றும் 150 சதவிகிதம் என்ற விகித வரம்பிற்குட்பட்ட சுங்க வரியை உயர்த்தலாம் என்று உள்ளதால், உள்நாட்டுத் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்கு இம்மூன்று பொருட்களுக்கும் சுங்க வரியையும் மற்றும் அமல்படுத்துவதற்கான சுங்க வரி விகிதாச்சாரத்தையும் உயர்த்துவதற்கு அனைத்து வாய்ப்புகளும் உள்ளதாகத் தெரிவித்து, இந்த மூன்று பொருட்களுக்கான சுங்க வரியினை 100 சதவிகிதமாகவும், நடைமுறையில் அமல்படுத்தப்படும் வரி விகிதத்தைக் குறைந்தபட்சம் 60 சதவீதமாக அதிகரிக்குமாறும், தாய்லாந்து நாட்டுடன் ஏற்படுத்தப்பட்ட இலவச வியாபார ஒப்பந்தத்தில் ஜவ்வரிசி, ஸ்டார்ச் மற்றும் Modified Starch ஆகியவற்றை எதிர்மறைப் பட்டியலில் சேர்க்க மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு தொழில் நிறுவனம் என்பது SIDCO. SIDCO நிறுவனம் சிறு தொழில் கூடங்களுக்கு மூலப் பொருட்களை வழங்குவது, விற்பனை உதவித் திட்டம் செய்வது போன்ற காரியங்களைச் செய்து வருகிறது. தொழிற் பூங்காக்களை அமைத்து, அதன்மூலம் தொழிற் பூங்காக்கள் மகளிருக்கு முன்னேற்றம் தருவதற்கும், அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் SIDCO நிறுவனத்திற்கு அறிவுறுத்தி, அதன் அடிப்படையிலே பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய அறிவிப்புகளிலே அறிவிக்க இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய அறிவிப்புகள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அதிக அளவு தொழில்கள் தொடங்கத் தேவையான விவரங்களையும் சாத்தியக்கூறுகளையும் சிறு தொழில்முனைவோருக்கும், குறிப்பாக மகளிர் தொழில்முனைவோருக்கும் அளிக்க 15 மாவட்டங்களில் தொழில் கருத்தரங்குகள் நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் முனைப்புடன் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

16 மாவட்ட ஏற்றுமதி வழிகாட்டி மையங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் செலவில் இணையதளத்துடன் கூடிய கணினி வசதி அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட தொழில் கண்காட்சி சென்னையில் நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

சென்னையில் நிறுவப்பட்டுள்ள மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கான அடிப்படை விவர வங்கி மற்றும் தொழில் மையத்தில் தொழில்நுட்பம் பயிலும் மாணவர்கள் மற்றும் புதிய தொழில்முனைவோர்களுக்குத் தேவைப்படும் விவரங்களை நகல் எடுப்பதற்கு ஒரு நகல் எடுக்கும் இயந்திரம், மின் நிலைப்படுத்தும் கருவி ஆகியவை ரூபாய் 90 ஆயிரத்தில் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

கயிறு தொழில் குறித்த விழிப்புணர்வைத் தோற்றுவிக்க 5 மாவட்டங்களில் கயிறு வாரியத்துடன் இணைந்து கருத்தரங்குகளை நடத்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

திருச்சி மாவட்டத்திலே வெங்கடாசலபுரம் ஆதிதிராவிடர் செங்கல் பணியாளர்கள் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துள்ளார்கள்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தரச் சான்றிதழ் வழங்குவதற்கு, தர நிர்ணயம் செய்வதற்கு ஆய்வுக் கூடம் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

சிறு தொழில்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மைய அரசின் திட்டத்தில் மாநில அரசு பங்கேற்கும் வகையில் ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.



கோயம்புத்தூரில் உள்ள 700 Wet Grinder உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 2 கோடியே 83 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டு அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் மைய அரசிலே கேட்டு இன்றைக்கு ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள்.

திருச்சியில் உள்ள டிரக்-ஸ்டெப் வளர்ப்பகத்திற்கு மாநில அரசின் பங்காக ரூபாய் 50 இலட்சத்தை இரண்டு ஆண்டுகளில் வழங்க உத்தேசிக்கப்பட்டு இதற்காக 2005-2006 ஆம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 66 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்ட கோயம்புத்தூர் பம்ப் மோட்டார் மற்றும் வார்ப்படம் சார்ந்த குழுமத் திட்டத்தின்கீழ் 12,500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 35 ஆயிரம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும், ரூ. 33.77 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆம்பூர் தோல் பொருட்கள் தொழில் குழுமத் திட்டத்தின்கீழ் 13,400 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பும் கிடைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பரிந்துரையின் பேரில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-45

அரசு அளிக்கும் பல்வேறு மானியங்கள் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு சென்றடைவதை ஆய்வு செய்ய சிறு தொழில் துறை செயலர் மூலம் சம்பந்தப்பட்ட அரசு வங்கிகள், அரசு நிறுவன அதிகாரிகளைக் கொண்ட மாநில அளவிலான குழு அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். சிறு, குறுந்தொழில்களுக்கு மூலப்பொருட்களை வழங்குவதற்கு சிறு தொழில் அலகுகளுக்கு விநியோகிக்கும் முகவராக சிட்கோ செயல்பட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்களுக்கு உதவும் வகையில், மூலப் பொருட்கள், முழு விவரங்கள் தயாரிக்கும் முறை, அணுக வேண்டிய அலுவலகங்கள், கடன் பெற வழிவகைகள் ஆகியவை அடங்கிய முழுமையான தொகுப்பை வெளியிட்டு அதை மாவட்டத் தொழில் மையம் மூலம் விற்பனை செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். சிறு மற்றும் குறுந்தொழிற்கூடங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அவற்றின் விற்பனை வாய்ப்பு பற்றி சிட்கோ ஆய்வு நடத்தி, சிறு தொழில் அலகுகளுக்கு ஆலோசனை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் உள்ள சிறு தொழில் அலகுகளைப் புதுப்பிப்பதற்கான காலக்கடன் தொகைக்கான வட்டியில் 3 சதவிகிதம் வரை 5 ஆண்டுகளுக்கு பின்முனை வட்டி மானியம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இது தவிர, மூலதனக் கடன் பெற்றால் அந்தத் தொகைக்கான வட்டியில், 5 சதவிகிதம் வரை மானியம் ஓராண்டிற்கு வழங்கப்படும். இதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கத் தேவையான குளிர்பதனக் கிடங்குகள் அதிக அளவில் அமைக்கப்படுவதை ஊக்குவிக்க சிறப்பு மின் கட்டணச் சலுகையாக ஓராண்டுக்கு 3 இலட்சம் அல்லது 50 சதவிகிதம், இதில் எது குறைவோ அந்தத் தொகையை 4 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாய் வழங்கி, இதற்காக 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். சிறு தொழில் அலகுகள் பிற மாநிலங்களில் நடைபெறும் தொழிற் கண்காட்சிகளில் பங்கேற்பதை ஊக்குவிக்க அரங்கு வாடகையில் 25 சதவிகிதம் மானியம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்து, இதற்காக 2005-2006 ஆம் ஆண்டில் 15 தொழிற் கண்காட்சிகளில் பங்கேற்க ரூ.45 இலட்சம் மானியம் வழங்கப்படும். தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தை மேம்படுத்த மைய அரசு 50 சதவிகிதம் மானியம் முன்பு வழங்கி வந்தது. அது நடப்புக் காலத்தில் 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டதால், மீதமுள்ள 75 சதவிகிதம் கடனாகப் பெற சிறு தேயிலைத் தொழிற்சாலைகள் முன்வரவில்லை. தொழிற்சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மைய அரசு குறைத்துள்ள 25 சதவிகித மானியத் தொகையை, மாநில அரசு இணையாக வழங்க முடிவு செய்து, 6 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ரூ.278 இலட்சத்தினை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் சிறு தொழில்களை ஊக்குவிக்கும்பொருட்டு, 1957, 1979 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் வழங்கிய மாநில உதவிக் கடன், ஊரகத் தொழிற் கடன் மற்றும் விளிம்புத் தொகை உதவி போன்ற கடன்களை வசூல் செய்ய ஏற்ற வகையில் ஒரே முறையில்



திரும்பச் செலுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்து, இதனால் 11,899 தொழில்முனைவோர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின்கீழ் நீண்டகாலமாக வசூலாகாத அசல் 2 கோடியே 39 இலட்சமும், வட்டி ரூபாய் 60 இலட்சமும் வசூலிக்க வாய்ப்பு ஏற்படும். மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் தொழில்முனைவோர் செலுத்த வேண்டிய ரூபாய் 4 கோடியே 96 இலட்சம் அபராத வட்டியைத் தள்ளுபடி—செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) 4 கோடியே 96 இலட்சம் அபராத வட்டியை மாண்புமிகு அம்மா அவர்கள் மனித நேயத்தோடு தள்ளுபடி—செய்திருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கைத்தறி, கைத்திறன், துணிநூல், கதர் நூற்பாலை நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பணப் பயன் 20 ஆயிரத்தை 50 ஆயிரம் ரூபாயாக வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்டதை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே வழங்கியிருக்கின்றார்கள். கேட்காமலேயே கொடுக்கக்கூடிய தெய்வம் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் ஏற்கெனவே புதிய அறிவிப்புகளில் இடம் பெற்றிருந்த காரணத்தால் நான் உங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

பட்டுப் புடவைகள், தரமான பட்டுப் புடவைகளாக இருப்பதால், மைய அரசினால் பட்டுப் புடவை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சில்க் முத்திரை, கதர் வாரிய பட்டுப் புடவைகளுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பரிந்துரையின் பேரிலே கிடைத்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் சென்னை, சேலம், மதுரை, திருப்பூர் ஆகிய அலுவலகங்கள் 6.30 இலட்சம் ரூபாய் செலவில் கணினிமயமாக்கப்பட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-50

கடலூரிலே பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணைய பதநீர் உற்பத்திப் பிரிவை ரூ.5.50 இலட்சம் செலவில் நவீனப்படுத்தவும், திருநெல்வேலி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளன பதநீர் உற்பத்திப் பிரிவினை நவீனப்படுத்திட ரூ.5.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கவும், ஈரோடு மாவட்டம், சிறுவலூரில்

ரூ.2.50 இலட்சம் செலவில் பனங் கற்கண்டு உற்பத்திப் பிரிவு நிறுவவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 200 ஏழை பனைத் தொழில் கைவினைஞர்கள் பயன் பெறும்வண்ணம் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3 இலட்சம் செலவில் வழங்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் விளைச்சல் தரும் வி 1, எஸ் வரிசை மற்றும் எம்.ஆர். 2 மல்பரி இரகங்களை நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும்வண்ணம், ஏக்கருக்கு ரூ.500 வீதம் 1,500 ஏக்கரில் நடவு செய்ய ரூ.7.50 இலட்சம் மானியமாக வழங்கவும், இறக்குமதி பட்டுக்கு இணையாக தரம் உள்ள பட்டு உற்பத்திக்குத் தேவையான இரு சுழற்சியினப் பட்டுப் புழு வளர்ப்புக்கான புதிய தொழில்நுட்பங்களில் 100 விவசாயிகளுக்கு ரூ.0.80 இலட்சம் வழங்கவும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், கோவை, திண்டுக்கல், தேனி, விருதுநகர் மற்றும் நெல்லை மாவட்டங்களில் புதிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் 125 தனி புழு வளர்ப்பு மனைகள் 200 ஏக்கரில் உருவாக்கவும், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.47.18 இலட்சம் செலவிடவும், இதில் ரூ. 23.59 இலட்சம் விவசாயிகளுக்கு மானியமாக மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்திலுள்ள 60 விவசாயிகள் கூடுதல் வருவாய் பெற, 30 ஏக்கரில் வீரிய இன மல்பரி நாற்றுகள் நடவு செய்ய ரூ.8,95,000 செலவிடவும், ரூ.4,47,000 மானியமாக வழங்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மல்பரிச் செடி, நடப்பாண்டில் 400 ஏக்கரில் சொட்டுநீர்ப் பாசன அமைப்பு நிறுவிட பட்டு விவசாயிகளுக்கு ரூ.55.20 இலட்சம் மானியமாக வழங்கவும், பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ள பட்டு விவசாயிகளுக்கு 325 தனி புழு வளர்ப்பு மனைகள் கட்ட ரூ.81,25,000 மானியமாக வழங்கவும், நோயற்ற புழுக்களை வளர்க்க, கூடுதல் அறுவடை பெற 325 பட்டு விவசாயிகளுக்கு ரூ.32,50,000 மானியமாக நடப்பாண்டில் வழங்கவும், இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைத்திட 50 சதவீதம் மானியமாக ரூபாய் மூன்று இலட்சம் வழங்கவும், 1,200 விவசாயிகள் 10 இலட்சம் பட்டு முட்டைகள் வளர்க்க ரூ.17.22 இலட்சம் செலவில் மானிய விலையில் நோய்த் தடுப்பு மருந்துப்



பொருட்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கைவினைஞர்களுக்கு அதிக அளவில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்த போபால், லக்னோ, அமிர்தசரஸ், மும்பை, புது டெல்லி ஆகிய நகரங்களில் ரூ.15 இலட்சம் செலவில் கண்காட்சிகளை நடத்த, பாதிக்கப்பட்ட கைவினைஞர்கள் நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.12 இலட்சம் செலவிலே பனை ஓலை மற்றும் தேங்காய் ஓடு ஆகியவற்றை மையமாக வைத்து ஒருங்கிணைந்த முறையிலே இரண்டு கைத்திறத் தொழில் கூட்டுக் கட்டமைப்புகள் மேம்படுத்த, பூனா நகரில் பெயர்பெற்று விளங்கும் பைத்தானி என்ற நுணுக்கமான கைத்திற வேலைப்பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகளைத் தயாரிப்பதில் தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு ரூ.6 இலட்சம் செலவில் பயிற்சியளிக்க, பூம்புகார் விற்பனை நிலையங்கள் பெங்களூர், புது டெல்லியில் ரூ.5 இலட்சம் செலவில் கணினிமயமாக்க, பெங்களூரிலுள்ள மத்திய அரசின் மண்டல வடிவமைப்பு மையம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு, தமிழ்நாட்டின் முக்கிய கைவினைப் பொருட்களுக்கான வெண்கலச் சிலைகள் செய்தல், பித்தளை விளக்குகள் செய்தல், மரச் சிற்பங்கள் செய்தல் ஆகியவற்றில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துதல், புதிய வடிவமைப்புகளை ஏற்படுத்துதல், நவீன கருவிகளைப் பயன்படுத்துதல் ஆகிய பணிகளை ரூ.11.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளவும், கைவினைப் பொருட்கள் தயாரிப்பில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு கோயம்புத்தூர், கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ரூ.10.40 இலட்சம் செலவில் பயிற்சியளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரப் பசியால் அடிவயிறு வெந்து கொண்டிருக்கிற அரசியல் திருதராஷ்டிரன், பிரிட்டிஷ் ஆட்சியைப் போல தன்னைத் தமிழ்நாட்டின் வைசிராயாக— கவர்னர் ஜெனரலாகக் கருதிக் கொண்டு, மாநில சுயாட்சியை மண்ணிலே போட்டுப் புதைத்துவிட்டு, அந்தக் கல்லறை மேட்டிலே நின்றுகொண்டு கவிதை பேசியிருக்கிறார் ஒரு தலைவர். கட்டுமானங்களைக் கட்டிய கொத்தனாரையும் (குறுக்கீடுகள்)

(காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) முடிவுரை பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடிக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** முடிவுரை, முடிவுரை பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) முடிவுரை பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவுரை, முடிவுரை பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அந்தக் கல்லறை மேட்டிலே நின்றுகொண்டு கவிதை பேசியிருக்கிறார். கட்டுமானங்களைக் கட்டிய கொத்தனாரையும் சித்தாளையும் கொண்டு எம்.ஜி.ஆர். திறக்க வைத்தார். அந்த எம்.ஜி.ஆர். வழியைப் பின்பற்றித்தான் தானும் திறந்து வைத்தாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடிக்கப் போகிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அதை எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுரை வேறு. கட்டபொம்மன் பாணியிலே நாங்களும் கேட்க முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அந்தக் கட்டுமானங்களுக்கு கல் சுமந்தாயா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மண் சுமந்தாயா? அந்தக் கட்டுமான பணி புரிந்த என்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்தாயா என்று நாங்களும் கேட்க முடியும். எம்.ஜி.ஆர். வழியிலே போகிறாராம். இன்றைக்கு தேதி மார்ச் 24. நாளை மார்ச் 25. காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டு எங்களின் தாயின்



கண்ணீரை மண்ணில் சிந்த வைத்தார்களே, அதுவா எம்.ஜி.ஆர். வழி? அதிகாரம் கையிலிருக்கிறது என்பதற்காக அநாகரிகத்தை அரங்கேற்றிய சதிகாரர்களா எம்.ஜி.ஆர். வழியைப் பற்றிப் பேசுவது? இப்படிப்பட்ட வீண்பழிகளால் எங்கள் அம்மாவை வீழ்த்திவிடலாம் என்று யாரும் கனவுகூட காண வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ஆட்சி என்றால் என்னவென்றே தெரியாத சில பேராசைக் குருடர்கள், முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப்போல ஆட்சியைப் பிடிக்க நினைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மரம் வெட்டுவார்கள். கேட்கக் கூடாது. மனிதரை வெட்டுவார்கள். பேசக் கூடாது. அதிகாரியை அடிப்பார்கள். அத்துமீறி அரசுக் கிட்டங்கியிலே நுழைவார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ஏன் என்று யாரும் எதிர்பேச்சு பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திருமதி யசோதா.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இவர்கள் என்ன பத்து தலை, இருபது கை இராவணர்களா? அராஜகத்தின் ஆணிவேராக (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தின் சவப் பெட்டி தயாரித்துக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஊழல் வியாபாரிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திருமதி யசோதா.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இந்த இலட்சணத்தில் இவர்கள் தமிழை வளர்த்தார்களாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா உட்காருங்கள், முடிக்கப் போகிறார் அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இவர்கள் வளர்ப்பதற்கும், வழிப்பதற்கும் தமிழ் என்ன தாடியா மீசையா, எங்கள் அம்மா (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** யாரோ ஆட்சி அமைப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நாம் அதிகாரம் செலுத்தலாம் என்று எண்ணுகிற ஒட்டுண்ணி அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை எதற்கு நீங்கள் இதிலே ரொம்ப சிரமப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், இந்தக் கொதிப்பு நிச்சயமாக இருக்கும். ஏனென்றால் இது 1972-லேயிருந்து தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்ற யுத்தம். பாதிக்கப்பட்டவர்களுக்கு கொதிப்பு நிச்சயமாக இருக்கும். ஆக சொல்ல வேண்டியதை அவர்கள் சொல்லத்தான் செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முடியுங்கள். முடியுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) யாரோ ஆட்சி அமைப்பார்கள். தான் அதிகாரம் செலுத்தலாம் என்று எண்ணுகிற ஒட்டுண்ணி அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

*(காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரோ ஆட்சி அமைப்பார்கள், தான் அதிகாரம் செலுத்தலாம் என்று எண்ணுகிற ஒட்டுண்ணி அல்ல எங்கள் அம்மா. எந்தக் கட்சிக்கும், எந்த ஆட்சிக்கும் எங்கள் அம்மா ஏஜெண்டாக இருக்க மாட்டார். தன்னந்தனியே தண்ணீரில் குதித்து கடலின் அலைகளை கைகளால் கிழித்து கரையை தம் கரங்களால் வென்றிடும் வலிமை மிக்கவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய உயரத்தை எந்தக் குள்ள மனிதர் கூட்டமும் குறைத்துவிட முடியாது. கூட ஆட்கள் இருக்கிறார்கள். கூட்டணி இருக்கிறது என்ற துணிவில் தனி ஆள் தானே என்று தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப் பின்னால் மகத்தான மக்கள் சக்தி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மட்டுமா இருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மட்டுமா இருக்கிறார்கள்? எங்களிடமும் பெரிய கூட்டணி இருக்கிறது.



எங்களிடமும் பெரிய கூட்டணி இருக்கிறது. அந்தக் கூட்டணியிலே நம்பி வந்தோருக்கெல்லாம் நல்வழி காட்டிய நபிகள் நாயகம் இருக்கிறார் கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி) புண்களை வாங்கி கொண்டு புன்னகையைப் பரிசளித்த ஏசுபிரான் கூட்டணியில் இருக்கிறார். எங்கள் அம்மாவோடு இருக்கிறார். ஜீவனே போனாலும் அந்தச் சிவனே வேண்டுமென்று ஒற்றைக் காலில் ஓங்காரத் தவமிருந்த மாங்காடு காமாட்சி எங்கள் அம்மாவோடு இருக்கிறாள் கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி) பெண் தானே என்று பெண்ணின் வலிமை புரியாமல் எக்காளமிட்டு ஏகடியம் செய்து எதிர்வந்த மகிஷாசுரனை வதம் செய்த மகிஷாசுரமர்த்தினி எங்கள் அம்மாவோடு கூட்டணி இருக்கிறாள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் காளி, திருசூலி, விடம்கொண்ட ஈசன், இடம் கொண்ட நீலி எங்கள் அம்மாவோடு கூட்டணி இருக்கிறாள். (மேசையைத் தட்டும் ஒலி) மையுண்ட கண்களில் நெய்யுண்டு, மையுண்ட கண்களிலே நெய்யுண்டு, நெய்யுண்ட கூந்தலில் இறைமலர் வாசம் கொண்ட மதுரையின் மீனாட்சி, தென் பாண்டி மக்களின் மனசாட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவுடன் இருக்கிறாள் கூட்டணி. பெண் பூ மேல் அமர்ந்து வீணைமீட்டும் பெண் பூவாம் கலைமகள் எங்கள் அம்மாவோடு இருக்கிறாள் கூட்டணி. பார்த்தசாரதி பாஞ்சசன்னியம் ஊதி ஆர்த்த சாரதி. அர்ஜுனன் அவலம் தீர்த்த சாரதி. பாஞ்சாலியை சேலையினால் போர்த்திய சாரதி இருக்கிறார் எங்கள் அம்மாவோடு கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி) நாராயணன் பூங்குடையாய், நாராயணன் பாதுகையாய், நாராயணன் இருக்கையாய், நாராயணன் படுக்கையாய் இருக்கிற ஆதிசேஷனும், அனந்த பத்மநாபனும் எங்கள் அம்மாவோடு கூட்டணியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மையிடம் வேல்வாங்கி, அப்பனிடம் அருள் வாங்கி, அசுரனை வீழ்த்திய எங்கள் திருச்செந்தூர் தெய்வம் அம்மாவோடு கூட்டணி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எழுதி வைத்துக்கொள்ளுங்கள் அடுத்த முறையும் இதே நாற்காலியில் எங்கள் அம்மா அமரத்தான் போகிறார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எதிர்க் கட்சிக்காரர்கள் எங்களைப் பார்த்துக் கேட்கலாம், இவர்களெல்லாம் அம்மாவோடுகூட வருவார்களா என்று. இது இரணியன் கேட்ட கேள்வி. தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான், அவன் எங்கள் அம்மாவோடு இருப்பான் என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இவர்களெல்லாம் கூட்டணி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டணி எப்போது வேண்டுமானாலும் கலகலத்துப் போய்விடும். ஆனால், இந்தக் கூட்டணி எங்கள் அம்மாவின் இதயத்திலே என்றென்றைக்கும்

ஒட்டிக்கொண்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அமரப்போகிற சிம்மாசனம், அது எங்கள் சிங்கத்தின் ஆசனம், இந்த சிம்மாசனம். (மேசையைத் தட்டும் ஒலி) நரிகள் வேண்டுமானால், நரியாசனத்திற்கு ஆசைப்படட்டும். இந்த அரியாசனம்தான் எங்கள் அம்மாவிற்குச் சரியான ஆசனம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள், 233 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்களின் மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், தேவையான விளக்கங்களை பதிலுரையில் அளித்துள்ளேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (எ) கோரிக்கை எண் 17 - கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17 - கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.61,45,71,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஏ) கோரிக்கை எண் 42 - சிறு தொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42 - சிறு தொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.



திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.56,88,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.51,99,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-03-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

75. 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

76. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

77. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

78. 2003-2004 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

79. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

114. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005-2006. (தமிழ்)

115. மானியக் கோரிக்கை எண் 17 - பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

116. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

117. மானியக் கோரிக்கை எண்42 - சிறு தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

118. சிறு தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

119. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2005)

120. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஆறாவது அறிக்கை. (2003-2005)

121. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை. (2003-2005)

122. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2003-2005)

123. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2003-2005)

124. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து நான்காவது அறிக்கை. (2003-2005)

125. மனுக்கள் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை. (2003-2005)

126. மனுக்கள் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை. (2003-2005)

127. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

- - -



## இணைப்பு I

(108 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 17

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### பட்டு வளர்ச்சித் துறை

1.1 அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்குத் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே தமிழக அரசின் கொள்கையாகும். ஊரகப் பொருளாதார மேம்பாட்டில் வேளாண்மை அடிப்படையிலானது பட்டுத்தொழில் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில், 7 வகையான திட்டங்கள் பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளுக்கு தொடர்பு உடையதாகும்.

**பட்டு வளர்ச்சித் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:**

(1) அதிக மகசூல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்.

(2) மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) நோயற்ற தரமான பட்டு முட்டைகள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்.

(4) கூடுதல் பட்டுக்கூடுகள் உற்பத்தி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் நோய்த் தடுப்பிற்கு தொழில்நுட்ப உதவிகளை விரிவுபடுத்துதல்.

(5) பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு விற்பனைக்கு அங்காடி வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

(6) பட்டு விவசாயிகள் மேம்படுத்தப்பட்ட புதிய தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்க வசதி செய்து தருதல்.

[2005 மார்ச் 24

(7) சொட்டு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல், தனியாக புழு வளர்ப்பு மனை அமைத்தல், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் இளம்புழு வளர்ப்பு மையங்களை ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு உதவியளித்தல்.

**(அ) பசுமைப்புரட்சி: பண்ணை உற்பத்தியை அதிகரித்தல்:**

2005-2006 ஆம் ஆண்டில், பகுதி-2 திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித்திட்டம் முதலான திட்டங்களின் மூலம் 1,730 ஏக்கர் பரப்பில் அதிக இலை மகசூல் தரும் "வி.1", "எஸ் வரிசை" மற்றும் "எம்.ஆர்.2" இரக மல்பரி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது .

**(ஆ) நீர்வளப் பாதுகாப்பு:**

2005-2006 ஆம் ஆண்டில் 400 ஏக்கர் மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ) பட்டு வளர்ப்பில் வேலைவாய்ப்பு:**

2005-2006 ஆம் ஆண்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் 1,730 ஏக்கரில் புதிதாக மல்பரி சாகுபடி செய்து அதன் மூலம் 8,650 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பினை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது .

**(ஈ) பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல்:**

பட்டு விவசாயிகளுக்கு வெண்பட்டுக்கூடு உற்பத்திக்கான புழு வளர்ப்பில் புதிய தொழில் நுட்பங்களின் முக்கியத்துவம், மற்றும் திறன் அபிவிருத்திக்காக மல்பரி தோட்டப் பராமரிப்பு, சீரான புழுப் பொரிப்புக்கு முட்டை அடைகாத்தல், இளம்புழு வளர்ப்பு, முதிர்புழு வளர்ப்பு, புழுக்கள் தோலுரிப்பின்போதும் கூடுகட்டும்போதும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நோய் தடுப்பு மேலாண்மை ஆகியவை குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

2005-2006 ஆம்ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் 100 விவசாயிகளுக்கு இரு சுழற்சியின புழு வளர்ப்பில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2005 மார்ச் 24]

**(உ) பாலின நேர்மை நெறி: பாலின பாகுபாட்டை நீக்குதல்:**

பட்டு வளர்ப்புத் தொழில் செயல்பாடுகளில் மகளிரின் பங்கு 60 சதவிதம் ஆகும். பல வகையான பயிற்சி திட்டங்கள் மூலம், மகளிருக்கு தொழில் நுட்பப் பயிற்சிகள் அளித்து செயல்திறனை அதிகரித்து வருவாய் மேம்பட வழிவகுப்பதன்மூலம் அவர்கள் சமூகத்தில் சம அந்தஸ்தை அடைவர்.

2005-2006 ஆம் ஆண்டில் உயர்விளைச்சல் தரும் மல்பரி சாகுபடி, இரு சுழற்சியின புழு வளர்ப்பில் பயிற்சி, சொட்டு நீர்ப்பாசன முறை அமைத்திட, தனியாக புழு வளர்ப்பு மனை கட்டிட, நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் 775 மகளிருக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**(ஊ) ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்:**

2005-2006 ஆம் ஆண்டில் 2,300 ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் குடும்ப பொருளாதார மேம்பாட்டிற்கு பட்டுவளர்ப்பு தொழில் மேற்கொள்ள உயர்விளைச்சல் தரும் மல்பரி சாகுபடி, இரு சுழற்சியின புழு வளர்ப்பில் பயிற்சி, சொட்டு நீர்ப்பாசன முறை அமைத்திட, தனியாக புழு வளர்ப்பு மனை கட்டிட, நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும்,

**(எ) அதி விரைவு தொழில்நுட்ப முன்னேற்றம்:**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவித்தல் - பட்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதன் மூலம் விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை, தொழில்நுட்ப பரிவர்த்தனை மூலம் நீக்கி, உற்பத்தி திறன் மற்றும் வருவாய் அதிகரிக்க திட்டமிடப்பட்டு, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (2001-2002) 100 முட்டைகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை 44.73 கிலோ என்ற நிலையிலிருந்து 10-வது ஐந்தாண்டு திட்டத்தில் 2004-2005 ஆம் ஆண்டில் சராசரி அறுவடை (பிப்ரவரி 2005 வரை) 58.4 கிலோ என்ற நிலையை அடைந்துள்ளது. கூடுதல் பட்டுக்கூடு அறுவடை 14 கிலோ என்பது பட்டுக்கூடு சராசரி விலை ரூ.100/- என்ற அளவில் கூடுதல் வருவாய் 100 முட்டைகளுக்கு ரூ.1,400/- ஆகும்.

[2005 மார்ச் 24

2005-2006 ஆம் ஆண்டு இறுதியில் பட்டுக்கூடு சராசரி அறுவடை 100 முட்டைகளுக்கு 60 கிலோ என்ற நிலையினை அடைய தொழில்நுட்ப விவரங்கள் பரவலாக்கப்படும். மேற்கண்ட நிலை மத்திய பட்டு வாரியம் நிர்ணயித்த அளவான சராசரி அறுவடை 55 கிலோவிற்கும் கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது.

**2. அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்:**

2.1 உற்பத்தி செய்யப்படும் பட்டினை, மாநிலத்திலேயே விற்பனை செய்ய அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்தில் 09.01.1991 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து பட்டு நூற்பாளர்களும் தாங்கள் உற்பத்தி செய்த பட்டினை விற்பனை செய்ய அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்திற்கு கொண்டு வருகின்றனர். அனைத்து பட்டு நூல் தொகுதிகளும் மத்திய பட்டு வாரியத்தால் காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ள "பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மையத்"தில், பரிசோதிக்கப்படுகிறது. கர்நாடகா மாநிலத்தில் நிலவும் பட்டின் சராசரி விலையினை அடிப்படை விலையாகக் கொண்டு, தரத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டு பின்னர் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. டான்சில்க், பட்டு நூற்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் இதர பட்டு நுகர்வோர்கள் இந்த ஏலத்தில் கலந்து கொள்வர். பட்டு பரிமாற்றகம், பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக பட்டு நூலுக்குரிய தொகை வழங்க உறுதி செய்கிறது.

2.2 அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் செயல்பாடுகள், பட்டு நூற்புத் தொழிலை நிலைப்படுத்தி, தொழில் முனைவோர்களை பட்டு நூற்புத் தொழிலில் அதிக முதலீடு செய்ய ஊக்குவித்துள்ளது.

2.3 பட்டு விற்பனையாளர் மற்றும் பட்டு வாங்குவோர்களிடமிருந்து வர்த்தகம் செய்யப்படும் பட்டின் மதிப்பில் 0.75 சதவீதம் லெவி கட்டணமாக வசூலிக்கப்பட்டு, "பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி"யில் சேர்க்கப்பட்டு பின்னர் அத்தொகை பட்டு வளர்ச்சித் துறையின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்படுகிறது. பிப்ரவரி 2005 வரை ரூ.831 இலட்சம் லெவி கட்டணமாக வசூலிக்கப்பட்டு ரூ.332.38 இலட்சம் துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக "பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் குழு"விடம் ஒப்புதல் பெற்று செலவிடப்பட்டுள்ளது.



2005 மார்ச் 24]

2.4 2004-2005 ஆம் ஆண்டில் 150 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் பிப்ரவரி 2005 வரை 112 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்யப்பட்டது.

**3. டான்சில்க், காஞ்சிபுரம்:**

3.1 "தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்"(டான்சில்க்), ஒரு தலைமைக் கூட்டுறவு இணையமாக 17.04.1978-ல் பதிவு செய்யப்பட்டு 09.09.1978 முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

3.2 தமிழகத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் அபிவிருத்தி செயல்களுக்கு உதவிகள் அளிப்பதோடு தரமான பட்டினை நியாயமான விலைக்கும் போதுமான அளவிற்கும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் ஆகிய அமைப்புகளுக்கு விநியோகித்து வருகிறது.

3.3 வியாபார மூலதனம்: டான்சில்க், காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ.75.00 இலட்சம் காசுக் கடனாகவும், உறுப்பினர்கள் பங்கு மூலதன தொகையாக ரூ.137.60 இலட்சமும் மூலதனமாகப் பெற்று செயல்படுகிறது. தேசிய பட்டுநூல் வங்கி, புதுடில்லி மூலமாக ரூ.117.49 இலட்சம் கச்சாப் பொருள் மூலதனக் கடனாகவும் ரூ.170 இலட்சம் தமிழக அரசுப் பங்கு மூலதனமாகவும் பெற்று செயல்பட்டு வருகிறது.

3.4 2004-2005 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) ரூ.3,280 இலட்சம் மதிப்புள்ள 278 மெட்ரிக் டன் பட்டினை கொள்முதல் செய்துள்ளது. 28.02.2005 வரை டான்சில்க்கின் உத்தேச நிகர இலாபம் ரூ.23.10 இலட்சமாகும்.

**4. 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்:**

**4.1. உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்ய ஊக்குதவி அளித்தல்:**

(அ) அதிக இலைமகசூல் தரக்கூடிய "வி1", "எஸ்" வரிசை மற்றும் "எம்ஆர்2" ரக மல்பரி நடவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், ஓர் ஏக்கருக்கு ரூ.500/- வீதம் ஊக்குதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

(ஆ) 2005-2006 ஆம் ஆண்டில் 1,500 ஏக்கர் பரப்பில் உயர்விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ.7.50 இலட்சம் ஊக்குதவித் தொகையாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 24

## 4.2. இருசுழற்சியின புழுவளர்ப்பு மேற்கொள்ள பயிற்சியளித்தல்:

(அ) மைசூர் மத்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தால் வெண்பட்டு உற்பத்தி செய்திட கண்டு பிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்திட விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

(ஆ) 2005-2006 ஆம் ஆண்டில் 100 விவசாயிகளுக்கு இருசுழற்சியின பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகளுக்கு இருசுழற்சியின பட்டுப்புழு வளர்ப்பில் மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கவும், பயிற்சியின்போது பட்டு தொழில் சிறப்பாக நடைபெறும் பகுதிகளுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று கண்டுணர்வு பயிற்சியளிக்கவும், பயிற்சி முடித்த பின்னர் ஒவ்வொரு விவசாயிக்கும் நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் வழங்கவும், ஒரு விவசாயிக்கு ரூ.800/- வீதம் ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் இப்பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 4.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

(அ) 2004-2005 ஆம் ஆண்டில், 60 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.5.49 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணைகள் பெறப்பட்டுள்ளது.

(ஆ) 2005-2006 ஆம் ஆண்டில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்திட, ரூ. 8.95 இலட்சத்தில் மாநில மற்றும் மத்திய பட்டு வாரிய மானியம் ரூ.4.47 இலட்சம் செலவில் திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது .

(இ) 30 ஏக்கர் பரப்பில் 60 விவசாயிகளால் தலா 0.50 ஏக்கரில் 2420 மல்பரி நாற்றுக்கள் மூலம் மல்பரி நடவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.1,210/- வீதம் வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக ஏற்கும்.

(ஈ) ஆரோாக்கியமான புழு வளர்ப்பிற்கு தனியாக புழு வளர்ப்பு மனை அவசியமாகிறது. இதற்கான மொத்த முதலீட்டு தொகை ரூ.20,000/-ல் 50 சதவீதம் மானிய தொகையாக ரூ.10,000/- வீதம் விவசாயிகளுக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக் ஏற்கும்.



2005 மார்ச் 24]

(உ) வெற்றிகரமான புழு வளர்ப்பிற்கு, தண்டு அறுவடை மூலம் புழுக்களுக்கு உணவளித்து புழு வளர்ப்பு செய்ய தண்டு அறுவடை முறை புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைக்கவும், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் தேவைப்படும் செலவினம் ரூ.10,000/-ல் 50 சதவீத தொகை ரூ.5,000/-க்கான விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக ஏற்கும்.

## 4.4. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்:

(அ) மாநிலத்தில் கோயமுத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) 2005-2006 ஆம் ஆண்டில் 400 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.47.18 இலட்சத்தில் திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மாநில மற்றும் மத்திய பட்டு வாரிய மானியம் மொத்தம் ரூ.23.59 இலட்சம்.

(இ) 400 விவசாயிகளால் 200 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்படும். தலா 0.50 ஏக்கர் பரப்பில் நாற்றுகள் மூலம் நடவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் மல்பரி நாற்றுக்கான செலவினத்தில் ரூ.1,210/- வீதம் 400 விவசாயிகளுக்கும் வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக ஏற்கும்.

(ஈ) சுகாதாரமான முறையில் புழு வளர்ப்பு செய்வதற்கு தனியாக புழு வளர்ப்பு மனை கட்டத் தேவையான மொத்த முதலீட்டுத் தொகை ரூ.20,000/-ல் 50 சதவீத மானியமாக ரூ.10,000/- வீதம் 125 விவசாயிகளுக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக ஏற்கும்.

(உ) செலவினத்தைக் குறைத்து கூடுதல் மகசூல் பெற தண்டு அறுவடைமுறை புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைக்கவும், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் தேவைப்படும் முதலீட்டுத் தொகை ரூ.10,000/-ல் 50 சதவீதம் தொகை ரூ.5,000/-வீதம் 125 விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படும். இச்செலவினை, மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமாக ஏற்கும்.

[2005 மார்ச் 24

## 5. கிரியா ஊக்கித் திட்டங்கள்:

5.1. மாநிலத்தில் பட்டு வளர்ச்சிக்காக மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடனான கிரியா ஊக்கித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல், இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைத்தல், தரமான நோய் தடுப்பு மருந்துப் பொருட்கள் மானிய விலையில் விநியோகித்தல் முதலான திட்டங்களுக்கு மத்திய பட்டு வாரியமும் மாநில அரசும் சரிசமமான மானியப் பங்குடன் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது.

5.2. 2004-2005 ஆம் ஆண்டில் சொட்டுநீர்ப் பாசன முறை அமைக்கவும், தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட மற்றும் நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும், இளம்புழு வளர்ப்பு மனைகள் நிறுவவும் திட்ட உதவிகள் வழங்குவதற்காக மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் மானியப் பங்குகளாக ரூ.223.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது.

5.3. 2005-2006 ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் மானியப் பங்குகளாக ரூ. 189.17 இலட்சம் பெற்று கீழ்கண்டவாறு திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:—

| வ. எண் | திட்ட விவரம் | திட்ட உதவி விவரம் (ரூ. இலட்சத்தில்) மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 400 ஏக்கரில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல் | 49.680 | 5.520 | 55.20 |
| 2 | 325 தனி புழு வளர்ப்பு மனைகள் கட்டுதல் | 40.625 | 40.625 | 81.25 |
| 3 | 325 விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல் | 16.250 | 16.250 | 32.50 |
| 4 | 2 இளம்புழு வளர்ப்பு மையங்கள் நிறுவுதல் | 1.500 | 1.50 | 3.00 |
| 5 | தரமான நோய் தடுப்பு மருந்துப் பொருட்களை 1200 எப்1 விவசாயிகளுக்கு வழங்குதல் | 8.610 | 8.610 | 17.22 |
| | மொத்தம் | 116.665 | 72.505 | 189.17 |



2005 மார்ச் 24]

## 6. 2005-2006 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்:

பல்வேறு செயல்பாடுகளைக் கொண்ட பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக 2005-2006 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் முக்கிய இனங்களில் சாதனையடைய திட்டமிடப்பட்டுள்ளது:—

(1) 1,730 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்தல்.

(2) 65 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் வளர்த்தல்

(3) 4,000 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்தல்

(4) 600 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்தல்

(5) 8,650 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

## 7. நிதித் தேவை:

மேற்காணும் செயல் இலக்கினை அடைய 2005-2006 ஆம் ஆண்டிற்கு புதிய திட்டங்களுக்காகவும் தொடர் திட்டங்களுக்காகவும் கீழ்க்காணும் விவரப்படி ரூ.2,292.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது:—

| வ.எண் | திட்டங்கள் | | | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | திட்டப் பணிகள் | | | |
| | பகுதி-1 திட்டம் | 145.00 | 153.30 | |
| | பகுதி-2 திட்டம் | | 8.30 | |
| | மொத்தம் | | | 153.30 |

[2005 மார்ச் 24

| வ.எண் | திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 11.80 |
| 3 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2.36 |
| 4 | திட்டம் சாராப் பணிகள் | 2,124.54 |
| | மொத்தம் | 2,292.00 |

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-இன்படி, ஒரு சட்ட ரீதியான அமைப்பாக உருவாக்கப்பட்டது. ஊரக பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊரகத் தொழில் வளர்ச்சி அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டும் கிராமப்புறங்களில் பெருவாரியான வேலை வாய்ப்பினை ஏற்படுத்திடவும் உருவாக்கப்பட்டதே கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகும். 1960-ல் வாரியம் துவக்கப்பட்டதிலிருந்து கடந்த 44 ஆண்டுகளாக இம்மாநிலத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில்களில் வளர்ச்சியைப் பெருக்கிட முக்கியமாகக் கிராமப்புறங்களில் இவ்வாரியம் பெரும்பணி செய்து வருகிறது. நேரடியாக வேலை வாய்ப்பினை அளிப்பதோடு கிராமப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்வதன் வாயிலாக மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை உருவாக்குகிறது.

### 2. நிர்வாகம் :

கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-ன்படி கதர் வாரியம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மற்றும் அரசினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட ஒரு குழு மூலம் வாரியத்தின் முக்கிய கொள்கை முடிவுகள் அனைத்தும் எடுக்கப்படுகிறது.

3. கிராம மக்கள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் ஆகியோருக்கு தேனீப் பெட்டிகள் வழங்கவும், நெசவாளர்களின் தறிகளை



2005 மார்ச் 24]

நவீனப்படுத்துவதற்கும், கிராம கைவினைஞர்களுக்கு உரிய உபகரணங்கள் வழங்கவும், மாநில அரசு மானியமாக வாரியத்திற்கு நிதி உதவி அளித்து வருகிறது. மாநில அரசு வழங்கும் நிதியுதவியைக் கொண்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் கீழ்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | உதவி அளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 562.14 | 8,397 |
| 2. | கைவினைஞர்களின் நலனுக்கான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் | 121.36 | 5,884 |
| 3. | நீலகிரி மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கைவினைஞர்களுக்கான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 213.36 | 6,107 |
| 4. | ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு மைய உதவி | 2,707.25 | 37,317 |
| 5. | பகுதி-2 திட்டம் (புதிய திட்டங்கள்) | 459.06 | 10,877 |

### 4. விளிம்புத் தொகை திட்டம்:

ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் வழங்கப்படும் மானியத்திலிருந்து "விளிம்புத் தொகை திட்டம்" எனும் ஒரு திட்டத்தினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களுக்கு திட்ட மதிப்பில் அதிகபட்சமாக 30 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையரால் அடையாளம் கண்டுள்ள 116 கிராமத் தொழில்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற தகுதி உடையவைகளாகும். இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டு வரை

1,118 பயனாளிகளுக்கு ரூ.474.60 இலட்சம் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) விளிம்புத் தொகை மானியமாக 42 பயனாளிகளுக்கு ரூ.54.32 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 5. கதர்:

### 5.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா:

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது கிராம கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்களின் உற்பத்தியின்கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கிய செயல் முறைகளாகும். ஏறத்தாழ 183 கிராமிய நூற்பு நிலையங்கள், 67 உபகிளைகள், 12 நேபாளி தறி நிலையங்கள் ஆகியவைகள் இச்செயல்முறைகளை நிறைவேற்றி வருகின்றன. இந்த அலகுகள் மூலம் சுமார் 20,000 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் 12,500 பேர் கிராமியப் பெண்கள் ஆவர். பருத்திக் கதரிலிருந்து பல்வேறு வகையான வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் மற்றும் பல்வேறு கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ.9.00 கோடி மதிப்புள்ள கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்களை வாரியம் மூலம் உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசுத் துறைகளான மருத்துவமனைகள், கல்வி, இரயில்வே, துறைமுக பொறுப்புக் கழகம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தேவை நமூனாக்களின் அடிப்படையில். கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

### 5.2 கதர்ப் பட்டு:

இவ்வாரியம் பழம்பெருமை கொண்ட பட்டுத் தொழிலில் ஈடுபட்டு, பட்டு உற்பத்தியைச் செய்து வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக் கட்டுப்பாட்டின்கீழ் 27 கதர்ப் பட்டு உபகிளைகள் இயங்கி வருகின்றன. சாதாரண விலை முதல் அதிக விலை வரை இவ்வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள்



தனித் தன்மை வாய்ந்ததுடன், சந்தையில் முதன்மை பெறும் அளவிற்கு மதிப்பும் வாய்ந்ததாகும். மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் அச்சிடப்பட்ட பட்டுப்புடவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இத்தகைய சேலைகளின் கணினி வடிவமைப்பு உள்ளடக்கிய அனைத்து வடிவமைப்புகளை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வாடிக்கையாளர்களின் விருப்பத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், வியாபார போட்டியினை எதிர்கொள்ளும் வகையிலும் புதிய வடிவமைப்புப் பட்டுப்புடவைகள் ரூ.2,500/- மதிப்பில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாரியம் சுமார் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதற்கும் வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இது தவிர வாரியத்திற்கு சொந்தமாக குறிப்பாக பட்டுக்கென சாயமிடும் அலகு ஒன்று சேலம் மாவட்டம், காட்டம்பட்டியில் இயங்கி வருகிறது. ரூ.15.00 கோடி மதிப்பிற்கு 2005-2006 ஆம் ஆண்டில் கதர் பட்டு சேலைகளை வாரியத்தால் உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னையில் உள்ள நூற்பாளர் சேவை மையம், தேசிய வடிவமைப்பு தொழில் நுட்ப மையம் (N.I.F.T) மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்து இளைய சமுதாயத்தினர், வேலைக்கு செல்வோர் மற்றும் பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பல்வேறு வடிவமைப்புகளில் பட்டுப்புடவைகளை வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. கும்பகோணத்தில் பட்டு வடிவமைப்பு முன்னேற்ற மையம் அமைத்திட மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையர், ரூ.5.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளார். பெங்களூரிலுள்ள மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு அடையாளமாக வழங்கப்படும் "சில்க் மார்க் லேபிள்"-ஐ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு பெறுவதற்காக இவ்வாரியத்திற்கு உறுப்பினர் சான்றிதழ் (Membership Certificate from Silk Mark Organisation of India) வழங்கியுள்ளது.

### 5.3 கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கான தள்ளுபடி:

மாநில அரசு மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் வழங்கும் இத்தள்ளுபடி மானியமே கதர், உல்லன், பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு இரகங்களின் விற்பனையை அதிகரிக்க ஒரு பிரதான நிதி ஆதாரமாகும். மாநில அரசு, மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையர் வழங்கும் தள்ளுபடியுடன் சேர்த்து ஆண்டு முழுவதற்கும்

[2005 மார்ச் 24

கதர் இரகங்களின் விற்பனைமீது 30 சதவீதத் தள்ளுபடியும், பட்டு இரகங்களின் விற்பனைமீது 20 சதவீதத் தள்ளுபடியும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது. அரசு வாரியத்திற்கு வழங்கும் தள்ளுபடி மானியம் அதிகபட்சம் ஆண்டுக்கு ரூ.2.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையரால் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் விற்பனைக்கும் இத்தள்ளுபடி ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ.5.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**5.4 நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்:**

கைவினைஞர்களுக்கான நல நிதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காட்டை இந்த நலநிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை நல நிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கும் கூலியுடன் 10 விழுக்காடு கூலித் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகை காலங்கள் போன்றவற்றிற்கு நூற்போர் மற்றும் நெய்வோருக்கு இந்நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதி திட்டத்தின்கீழ் கருணைத் தொகையாக ரூ.20,000/- வழங்கும் ஒரு சமூக பாதுகாப்புத் திட்டம் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**6. கிராமத் தொழில்கள்:**

**6.1 தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்:**

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட முக்கியத் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் முக்கியமானதாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும் அதன் கீழ் செயல்படும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழிலை மிக முக்கியமான தொழிலாக அடையாளம் கண்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 துறை அலகுகள்



2005 மார்ச் 24]

கிண்டி, வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிக்கொண்டா, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் பேட்டை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அறைகலன்கள் இவ்வலகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**6.2 தோல் தொழில்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில் தோல் தொழில் முக்கியமான தொழிலாகும். தற்போது கதர் வாரியத்தின்கீழ் 19 காலணி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இக்காலணி அலகுகளில் தரம் வாய்ந்த காலணிகளும், தோல் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இக்காலணி அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்களில் 80 சதவீதப் பொருட்கள் தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறை நிறுவனங்களுக்கு உள்ளடக்கிய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாரியமானது பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கதரங்காடிகளின் மூலம் காலணிகள் மற்றும் தோல் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. இத் தொழிலில் ஈடுபட்டு பலனடைந்து வரும் சுமார் ஆயிரம் கைவினைஞர்களில் பெரும்பாலான கைவினைஞர்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.

**6.3 உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு தொழில்:**

தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடும் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் செயற்படுத்தப்படும் "உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்" முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின்கீழ் தற்போது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வாரியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவை கட்டி மற்றும் தூள், ரப்-அப், பாத்திரம் துலக்கும் கட்டி, கிளினிங் பவுடர் ஆகியவைகள்

[2005 மார்ச் 24

பொது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. வாரியத்தின் தயாரிப்புகளான மூலிகா குளியல் சோப்பு, மூலிகை கை கழுவும் திரவம், எழில் ஷாம்பு மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் ஆகியவையும் சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. தொடர்ந்து நடைபெறும் ஆராய்ச்சியின் விளைவாக நிலையான தரத்தைப் பெற்றுள்ளதாலும் வெளிச்சந்தையில் உள்ள சோப்பு இரகங்களைவிட வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்கள் உகந்த விலையில் கிடைக்கப் பெறுவதால் பொது மக்களிடையே வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகிறது.

வாரியத்தின் சோப்பு வகைகளின் விற்பனையை நியாயவிலைக் கடைகள் மூலம் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியதிலிருந்து இவைகளின் விற்பனை அதிகரித்துள்ளது. வாரியமானது ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்குத் தேவையான சோப்புகளை விற்பனை செய்து வருகிறது. தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறைவாசிகளுக்கும் தேவையான குளியல் சோப்பு மற்றும் பற்பொடியினை வாரியம் விநியோகம் செய்து வருகிறது.

### 6.4 தேனீ வளர்ப்புத் தொழில்

தேனீ வளர்ப்புத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். வாரியமானது பச்சைத் தேனை பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதியிலுள்ள தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. வாரியமானது தற்போது பச்சைத் தேனை கொள்முதல் செய்யும் இடத்திலேயும் மற்றும் பதப்படுத்தப்பட்ட தேனை விற்பனைக்கு அனுப்பும் முன்பும் பரிசோதனை செய்து வருகிறது. எனவே தான் தேனுக்கு 100 சதவிதத் தரத்தினை வாரியத்தினால் வழங்க இயலுகிறது. பச்சைத் தேன், அம்சி மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் நிலையங்களின் மூலம் பதப்படுத்தப்பட்டு அக்மார்க் முத்திரை பெறப்பட்டு தேன் நிரப்பும் நிலையங்களில் பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் உள்ள வாரியத்தின் தேன் பதப்படுத்தும் அலகில் முதல் தரமான (ஏ கிரேடு) தேன் உற்பத்தி செய்யப்படுகிறது.



2005 மார்ச் 24]

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் தரமான தேன் நியாயமான விலையில் கிடைப்பதால் மக்களின் மத்தியில் மிகச் சிறந்த ஆதரவைப் பெற்றுள்ளது. வாரியம் அரசு அண்ணா மருத்துவமனை, டாம்கால் போன்ற நிறுவனங்களுக்கும், அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் கோவில்களுக்கும் தேன் விநியோகம் செய்து வருகிறது.

### 6.5 கைமுறை காகிதத் தொழில்:

கைமுறை காகிதத் தொழில், "கழிவிலிருந்து செல்வம்" எனும் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டதாகும். தற்போது பிடாகம் (விழுப்புரம் மாவட்டம்), செண்பகபுதூர் (ஈரோடு மாவட்டம்), கோவனூர் அட்டைப்பெட்டி தயாரிக்கும் அலகு (கோவை மாவட்டம்) மற்றும் உதகை பேப்பர் பை மற்றும் கவர் தயாரிக்கும் அலகு (நீலகிரி மாவட்டம்) ஆகிய நான்கு அலகுகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

இத்தொழிலில் கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், காகித உறைகள், பாண்டு பேப்பர், ரேப்பர், மேனிபோல்டிங் பேப்பர், கைப்பைகள் ஆகியவைகளே பிரதான உற்பத்தியாகும். இந்த அலகுகளில் பணியில் ஈடுபட்டுள்ள அதிக அளவிலான தொழிலாளர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இத்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிச்சட்டத்தின்படி கூலி வழங்கப்படுகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவையான உறைகள், கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், பாண்டு பேப்பர் போன்ற காகிதப் பொருட்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைக்கும் விநியோக ஆணைகள் பெறப்பட்டுள்ளன. கிராம விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பதற்காக இப்பொருட்கள் தொடர்பான விற்பனையினை விரிவுபடுத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சோப்பு அலகுகள், காலணி அலகுகள் மற்றும் தேன் நிரப்பும் அலகுகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாரியத்திற்காக பண்டல்கள் செய்வதற்கு தேவையான அட்டைப்பெட்டிகளைக் கோவனூர் அட்டைப்பெட்டி தயாரிக்கும் அலகில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உதகை மாவட்டத்தில் உள்ள பேப்பர் பைகள் மற்றும் உறைகள் தயாரிக்கப்படும் அலகில், உற்பத்தி செய்யப்பட்ட கவர்கள் மற்றும் பைகள் வாரிய உபயோகத்திற்கும், உயர்நீதிமன்றம், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**6.6 மட்பாண்டத் தொழில்**

இம்மாநிலத்தின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றான மட்பாண்டத் தொழிலை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அபிவிருத்தி செய்து வருகின்றது. வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 4 மட்பாண்ட அலகுகள் செயல்படுகின்றன. இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் மெருகு மட்பாண்டங்கள் மற்றும் இதர மட்பாண்ட பொருட்களுக்கு நல்லாதரவு உள்ளது. இம்மாநிலத்தில் பரவலாக உள்ள கதர் அங்காடிகளின் மூலம் இவ்வலகில் தயாரிக்கப்படும் அழகு வண்ண அலங்கார மட்பாண்டப் பொருட்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

வாரியமானது மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்குத் தேவையான பூந்தொட்டிகளை விநியோகம் செய்து வருகிறது. மேலும் ஆவின் நிறுவனத்திற்குத் தேவையான ஐஸ்கிரீம் குடுவைகளையும் விநியோகம் செய்கிறது.

ஊரகப் பகுதிகளில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு அத்தொழில் வேலைவாய்ப்பை அளிக்கிறது

**7. விற்பனை**

வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 169 கதரங்காடிகளும், 10 கிராமப்பொருள் விற்பனை நிலையங்களும் மற்றும் 8 தோல் விற்பனை நிலையங்களும் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. கண்காட்சிகள் நடத்துவதன் மூலமும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை செய்வதன் மூலமும், விளம்பரங்களுக்கு மின் ஒளிப்பரப்புகளை பயன்படுத்தியும் கணிப்பொறி இணையதளம் www.khadikraft.com இயக்கப்படுவதன் மூலமும் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்களை மக்களிடையே விற்பனை செய்திட சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வாரியத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை உற்பத்தி திறன் குழுவினரால் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கதர் கிராமத் தொழில் ஆணையரால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் உற்பத்திப் பொருட்கள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கதரங்காடிகள் மற்றும் கிராமப்பொருள் விற்பனை நிலையங்கள் மூலம்



விற்பனை செய்யப்படுகிறது. வாரியம் தன் செயல்பாடுகளின் மூலம் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துகிறது.

**8. பகுதி-2 திட்டம் 2005-2006 (புதிய திட்டங்கள்)**

2005-2006 ஆம் ஆண்டில் வாரியம் பின்வரும் பகுதி-2 திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது,

**8.1 கணிப்பொறி: ரூ.2.60 இலட்சம்**

தற்போதுள்ள நடைமுறைகளின்படி மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் அனைத்து விவரங்களும் கையால் எழுதப்படுவதால் அவற்றை தொகுத்து வழங்குவதற்கு அதிக தாமதம் ஆவதுடன் முடிவெடுப்பதற்கும் தாமதமாகிறது. எனவே, மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கதர் அங்காடிகள் ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு மேம்படுத்திட கணினிமயமாக்கப்படுவது அவசியமாகும்.

1. திட்டங்களைப் பயன்பெறும் வகையில் செயல்படுத்திட வேண்டுவது.

2. உற்பத்தி அலகுகள் / கதர் அங்காடிகளின் வேலைத்திறனை நுணுக்கமாக கண்காணித்திட வேண்டும்.

3. பொருள் விவரப்பட்டியலை பயன்பெறும் வகையில் அமைத்திட வேண்டுவது.

4. வணிகவினை முறைத் திறத்தினை உதவி பெறத்தக்க வகையில் அமைத்திட வேண்டுவது.

எனவே, 4 கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகை ரூ.2.60 இலட்சத்தில் பொது மேலாளர் கதரங்காடி சென்னை (2 கணினிகள்), உதவி இயக்குநர் (பட்டு) சேலம் (1 கணினி), உதவி இயக்குநர் (கிராமத் தொழில்கள்) கிண்டி (1 கணினி) அலுவலகங்களுக்கு தலா ரூ.0.65 இலட்சம் வீதம் கொள்முதல் செய்திட உத்தேசித்துள்ளது.

**8.2 நிகரி இயந்திரம்: ரூ.0.70 இலட்சம்**

திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள மண்டல துணை இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அலுவலகங்களுக்கும் பொது மேலாளர் கதரங்காடி அலுவலகத்திற்கும் நிகரி இயந்திரம் வழங்கப்படவில்லை. அவர்கள் வெளி இடங்களில் நிகரி கொடுப்பதற்காக

அதிக தொகை செலவிடுகின்றார்கள். எனவே தலா ஒரு நிகரி இயந்திரம் வீதம் மூன்று அலுவலகங்களுக்கு மொத்த தொகை ரூ.70,000-த்தில் 3 நிகரி இயந்திரங்கள் கொள்முதல் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.3 ஜெராக்ஸ் இயந்திரம்: ரூ.3.00 இலட்சம்**

திருச்சி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களிலுள்ள மண்டல துணை இயக்குநர்கள் அலுவலகங்களில் அதிக செலவினம் மேற்கொண்டு வெளியிடங்களில் ஜெராக்ஸ் நகல்கள் எடுத்து வருகின்றார்கள். எனவே 2 ஜெராக்ஸ் இயந்திரங்கள் மொத்தத் தொகை ரூ.3.00 இலட்சத்தில் (ரூ.1.50 இலட்சம் வீதம் 2 - ஜெராக்ஸ் இயந்திரங்கள்) கொள்முதல் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.4 தேவைப்படும் மொத்தத் தொகை:**

ரூ.6.30 இலட்சம் மானியத் தொகையில் கணினி, நிகரி இயந்திரம் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் 2005-2006 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 4 கணினிகள் கொள்முதல் செய்திட | 2.60 |
| 2. | 3 நிகரி இயந்திரங்கள் கொள்முதல் செய்திட | 0.70 |
| 3. | 2 ஜெராக்ஸ் இயந்திரங்கள் கொள்முதல் செய்திட | 3.00 |
| | மொத்தம் | 6.30 |

**9. வாரியத்தின் நிதிநிலை**

வாரியத்தின் நிதி ஆதாரம் இரண்டு முதன்மைத் தலைப்புகளின் கீழ் வரப்பெறுகிறது. அவை அரசிடம் இருந்து பெறப்படும் மானியம் மற்றும் துறை வரவினம் ஆகியவையாகும். வாரியத் துறை வரவினமானது கதர் மற்றும் கிராமப்பொருள் விற்பனை, கட்டடங்களிலிருந்து பெறப்படும் வாடகை மற்றும் இதர இனங்களை உள்ளடக்கியதாகும். துறை வரவினங்கள் வாரிய அலகுகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திக்காக



தேவைப்படும் மூலப் பொருட்களை கொள்முதல் செய்யவும் அதற்கான கூலி வழங்கி உற்பத்தி சம்பந்தப்பட்ட இதர முக்கியமான செலவுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழக அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மானியமானது நிகர ஈட்டு மானியமாகவும், தள்ளுபடி மானியமாகவும் மற்றும் இதர குறிப்பிட்ட பகுதி-2 திட்டங்களுக்காகவும் வழங்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டுக்கு கதர் வாரியத்திற்கு மானியமாக அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

| வ. எண். | விவரம் | | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நிகர ஈட்டு மானியம் | | 2,079.80 |
| 2. | தள்ளுபடி | கதர் வாரியம் | 200.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 1,500.00 |
| 3. | தணிக்கை கட்டணம் | | 433.62 |
| 4. | இதர இனங்கள் | | 7.00 |
| | மொத்தம் | | 4,220.42 |

ஆணையர், மும்பை கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அவர்களைப் பொருத்தவரை தள்ளுபடி வழங்குவதுடன் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை வழங்கப்படும் திட்டத்தையும் செயல்படுத்த நிதி உதவி செய்து வருகிறது. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் வாரியம் மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசு வாரியத்தின் விற்பனையை அதிகரிக்கவும் அதனால் வாரிய செயல்பாடுகளை முன்னேற்றமடையச் செய்யவும் அவ்வப்போது போதுமான நிதி மற்றும் இதர உதவிகளை அளித்து வருகிறது.

[2005 மார்ச் 24

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. தமிழ்நாடு, பனைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைக் கொண்டு, பனைத்தொழில் வளர்ச்சிக்கும் அவைகளின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாடு, பனைத்தொழில் வளர்ச்சியில் முதன்மையாக உள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.01 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் 4.61 கோடி பனைமரங்கள் உள்ளன. பனைமரம் தமிழ்நாட்டின் "மாநில மரம்" ஆகும்.

2. மாநிலத்தில் பனைத்தொழில் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக "தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்" என்ற பெயரில் ஒரு தனி வாரியம் தமிழ்நாடு சட்டம் (15) 1994-ன்படி தனியாக அமைக்கப்பட்டு 6-1-1995 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

3. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் நேரடியான வியாபாரத்தில் ஈடுபடவில்லை. பனைத்தொழில் வளர்ச்சிக்காக 996 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களும் (பனைஓலை தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனைவெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாக பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனைபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

4. பனைப்பொருட்கள் சந்தையில் எளிதில் விற்பனையாகும் வகையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையான தொழில் நுட்பங்கள் அளித்தல், பனைப்பொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்து பனைப்பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தி, பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

5. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு தனியாக வரவு-செலவுத் திட்டம் இல்லை. இவ்வாரியத்தின் செலவினம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய வரவு-செலவுத் திட்டத்தில் அடங்குகிறது.



2005 மார்ச் 24]

6. இவ்வாரியத்தின் நலத் திட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டங்களில் (i) தொடர் பசுமைப் புரட்சி, (ii) உணவுப் பாதுகாப்பு, (iii) வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் (iv) சூழல் பாதுகாப்பு ஆகிய திட்டங்கள் உள்ளடக்கிய திட்டங்களாக உள்ளன.

7. பனைத்தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனைவகை உண்பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பாம் சாக்லெட் வகைகள், பதப்படுத்திய நுங்கு, பனம்பழ ஜாம் வகைகள், காற்றூட்டப்பட்ட குளிர்பான வகைகளான பாம்டா, பாம்கோலா வகைகளும் மற்றும் உண்ணா பொருட்களான பனைஓலைப் பொருட்கள், பனைநார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### (அ) உற்பத்தி மற்றும் விற்பனை

2004-2005-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய மாநில இணையம்/ மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.510.19 இலட்சம் மதிப்பிலான பனைப்பொருட்களை உற்பத்தி செய்து ரூ.575.14 இலட்சம் மதிப்பிலான பனைப்பொருட்களை விற்பனை செய்துள்ளன.

### (ஆ) வேலைவாய்ப்பு

பனைத்தொழிலுக்கு தொழில்நுட்ப தகுதி தேவை என்றில்லாமல் பாமரரும் செய்யும் வகையில் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு இத்தொழில் மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலும். இத்தொழிலில் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். பதநீர் இறக்குதல், பனைவெல்லம் தயாரித்தல், பனந்தும்பு அடித்தல், ஈச்சங்கூடைகள் முடைதல் ஆகிய பனைத்தொழில்களில் சுமார் 30,000 ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

### 8. பனந்தும்பு மற்றும் பனைஓலைப் பொருட்கள் ஏற்றுமதி:

பனந்தும்பு தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 24

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண் கைவினைஞர்களால் அழகிய பனைஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, லண்டன், பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு முகவர்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**9. பனைத்தொழிலில் பயிற்சிகள்:**

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைப்பொருட்கள் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**10. புதிய திட்டங்கள்:**

2005-2006-ம் ஆண்டில் அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் கீழ்க்காணும் திட்டங்களை பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.16.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

1. கடலூரில் உளள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணைய "பதநீர் உற்பத்திப் பிரிவினை" நவீனப்படுத்திட ரூ. 5.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும்.

2. தூத்துக்குடி மாவட்டம் அந்நோணியார்புரத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன "பதநீர் உற்பத்திப் பிரிவினை" நவீனப்படுத்திட ரூ. 5.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும்.

3. கோவை-ஈரோடு மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின்கீழ் ஈரோடு மாவட்டம் சிறுவலூரில் ரூ. 2.50 இலட்சம் செலவில் பனங்கற்கண்டு உற்பத்திப் பிரிவு நிறுவப்படும்.

4. இராமநாதபுரம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள 200 ஏழை பனைத்தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**11.** பனைமரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது. பனைப்பொருட்கள் தூய்மை கேடற்றவை மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவை ஆகும். கிராமப்புறங்களில் உள்ள



2005 மார்ச் 24]

பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும், பனைத்தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை மேற்கொள்வதும் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் குறிக்கோளாகும். சிறிய அளவு மூலதனத்துடன் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவாறு நாள்தோறும் மக்கள் வாங்கிப் பயன்படுத்தும் மற்றும் விரைவில் விற்பனையாகும் பனைப்பொருட்களை உற்பத்தி செய்தும் அதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் வகை செய்கின்றன எனவே, தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் பனைமரங்கள் வளர்த்து பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், பனைத்தொழில் வளர்ச்சிக்கும் அதனடிப்படையில் கிராமப்புறத்திலுள்ள இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் பயன்படுகின்றன.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. தமிழகத்தில் கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்காகவும் மற்றும் முன்னேற்றத்திற்காகவும் புதிய இலக்கு நோக்கி சிறப்பான உத்வேகத்துடன் முன்னேற தனி நிறுவனம் ஒன்று "தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்" என்ற பெயரில் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமாக 26-7-1973 அன்று நிறுவனங்களின் 1956ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனம் 01-08-1973 முதல் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, தொழில் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சந்தை சங்கங்களின்கீழ் இயங்கிவந்த அனைத்து கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும் பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின்கீழ் உடனடியாக மாற்றப்பட்டன. அரசிடமிருந்து அனைத்து விற்பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டபின் இந்நிறுவனம் "பூம்புகார்" என்ற பெயரில் இயங்கத் துவங்கியது. தற்போது "பூம்புகார்" தமிழ்நாட்டின் தலை சிறந்த கைவினைப் பொருட்களின் களஞ்சியமாக உள்ளது.

**2. முக்கிய நோக்கங்கள்**

இந்நிறுவனம் அமைக்கப்பட்டதற்கான முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

[2005 மார்ச் 24

(i) தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப்பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பணியை மேற்கொள்ளுதல்.

(ii) கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்பாடடையச் செய்ய முறையான பயிற்சி அளித்தல்.

(iii) கைவினைப்பொருட்களின் உற்பத்தித் திறனையும் தரத்தினையும் மேம்படுத்தி அதே நேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பைக் குறைத்து தொழில்முறை இடர்ப்பாடுகளைக் களைதல்.

(iv) வடிவமைப்புக்களில் புதுமையினைப் புகுத்துதல்.

(v) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.

இக்குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, சிறப்பு கோயில் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

### 3. வணிக செயல்பாடுகள்

### 3.1 விற்பனை

இந்நிறுவனம், கைவினைஞர்களின் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் முக்கிய குறிக்கோளினைத் தனது 17 விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் கண்காட்சிகள் மூலமாக நிறைவேற்றி வருகிறது.

**3.2** 1973-1974-ல் ரூ.50.00 இலட்சத்திற்கு விற்பனை செய்த இந்த நிறுவனம் முப்பது ஆண்டுகளில் படிப்படியாக வளர்ந்து 2004-2005-ல் ரூ. 1430.00 இலட்சம் அளவிற்கு விற்பனையை உயர்த்தியுள்ளது.

**3.3** தனது தீவிர விற்பனைக் கோட்பாடுகளைத் தொடர்ந்து செயல்படுத்தியதன் மூலமும் மற்றும் கோயில் திட்டங்களை 2004-2005-ல் திறனுடன் நிறைவேற்றியதனாலும் 2003-2004 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2004-2005 ஆம் ஆண்டின் விற்பனை ரூ.1.00 கோடிக்கு மேல் அளவிற்கு அதிகரித்துள்ளது. முதன் முறையாக இந்நிறுவனம் ரூ.1430 இலட்சம் என்ற விற்பனையை அடைந்து சாதனை படைத்துள்ளது.



2005 மார்ச் 24]

**3.4** கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை பின் வருமாறு:

| ஆண்டு | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2001-2002 | 1179.88 |
| 2002-2003 | 1276.35 |
| 2003-2004 | 1307.78 |
| 2004-2005 | 1430.00 |
| 2005-2006 | 1610.00 (திட்டமிடப்பட்டுள்ளது) |

### 3.5 ஏற்றுமதி

கடந்த சில ஆண்டுகளாக வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விற்பனை நிலையங்களில் வாங்கும் பொருட்களை சிறந்த முறையிலும் குறிப்பிட்ட காலக் கெடுவிலும் மற்றும் பாதுகாப்பான முறையிலும் அனுப்பி வைப்பதால் ஏற்றுமதியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ஏற்றுமதி விற்பனை ரூ.80.00 இலட்சமாகும். பஞ்சலோக சிலைகள், பித்தளை அலங்காரப் பொருட்கள், நூக்கமர உபயோகப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை வெளிநாட்டினர் விரும்பி வாங்கிச் செல்லும் முக்கிய கைவினைப் பொருட்களாகும்.

### 3.6 உற்பத்தி

இந்நிறுவனம் நாச்சியார்கோவில், மதுரை, தஞ்சாவூர், வாகைகுளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் தனது உற்பத்தி நிலையங்களைக் கொண்டு பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. நாட்டிலுள்ள கைவினைப் பொருட்கள் நிறுவனங்களிலேயே இந்நிறுவனம் மட்டுமே சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே நிறுவனமாகும்.

### 4 பகுதி 2 திட்டங்கள்

**4.1** 2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தில் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி ரூ.58.80 இலட்சத்திற்கு கீழ்க்காணும் திட்டங்களை இக்கழகம் நிறைவேற்றியுள்ளது.

| வ. எண். | திட்டங்கள் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பல்வேறு கைத்திறன் தொழில்கள் குறித்த பயிற்சித் திட்டங்கள் (8 கைத்திறத் தொழில்களுக்குப் பயிற்சி) | 10.40 |
| 2. | செம்மைப்படுத்தப்பட்ட மேம்பாட்டிற்கான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் | 3.00 |
| 3. | வடிவமைப்புகளில் தொழில் நுட்பவியல் உயர்வு மற்றும் ஆராய்ச்சி | 7.40 |
| 4. | கைத்திறத் தொழில்கள் மேம்பாட்டிற்கு தொகுதி முறையில் அணுகுதல் (5 கைத்திறத் தொழில் தொகுதிகள்) | 38.00 |
| | **மொத்தம்** | **58.80** |

**4.2** பெண்கள் சுயநல உதவிக் குழு மூலம் 1,100 பெண் கைவினைஞர்களுக்கு பயிற்சித் திட்டங்களின் பயன் சென்றடைவதற்காக மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இந்நிறுவனம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் பயிற்சியளித்துள்ளது.

| வ. எண் | மாவட்டம் | பயன் அடைவோர் | கைத்திறத் தொழில்களில் பயிற்சி |
|---|---|---|---|
| 1 | கோவை | 400 | கைப்பின்னல் மற்றும் பூ வேலை ஊதுபத்தி வாசனை மெழுகு வர்த்தி பனை ஓலை கூடை கோரை பாய்கள் சணல் பொருட்கள் |
| 2 | கன்னியாகுமரி | 160 | பூ வேலை கைப் பின்னல் வாழைநார் பொருட்கள் சங்குப் பொருட்கள் சுட்ட களிமண் பொருட்கள் தன்னை நார் பொருட்கள் |
| 3 | பெரம்பலூர் | 120 | மரக் கடைசல் கைத்தறி புடவைகள் தோல் பொருட்கள் கயிறு பொருட்கள் உலோக உருவங்கள் மட்பாண்டங்கள் |



| வ. எண் | மாவட்டம் | பயன் அடைவோர் | கைத்திறத் தொழிலில்களில் பயிற்சி |
|---|---|---|---|
| 4 | தஞ்சாவூர் | 120 | கைப்பின்னல், கைப் பின்னல் மற்றும் பூ வேலை தொம்பை தேர் சீலைகள் பட்டி ஓவியம் கலம்காரி ஓவியம் சுட்ட களிமண் பொருட்கள் கண் ணாடி ஓவியம் பனை ஓலைப் பொருட்கள் |
| 5 | கிருட்டிணகிரி | 200 | பொம்மை வேலை பனை ஓலை |
| 6 | திருநெல்வேலி | 100 | உலோகப் பொருட்கள் மரச் சிற்பங்கள் |

*4.3 2005-2006* ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தில் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

| வ. எண். | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பல்வேறு கைத்திறத் தொழில்களில் பயிற்சித் திட்டம் | 10.40 |
| 2. | தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகளை உயர்த்துதல் | 7.40 |
| 3. | கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினத்தில் 2 கைத்திறத் தொழில் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்குரிய ஒருங்கிணைந்த அணுகுமுறை | 12.00 |
| 4. | தொழில்நுட்பங்களை நிலையுயர்த்துதல்-நவீனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் | 10.00 |
| | மொத்தம் | 39.80 |

## 5. பூம்புகார் மாநில விருது

*5.1* கைவினைஞர்களின் மேலோங்கிய படைக்கும் திறனையும், சிறந்த செயல் திறனையும் வெளிக்கொணர இந்நிறுவனம் ஆண்டுதோறும் பூம்புகார் விருதுப் போட்டியினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கலை மற்றும் கவின் பொருட்கள் களத்தினைச் சார்ந்த மேம்பட்டவர்கள் அடங்கிய நீதிபதிகளின் குழுவினால் ஐந்து மிகச்சிறந்த கலைப் பொருட்கள்

[2005 மார்ச் 24

தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ.5000/-, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவைகள் பரிசாக வழங்கப்படுகின்றன. இத்துணை சிறப்பு வாய்ந்த கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில் அரசு, பூம்புகார் விருதினை மாநில விருதாக அங்கீகரித்துள்ளதன் வாயிலாக பரிசு பெற்றவர்கள், மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூ.1000/-த்தினை, 60 வயதை எட்டியவுடன் பெறத் தகுதி உடையவராகிறார்கள்.

**5.2 மத்திய அரசின் தேசிய விருது/சில்ப குரு/யுனெஸ்கோ/இளம் கைவினைஞர் விருது**

ஒவ்வொரு ஆண்டிலும் 25 கைவினைஞர்களுக்கு மைய அரசு தேசிய விருது வழங்கி வருகிறது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த கைவினைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று மாநில அளவில் தேசிய விருதுக்கான கைவினைஞர்களைத் தேர்வு செய்வதில் இந்நிறுவனம் மத்திய அரசுடன் இணைந்து செயல்படுகிறது. 2002-ல் தமிழகத்தைச் சேர்ந்த 3 கைவினைஞர்களுக்கு தேசிய விருது கிடைக்கப் பெற்றுள்ளது. 2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த கைவினைஞர்களில் 10 நபர்கள் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் மாநில விருது மற்றும் தேசிய விருது பெற்ற சிறந்த கைவினைஞர்களில் 55 வயதை எட்டிய முதிர்ந்த கைவினைஞர்களுக்கு 'சில்ப குரு' விருது வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசுச் செயலர் அவர்கள் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் உலக அளவில் கைவினைஞர்களின் திறமை வெளிப்படும் விதத்தில் தென் ஆசிய அளவில் சிறந்த கைவினைஞர்களுக்கு யுனெஸ்கோ (UNESCO) விருதும் உலகளவில் இளம் கைவினைஞர்களுக்கு 1-வது, 2-வது, 3-வது பரிசுக்குத் தேர்வு செய்கிறது. இந்தப் போட்டிக்கு தமிழக இளம் கைவினைஞர்கள் போட்டியில் கலந்துகொள்ள இக்கழகம் உதவி செய்து வருகிறது. இந்த விருதுக்கு தகுதியானவர்களை கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை அரசுச் செயலர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**6. சுருக்கம்**

இந்நிறுவனம் கடந்த ஐந்தாண்டுகளாக நட்டத்தில் இயங்கிவந்தாலும், நிர்வாகம் மற்றும் நிதிக் கட்டமைப்பு ஆகியவைகளில் எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளினால் 2004-2005 ஆண்டில் நட்டத்தில் இருந்து மீண்டு, இலாபம் ஈட்ட தொடங்கியுள்ளது. வருங்காலங்களிலும் சீரிய நிர்வாகம் மற்றும் நிதிக் கட்டமைப்பு ஆகியவைகளினால் இந்நிறுவனம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கும்.



2005 மார்ச் 24]

## இணைப்பு II

*(108 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 42

## சிறுதொழில்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

நமது நாட்டில் நிலைத்த வேலைவாய்ப்பு அளிப்பதுடன் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தும் துறைகளில் சிறுதொழில் துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சிறுதொழில் துறை, தொழில் முனைவோர் செயல்திறன் மேம்பாடு அடைவதற்கான நாற்றங்காலாக விளங்குகிறது. மொத்தத் தொழில் அலகுகளில் 95 விழுக்காடு சிறுதொழில் அலகுகளாகும். மொத்த உற்பத்தியில் சிறுதொழில்களின் பங்கு 40 விழுக்காடும் ஏற்றுமதியில் 35 விழுக்காடும் ஆகும். 31-12-2004 வரை தமிழ்நாட்டில் 4.95 இலட்சம் சிறுதொழில் அலகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கான முதலீடு ரூ.13,515 கோடி ஆகும். இதன்மூலம் 35.11 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தளவாடங்கள் மற்றும் இயந்திரங்களின் மதிப்பு ரூ.100 இலட்சத்திற்கும் மிகாமல் இருப்பின் அவை சிறுதொழில் நிறுவனம் என்வும், ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் அவை குறுதொழில் நிறுவனம் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தாராளமயமாக்கல் கொள்கையினால் உலகச் சந்தையில் போட்டி அதிகரித்ததோடு இறக்குமதிப் பொருட்கள் உள்ளூர் சந்தையினை ஆட்கொள்ளும் அபாயம் உள்ளது. இத்தகைய மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையில் சிறுதொழில் அலகுகள் தங்களது திறனை வளர்க்கும் ஆற்றல் உடையவைகளாக மாற வேண்டியது அவசியம் ஆகும். இத்தகைய ஆற்றலை அடைய வேலைவாய்ப்பிற்கு பாதகமின்றி தொழில் நுட்ப மேம்பாட்டின் மூலம் தங்களது போட்டியிடும் திறனை வளர்க்க வேண்டியது சிறுதொழில் நிறுவனங்களது முக்கிய நோக்கமாகும்.

வேளாண்மை துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க இயலாத சூழ்நிலை தற்பொழுது நிலவி வருகிறது. மேலும், தொழில் துறையில் பெரும் தொழில்கள் எதுவும் நிறுவப்படாத நிலையில்

[2005 மார்ச் 24

வேலைவாய்ப்பு உருவாக வாய்ப்பில்லை. இத்தகைய சூழ்நிலையில் தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மிகுந்த வேலைவாய்ப்பு உருவாகக்கூடிய துறை சிறு தொழில் துறை எனக் கண்டறிந்து அதன்மூலம் ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் வேளாண்சார் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தி ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் வேளாண்சார் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழில்களை உருவாக்கும் அரசுக் கொள்கை வகுக்கப்பட்டது. இதன் மூலம் மும்முனைப் பயன்களாக ஊரகப் பகுதிகளிலுள்ள மூலப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டப்படும். ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடையும்.

## 2. புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

தமிழக அரசு வேளாண்சார் / உணவுப் பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்து ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினைப் பெருக்கி, அதன் மூலம் ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

28–2–2005 வரை 213 திட்டங்கள் ரூ.138.43 கோடி திட்ட முதலீட்டில் உற்பத்தியை துவங்கி 5,638 மகளிர் உள்பட 8,335 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்துள்ளன. மேலும், 165 திட்டங்கள் சொந்த முதலீட்டுடனும், வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற இதர நிதி நிறுவன உதவிகளுடனும் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களில், மாம்பழக்கூழ், பழக்கூழ், சுத்திகரிக்கப்பட்ட உணவு எண்ணெய், வாழைக்காய் வறுவல், போன்ற உணவுப் பொருட்கள், வேளாண்சார் திட்டங்களான நிறம் பிரித்தல் மற்றும் மெருகேற்றும் இயந்திரத்துடன் கூடிய நவீன அரிசி ஆலை, குளிர்ப் பதனக் கிடங்கு, தென்னைநாரிலிருந்து தயாரிக்கப்படும் சுற்றுச்சூழலைப் பாதிக்காத கழிவு கட்டி, சோற்றுக்கற்றாழை, மூலிகை மருந்து, யூகலிப்டஸ் எண்ணெய் போன்ற மூலிகை பொருட்கள், ஏற்றுமதி வாய்ப்புள்ள கடல் இறால் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, மலர் சார்ந்த தொழில்களான மல்லிகை போன்ற மலர்களிலிருந்து வாசனை திரவியம் பிரித்தெடுத்தல், ஏற்றுமதி வாய்ப்புள்ள தோட்டக்கலைப் பொருட்களான கொய் மலர்கள் போன்றவை அடங்கும்.



2005 மார்ச் 24]

மேலும், திறன்மிகு முதலீட்டாளர்களை ஊக்குவித்து வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊரகப் பகுதிகளில் ஆரம்பிக்க ஏதுவாக, பிரபல பயிற்சி நிறுவனங்களான உணவு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய நிறுவனம் (சி.எப்.டி.ஆர்.ஐ), மைசூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் தேசிய சிறுதொழில் விரிவாக்க பயிற்சி நிறுவனம், ஐதராபாத் போன்ற நிறுவனங்கள் மூலம் சிறப்புத் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு பயனாளிக்கும் பயிற்சி கட்டணத் தொகையில் 25 விழுக்காடு ரூ. 2,500/-க்கு மிகாமல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## 3. இணையதளம் மூலம் பதிவு செய்தல் மற்றும் தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் வழங்குதல்

இணையதளம் மூலம் தற்காலிக சான்றிதழை வழங்குதல், மின் ஆளுமையில் இத்துறையின் முதல் மை..கல் ஆகும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12–9–2002 அன்று துவக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்ட இணையதள மையங்கள் மூலம் ரூ.50 சேவை கட்டணமாகச் செலுத்தி எவ்வித இடர்பாடுமின்றி எல்லா நாட்களிலும் தற்காலிக பதிவுச் சான்றிதழ் பெற தொழில் முனைவோர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. தொழில் முனைவோர்கள் வங்கி நிதியுதவி, சட்டப்படியான உரிமங்கள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு ஆகியவை பெறுவதற்கு தற்காலிக பதிவுச் சான்றிதழ்கள் உதவி புரிகிறது. இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் 28–2–2005 வரை 266 இணையதள மையங்கள் மூலம் 65,596 தற்காலிக சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4. நிரந்தர சிறுதொழில் சான்று பதிவு

28-2-2005 வரை 13,067 அலகுகளுக்கு நிரந்தர பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வலகுகள் ரூ.223.26 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டு 45,606 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.

## 5. ஏற்றுமதி வழிகாட்டு மையம்

புதிய பொருளாதார கொள்கை வாயிலாக பொருளாதார வாய்ப்புகள் உலகமயமாக்கப்பட்டுள்ளன. இதனால் அனைத்து சந்தைகளிலும் போட்டி வேகப்படுத்தப்பட்டுள்ளது. சிறுதொழில் உற்பத்தியாளர்களுக்கு நீண்ட காலமாகவே, தங்களது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதில்

சிரமம் இருந்து வருகிறது. சிறு தொழில் நிறுவனங்கள் சந்தை வாய்ப்புகளை விரிவாக்க, ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அறிந்துகொள்ள வேண்டும். இந்த நோக்கத்தோடு, ஒவ்வொரு மாவட்ட தொழில் மையத்திலும் ஏற்றுமதி வழிகாட்டு மையங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.

தற்போதுள்ள ஏற்றுமதி நிலவரங்களை தொழில் முனைவோர் அறியவும் ஏற்றுமதி குறித்த வழிமுறைகள் குறித்த விவரங்களை ஏற்றுமதி வழிகாட்டு மையம் அளிக்கிறது. இம் மையங்கள் பயனுள்ள முறையில் சேவை புரிய இணையதளத்துடன்கூடிய கணினி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் மற்றும் ஏற்றுமதி பற்றிய இதர பகுதிகளில் தேவையான அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ள ரூ.9 இலட்சம் செலவில், ஐதராபாத்திலுள்ள தேசிய சிறுதொழில் விரிவாக்கப் பயிற்சி நிறுவனத்தில் ஏற்றுமதி வழிகாட்டுதல் மற்றும் முன்னேற்றம் சம்பந்தமான பயிற்சி 90 அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 6. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

தொழில் தொடங்கும் முயற்சியை ஊக்குவித்தல் மற்றும் தரமான வியாபார வளர்ச்சி உத்திகளைக் கையாளுதல் ஆகியவை சிறுதொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். தொழில் வணிக இயக்குநரகம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மாநில அரசு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயலாக்கி வருகிறது. பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் மட்டுமன்றி மகளிருக்கு சுய வேலை வாய்ப்பினை அளிப்பதற்காக விரிவான மாபெரும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் இத்துறையின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 25,000 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற மகளிரும் அடங்குவர். தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், மதுரை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ நிறுவனங்கள் மூலம் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. 2001-2002 முதல் 2003-2004 முடிய இத்துறைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 75,000-ஐ விஞ்சி 75,535 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 28-2-2005 வரை சிறிய அளவில் தொழில் துவங்க சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10,154 மகளிருக்கும்,



தொழில் நுட்பத் தகுதி பெற்ற 6,311 மகளிருக்கும், பிரதமரின் சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் 4,022 மகளிருக்கும், ஆக மொத்தம் 20,487 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் மட்டுமல்லாமல் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறுதொழில் துவங்கியவர்களுக்கு தொழில் தொடங்க அவர்களை முழுமையாகத் தயார் செய்யும் வகையில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காக ஆகும் செலவு ரூ. 5000-த்தில், ரூ. 1500-ஐ மாநில அரசும், ரூ. 1500-ஐ வங்கியும், ரூ. 2000-ஐ பயிற்சி பெறும் நபரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது தவிர 2004-2005-ல் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் 60 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சிக்கான செலவு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொழில் திறனை மேம்படுத்த தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் 3 மாத பயிற்சி அளிக்கிறது. வேலையற்ற அல்லது தகுதிக்கேற்ற வேலையில்லாத பட்டயதாரர்களுக்கு தற்போதைய தேவைக்கு ஏற்ப நுகர்வோர் சேவைக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் குளிர் சாதன பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், செல்போன், மிக்ஸி, வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி போன்றவற்றை பழுது நீக்குதற்கான திறனை வளர்க்க இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் தகுதிக்கேற்ற ஊதியம் பெற இயலும்.

இந்நிறுவனம் நீலகிரி மற்றும் ஏற்காடு பகுதியிலுள்ள பழங்குடியினருக்கு அந்தூரியம் செடி வளர்ப்பு மற்றும் பட்டு வளர்ப்புக்கான பயிற்சித் திட்டத்தினை நடத்துகின்றது.

நடப்பு ஆண்டில் இறுதி ஆண்டு பொறியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டய கல்வி பயிலும் மாணவர்களுக்கு சுய தொழில் துவங்கும் வகையில் இந் நிறுவனம், 3 நாட்களுக்கான தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடத்தியுள்ளது.

## 7. மின் ஆளுமை மூலம் எடுக்கப்பட்ட முயற்சிகள்

தகவல் தொழில் நுட்பம் அலுவலர்களிடையே குறிப்பிடத்தக்க விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் பாமரமக்களும் பயன் அடைவதோடு நகர்ப் பகுதி மற்றும் ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சி ஏற்பட உதவி புரிகிறது.

[2005 மார்ச் 24

இத்துறையின் திட்டங்களை தகவல் தொழில் நுட்ப உத்திகளின் மூலமாக திறம்படச் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் சிறுதொழில் துறைச் செயலாளர் தலைமையின்கீழ் தொழில் நுட்பக் கடமைப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குன்னூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள டீ சர்வ் எனப்படும் மின்னணு ஏல மையம் செயல்படுதல் இணையதளம் மூலம் சிறுதொழில் தற்காலிக பதிவுச் சான்றிதழ் வழங்குதல், ஏற்றுமதி வழிகாட்டு மையத்தில் இணைய தளம் மூலம் சந்தை வாய்ப்புப் பற்றிய தகவல் வழங்குதல் ஆகியவை இத்துறையின் குறிப்பிடத்தக்க மின் ஆளுமை மூலம் எடுக்கப்பட்ட முயற்சிகளாகும்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களை மின் ஆளுமை மூலமாக செயல்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் இத்துறையின் பணியாளர்கள், படிப்படியாக பயிற்சியளிக்கப்படுகிறார்கள்.

### 8. தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

தற்போது நிலவும் உலக வர்த்தக நிறுவன கோட்பாடுகளின்படி சிறுதொழில் அலகுகளின் போட்டியிடும் திறனை உயர்த்துவது அவசியமாகும். சிறுதொழில் குழுமங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதின் மூலம் இவ்விலக்கினை அடைய முடியும். அதன்படி இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு கீழ்க்கண்ட விரிவான திட்ட அறிக்கைகளை மைய அரசுக்கு அனுப்பியுள்ளது.

1. மோட்டார் வாகன உதிரி பாக குழுமம், சென்னை.
2. பின்னலாடை குழுமம், திருப்பூர்.
3. தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைவை குழுமம், மதுரை.
4. பம்பு, மோட்டார், பவுண்டரி மற்றும் துணை தொழில்கள் குழுமம், கோயம்புத்தூர்.
5. கயிறு மற்றும் துணைப் பொருட்கள் குழுமம், கிருஷ்ணகிரி.
6. மாம்பழச் சாறு குழுமம், கிருஷ்ணகிரி.
7. தோல் பொருட்கள் தொழில் குழுமம், ஆம்பூர்.
8. அச்சிடுதல் குழுமம், சிவகாசி.
9. மருந்து குழுமம், சென்னை.



2005 மார்ச் 24]

இவற்றில், கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவை செயல்பாட்டில் உள்ளன.

1. மோட்டார் வாகன உதிரி பாக குழுமம், சென்னை.
2. பின்னலாடை குழுமம், திருப்பூர்.
3. தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைவை குழுமம், மதுரை.

### 9. குழும மேம்பாட்டின் மூலம் ஊரக தொழில் மயமாக்கல்

ஊரக இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை உருவாக்கி அவர்கள் நகரப் பகுதிகளுக்கு இடம் பெயர்வதைத் தவிர்க்கும் வகையில் பண்ணை சாராத் தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்காக ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் இயற்கையாக உருவான சிறு தொழில் குழுமங்களுக்கு அவற்றின் வளர்ச்சிக்காக ரூ.5 இலட்சம் மானியம் ஊரகத் தொழில் மயமாக்கல் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. இதுவரை இதுபோன்ற 15 ஊரகத் தொழில் குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வெண்கல உலோகப் பொருட்கள் தயாரித்தல், திருநெல்வேலி மாவட்டத்தில் கோரைப்பாய் நெய்தல், திருவாரூர் மாவட்டத்தில் தீ பாதுகாப்பு மற்றும் நீண்ட காலம் நிலைக்கும் தென்னம்பாய்கள் தயாரித்தல், மதுரை மாவட்டத்தில் சோப்பு மற்றும் ஆயத்த ஆடை தயாரித்தல் ஆகிய ஐந்து ஊரகத் தொழில் குழுமங்களுக்கான திட்ட அறிக்கைகள் மைய அரசின் ஒப்புதலுக்காகவும் நிதி அளிக்கவும் அனுப்பப்பட்டுள்ளன.

### 10. சிறுதொழில்கள் குழும மேம்பாட்டு திட்டம்

சிறுதொழில் குழுமங்களின் உள்கட்டமைப்பினை வலுப்படுத்தவும் அவற்றிற்குத் தேவையான பொது வசதிகளை உருவாக்கவும் மைய அரசின் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரில் உள்ள மாவரைக்கும் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் அலகுகள் பயனடையும் வகையில், ரூ.288.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பொது வசதி மையம் உருவாக்குவதற்காக கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 24

## 11. சிறுதொழில் அலகுகளின் முன்னேற்றத்திற்கான அரசின் முயற்சிகள்

இத்துறை தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துதல் மற்றும் நிலைத்த வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகிய இருபெரும் இலக்கை அடைவதற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். தாராளமயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் நிலவும் இன்றைய சூழ்நிலையில் உலகச் சந்தையில் நிலைத்து நிற்க சிறுதொழில் அலகுகள் தொடர்ந்து தொழில் நுட்பத்தை மேம்படுத்தத் தேவையான புதிய முதலீடு செய்யவேண்டும். சிறுதொழில் அலகுகள் வேலைவாய்ப்பினை உருவாக்குவதை ஊக்குவிப்பதோடு தங்களது போட்டியிடும் திறனை அதிகரிக்கச்செய்வதே இத்துறையின் நோக்கம். தற்போதைய உலகளாவிய சூழ்நிலையில் சிறுதொழில் அலகுகள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான வசதிகளை ஏற்படுத்தி புதிய கண்டுபிடிப்புகளுக்கு அறிவார்ந்த சொத்துரிமை பதிவு செய்வதோடு ஐ.எஸ்.ஓ. போன்ற தரச்சான்றிதழ்கள் பெற வேண்டும். மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கடன் வசதி பெறும் சிறுதொழில் அலகுகளுக்கு அவைபெற்ற கடனுக்கான வட்டியில் 3 சதவீதம் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது.

சிறுதொழில் அலகுகள் தங்களது எந்திர தளவாடங்களை நவீனப் படுத்துவதோடு தொழில் நுட்ப மேம்பாடும் அடையவேண்டும். அச்சூழ்நிலையில் தொழிலாளர்களின் செயல் திறனை மேம்படுத்துவது அவசியமாகிறது. கணினியால் இயக்கப்படும் இயந்திரங்களைக் கொண்டு நுணுக்கமான மற்றும் தரமான பொருட்களை உருவாக்க தொழிலாளர்களின் செயல்திறன் மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்படவேண்டும். 2004–2005–ல் 500 தொழிலாளர்களுக்கு இப்பயிற்சி அளிப்பதற்காக 50 விழுக்காடு அதிக பட்சம் ரூ.500-க்கு மிகாமல் ஒவ்வொரு தொழிலாளருக்கும் அரசு மானியமாக வழங்குகிறது.

## 12. பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம்

"பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம்" நமது மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் படித்த வேலையற்ற இளைஞர்கள் சுயதொழில் துவங்க இயலும் நடப்பு நிதியாண்டில் 28-2-2005 வரை 18,127 நபர்களுக்கு ரூ.7523.22 இலட்சம் கடன் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 24]

## 13. ஒற்றைச் சாளர முறை

மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒற்றைச் சாளரக் குழு சட்ட ரீதியிலான அனுமதிகளை சிறுதொழில் முனைவோர்கள் விரைவில் பெற உறுதுணையாக இருந்து வருகிறது. இக்குழு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை, தீயணைப்புத் துறை, பொது சுகாதாரத் துறை, மின்சார வாரியம் போன்ற துறைகளின் அனுமதிகளை சிறுதொழில் முனைவோர்கள் விரைவில் பெற உதவி புரிகிறது. பல்வேறு சட்ட ரீதியிலான அமைப்புகளிடமிருந்து மேற்சொன்ன அனுமதிகளைப் பெற பொதுவான விண்ணப்பம் மாவட்ட தொழில் மையப் பொது மேலாளரிடம் அளிக்கப்படுகிறது, சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து தேவையான அறிக்கைகளைப் பெற்று இக்குழு மாதம் ஒரு முறை கூடி தேவையான நடவடிக்கை எடுக்கின்றது.

இக்குழுவில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச் சூழல் பொறியாளர், நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் உதவி இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தடையின்மைச் சான்றிதழ் வழங்க 7 நாட்களும், நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் நிலங்களின் மறுவகைப்பாடு அனுமதி வழங்க 21 நாட்களும் கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் துவங்கப்படும் அலகுகளுக்கு மின் இணைப்பு வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## 14. மண்டல தொழில் வசதியாக்கக் குழு

நடைமுறை மூலதனப் பற்றாக்குறை, சிறுதொழில் மற்றும் அவை சார்ந்த தொழில் நிறுவனங்களின் செயல்பாட்டை பாதிக்கிறது. இதனால் இவை கடுமையான சிக்கல்களைத் தொடர்ந்து எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிறுவனங்களிடமிருந்து உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்வோர் குறித்த காலத்தில் அதற்கான தொகையை செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடில் காலம்தாழ்த்தி செலுத்தப்படும் தொகைக்கு வட்டி வசூலிக்கும் சிறு தொழில்கள் மற்றும் துணை தொழில் நிறுவனங்கள் சட்டம் 1993-ன் விதிகளின்படி கொள்முதல் செய்வோர் நிலுவைத் தொகையை வட்டியுடன் செலுத்த வழிவகை செய்கிறது. இவை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் தலைமையின்கீழ் சென்னை,

திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு இயங்குகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் இவற்றின் மூலம் 147 இனங்களில் தீர்வு காணப்பட்டு 124 சிறு தொழில் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

## 15. சிறு தொழில் வாரியம்

இத்துறையின் வளர்ச்சி மைய மற்றும் மாநில அரசுகளின் துறைகள்/ அரசு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஒத்துழைப்பை சார்ந்துள்ளது. சிறு தொழில் சங்கங்கள் முன்வைக்கும் அரசின் கொள்கைத் தொடர்புடைய பிரச்சினைகள் இதில் விவாதிக்கப்படுகின்றன. இவ்வாரியம் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் தலைமைச் செயலாளரை துணைத் தலைவராகவும் கொண்டு செயல்படுகிறது. சிறு தொழில் வாரியம் பல்வேறு துறைகளை ஒருங்கிணைப்பதோடு சிறு தொழில் வளர்ச்சிக்கு அனைத்து நிறுவனங்களையும் இணைக்கும் தளமாக திகழ்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு சிறு தொழில் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

## 16. தொழில் உற்பத்திக் குறியீடு

தொழில் உற்பத்திக் குறியீடு பொருளாதார வளர்ச்சியை கணிப்பதில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மைய அரசு திட்டப்படி 2004 ஜூன் வரை மாதாந்திர தொழில் உற்பத்தி விபரங்களை சேகரிக்கும் பணி 11 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி அலகுகளை உள்ளடக்கி செய்யப்பட்டது. தொழில் உற்பத்தி குறையீடு புதிய தொகுப்பின்படி 3366 அலகுகளின் மூலம் 18.5 உற்பத்திப் பொருட்களைப் பிரதிபலிக்கும்படி இப்பணி செயலாக்கப்படும்.

## 17. மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

மின் மற்றும் மின்னணு தொழில் அலகுகள் நிறுவவும் மற்றும் விளக்குகள், டிரான்ஸ்மிசன் லைன்கள், துணைக்கருவி, மோட்டார் ஸ்டார்ட்டர்கள், கண்ட்ரோல் கருவி, ஓவர்ஹெட் கண்டக்டர்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்ற பொதுவகை மின்சாதனப் பொருட்கள் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள், சர்க்யூட் பிரேக்கர்கள் போன்ற கனரக மின்சாதனப் பொருட்கள் ஆகிய இருவகை மின்சாதனப் பொருட்களுக்கான வளர்ந்த தேவையினை பூர்த்தி செய்யவும் சென்னையில் திருவான்மியூர் மற்றும் பெருங்குடி, திருவள்ளூர் மாவட்டத்தில் காக்களூர், கோயம்புத்தூர், சேலம், ஓசூர், திருச்சி மற்றும்



மதுரை ஆகிய 8 இடங்களில் மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

## 18. பரிசோதனைக் கூடங்கள்

அகில உலக பாதுகாப்பு தரம் மற்றும் உற்பத்தி தரத்திற்கு இணையாக சிறு தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இதற்கான ஒவ்வொரு தொகுப்பையும் தரப் பரிசோதனை செய்வது அவசியமாகும். திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் உள்ள மத்திய மின்பரிசோதனைக் கூடம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள பொது வசதி மையம் ஆகியவை தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் அலகுகளுக்கு தேவையான பரிசோதனை வசதிகளை குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகிறது. காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடம் தேசிய சோதனை மற்றும் திறன் வரையறை சான்றளிக்கும் வாரிய அமைப்பு, புதுடெல்லி மற்றும் இந்திய தர நிர்ணயக்குழு ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக் கூடம் 150 வகை மின் சாதனப் பொருட்களை சோதனை செய்யும் வசதியினைப் பெற்றுள்ளது. தொழிற்பேட்டையில் உள்ள தொழில் அலகுகளுக்கு தரசோதனை வசதிகள் அளிப்பது மட்டுமின்றி, இந்திய தர நிர்ணயக் குழுவால் அனுப்பப்படும் பொருட்களையும் தர சோதனை செய்கிறது. மேலும் தரக்கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க மையத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் சேகரித்து அனுப்பப்படும் மாதிரி பொருட்களும் இச்சோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்யப்படுகிறது. இதன்மூலம் பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தரமுள்ள பொருட்கள் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இச் சோதனைக் கூடம் மின்பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு சோதனை மற்றும் திறன் வரையறுத்தல் பயிற்சியினையும் வழங்குகிறது.

## 19. இரசாயன பிரிவு

தரமுள்ள பொருட்கள் மட்டுமே இலாபகரமான விலையில் உடனடியாக விற்கக்கூடிய சந்தை வாய்ப்பினை பெற முடியும். இதனையொட்டி தொழில் வணிக இயக்குநரகம் சிறு தொழில் பொருட்களை தர பரிசோதனை செய்வதற்கு ஏதுவாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளது. பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கு தரப்பரிசோதனை செய்ய கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை வழங்கப்படுகிறது.

[2005 மார்ச் 24

இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம் சென்னை மற்றும் மதுரை, கோயம்பத்தூர், சேலம், தூத்துக்குடியில் அமைந்துள்ள மண்டல சோதனை ஆய்வு கூடங்களில் இரும்பு வகைகள், செம்பு, அலுமினியம், துத்தநாகம், தகரம் போன்ற உலோகங்கள், எல்லாவிதமான பெயின்டுகள், சிமெண்ட், செங்கல், கான்கிரிட் கட்டிகள், மணல் மற்றும் ஜல்லிகள், பெட்ரோல், டீசல் போன்ற பெட்ரோலிய பொருட்கள், கனிம பொருட்கள், எல்லா விதமான உயிரி மற்றும் இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், தாவர எண்ணை, தண்ணீர் போன்ற பொருட்களை ஆய்வு செய்ய தேவையான வசதிகள் உள்ளன.

## 20. தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

பாரம்பரிய தொழில் தவிர வேறு எந்தவித சொத்தும் இல்லாத கிராம கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் உழைப்பாளிகள் போன்ற நலிந்த பிரிவினரை முன்னேற்றவும், பசுந்தேயிலை மற்றும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் சிறு விவசாயிகளுக்கு உதவிடவும் வேளாண் பெருமக்களுக்கு உதவிடவும், சிறுதொழில் அலகுகள் மேம்பாடு அடைவதற்கும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. சிறு மற்றும் குறு தொழில் அலகுகள் சிறிய இயந்திரங்களைக் கொண்டு குறைந்த அளவில் உற்பத்தி செய்வது, குறைந்த நிதி ஆதாரம், சிறிய இயந்திரங்களை பயன்படுத்துதல், பெருமளவில் மூலப்பொருள் கொள்முதல் செய்திட இயலாமையால் கட்டுப்படியாகாத அடக்கவிலை, விற்பனையில் திறன் இன்மை போன்ற காரணங்களால் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய குறைபாடுகள் கூட்டுறவு அமைப்பின் மூலம் பெருமளவில் நீக்கப்படுகின்றன. தற்போது 314 தொழிற் கூட்டுறவு சங்கங்கள், 62225 உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் 28–2–2005 வரை இவை ரூ. 317.57 கோடி அளவுக்கு விற்பனை செய்வதோடு 1,01,298 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

## 21. தேயிலை பிரிவு

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்க 15 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 20258 சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் ஆண்டு உற்பத்தி அளவு இந்த



2005 மார்ச் 24]

மாவட்டத்தின் மொத்த தேயிலை உற்பத்தியில் 17 சதவீதம் ஆகும். நடப்பு ஆண்டில் 28–2–2005 முடிய இத் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் ரூ.5527.73 லட்சம் மதிப்பிற்கு 136.19 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்து, விற்பனை செய்துள்ளன. தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேவையான உதவிகள் அளிக்க இன்ட்கோசர்வ் என்ற தலைமை அமைப்பு குன்னூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பசுந்தேயிலையின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்த போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் எதிர்கொண்ட இன்னல்களை களைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களால் 28-8-2001 துவக்கி வைக்கப் பெற்ற "ஊட்டி டீ" அறிமுகம், சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முக்கியமான ஒன்றாகும். இத்திட்டத்தின்படி இன்ட்கோசர்வ் பல்வேறு தரமுள்ள தயாரித்த தேயிலையை கொள்முதல் செய்து, நுகர்வோர் தேவைக்கேற்ப கலந்து அதன்பின்னர் பொட்டலங்களாக்கி "ஊட்டி டீ" என்ற பெயரில் தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்கிறது. இது வரை 2,676 மெ. டன் "ஊட்டி டீ" ரூ.2007 லட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சிறு தேயிலை விவசாயிகளின் நலனைப் பேணும்வகையில் தனியார் தேயிலை ஏல மையங்களில் உள்ள குறைகளை களையும் பொருட்டு 'டீசர்வ்' என்ற மின்னணு தேயிலை ஏல மையத்தை அரசு நிறுவியது. நமது நாட்டிலேயே, முன்னோடி திட்டமான இந்த மின்னணு ஏல மையம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13-9-2003 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த ஏல மையம், தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நியாயமான மற்றும் கட்டுப்படியான விலை கிடைப்பதை உறுதி செய்கிறது. இந்த ஏல மையம் வணிக ஊகங்களை தவிர்த்து, நியாயமான மற்றும் வெளிப்படையான வியாபாரத்தின் மூலமாக தேயிலை விலையை நிலைப்படுத்த உறுதி செய்கிறது. நடப்பாண்டில் 28-2-2005 வரை ரூ.9876.73 இலட்சம் மதிப்பிலான 25,163 மெ.டன் தேயிலையை டீசர்வ் விற்பனை செய்துள்ளது. டீசர்வ் மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரி 4% மற்றும் மத்திய விற்பனை வரி 2% என்ற வரிச் சலுகையை தமிழக அரசு 29-5-2003 லிருந்து வழங்கி வருகிறது.

## 22. விலை நிலைநிறுத்தல் நிதி

மலைத்தோட்டப் பயிர் உற்பத்தியாளர்கள் அடிக்கடி மாறுகின்ற சந்தை நிலவரத்தினால் ஏற்படும் நிலையற்ற விலையின் காரணமாக பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடுகிறது. இவர்களின் துயர் களைய மைய அரசின் வர்த்தக அமைச்சகம் விலை நிலை நிறுத்தல் நிதி திட்டத்தை அறிவித்தது. நீலகிரி மாவட்ட மக்கள் தேயிலை விவசாயத்தையே முழுமையாக நம்பியுள்ளனர். 4 ஹெக்டேர் வரை தேயிலைத்தோட்டம் வைத்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் சேர தகுதியுடையவர் ஆவர். இம்மாநிலத்தில் உள்ள 46490 தகுதியுடைய சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். அவர்களில் 23000 சிறு தேயிலை விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள் ஒவ்வொருவரும் ரூ.500/- நுழைவுக் கட்டணமாக செலுத்த வேண்டும். சாதாரணமாக தேயிலை விலை நிர்ணயம் செய்யப்பட்ட விலைப்பட்டைக்குள் விற்கப்படும் ஆண்டுகளில் பயனாளிகள் ஒவ்வொருவரும் ரூ.500/- தங்கள் கணக்கில் செலுத்தவேண்டும். மத்திய அரசும் ரூ. 500/-ஐ ஒவ்வொரு பயனாளியின் கணக்கில் செலுத்தும். தேயிலை, விலைப்பட்டையைக் காட்டிலும் அதிகமாக விற்கப்படும் ஆண்டுகளில் பயனாளிகள் ஒவ்வொருவரும் ரூ. 1000/- இக்கணக்கில் செலுத்த வேண்டும். ஆனால், இவ்வாண்டுகளில் மைய அரசு எந்த பங்களிப்பும் செய்யாது. விலைப்பட்டைக்குக்கீழ் விற்கப்படும் ஆண்டுகளில் பயனாளிகள் எந்த தொகையும் செலுத்த தேவையில்லை இருப்பினும் மைய அரசு இவர்கள் கணக்கில் தலா ரூ. 1000/- வீதம் செலுத்தும். விலை வீழ்ச்சியடையும் ஆண்டுகளில் இத்திட்டத்தில் சேர்ந்துள்ள விவசாயிகள் ஒவ்வொருவரும் ரூ. 1000/- வரை தத்தம் கணக்கிலிருந்து எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

விவசாயிகள் இத்திட்டத்தில் சேர செலுத்த வேண்டிய நுழைவு கட்டணம் ரூ.500-ஐகூட தற்பொழுது செலுத்த இயலாததால் தமிழ்நாட்டிலுள்ள 23000 சிறுதேயிலை விவசாயிகள் சார்பாக ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.115.00 இலட்சத்தை அவர்களின் துவக்க வைப்புத் தொகையாக இத்திட்டத்தில் செலுத்த தமிழக அரசு அனுமதித்துள்ளது.

## 23. ஒருங்கிணைந்த நீலகிரி தேயிலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக் குழுமத்திற்கான தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்ட கருத்துரு ஆய்வில் உள்ளது.





உற்பத்திப்பொருள் மேம்பாடு, தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக்கூடங்கள், வேளாண் பணிமனைகள், தகவல் ஒருங்கிணைப்புகள் கிட்டங்கி வசதி, கலவை மற்றும் பேக்கிங், ஆராய்ச்சி மற்றும் எரிபொருள் சிக்கனத்திற்கான முன்னோடி திட்டங்கள் ஆகிய வசதிகள் இக்குழுமத்தில் ஏற்படுத்தப்படும். இக்குழுமத்திலுள்ள உறுப்பினர்கள் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்தி செலவினை குறைப்பதற்கும் இத்திட்டம் உதவியாக அமையும்.

## 24. கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாடு, ஆண்டொன்றுக்கு 1.33 இலட்சம் மெட்ரிக் டன் பழுப்பு நாரினை உற்பத்தி செய்து நாட்டிலேயே மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது. மொத்த தென்னை மட்டையின் உற்பத்தியில் 47 சதவீதம் மட்டுமே தற்போது பயன்படுத்தப்படுகிறது. இதனை 60 சதவீதமாக உயர்த்தி ஆண்டொன்றுக்கு 1.69 இலட்சம் மெட்ரிக் டன் பழுப்புநாரினை உற்பத்தி செய்ய முடியும். தமிழகத்தில் மொத்தம் 5491 கயிறு அலகுகள் உள்ளன. இவற்றில், 9901 உறுப்பினர்களைக் கொண்ட 67 அலகுகள் கூட்டுறவுச் சங்கங்களாக இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் நார் உற்பத்தி மற்றும் கயிறு முறுக்குதல் ஆகிய தொழில்கள் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. தமிழ்நாட்டில் கயிறு தொழிலை வளர்ச்சி அடையச் செய்து அதன் வாயிலாக மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, அவர்களின் ஊதியத்தை அதிகரித்தல் மற்றும் கயிறுப் பொருட்களின் ஏற்றுமதியினை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, கயிறு வாரியத்துடன் ஒருங்கிணைந்து முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

2004-2005 ஆம் ஆண்டில், இரண்டு கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன. கிருட்டிணகிரி மாவட்டத்தில் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேப்பாளம்பட்டி கிராமத்திலும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கல்லூார் கிராமத்திலும் தலா ரூ. 1 இலட்சம் வீதம் அரசு பங்களிப்புடன் இவை தொடங்கப்பட்டுள்ளன. 2004 முதல் 2006 வரை தமிழ்நாட்டில் கயிறு சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 42.36 கோடி மதிப்பிலான செயலாக்கத் திட்டத்தினை மாநில அரசு கயிறு வாரியத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை கயிறு வாரியத்துடன் இணைந்து செயல்படுத்துவதற்காக மாநில அரசு ரூ 41.40 இலட்சத்தினைத் தன்பங்காக அளித்துள்ளது.

• கயிறு தொழிலில் பயிற்சி பெற்ற 2000 மகளிருக்கு மகிளா கயிறு யோஜனா திட்டத்தின்கீழ் ரூ. 13.40 இலட்சம் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட பாரம்பரிய கயிறு இராட்டைகள் வழங்குதல்.

• மதிப்பு கூட்டப்பட்ட கயிறு பொருட்களான கயிறு--கால் மிதிவிரிப்பு மற்றும் கயிறு தரைவிரிப்புகள் ஆகிய பொருட்களை தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 30 புதிய கயிறு சிறுதொழில் அலகுகளுக்கு விளிம்புத்தொகையாக ரூ.20.00 இலட்சம் அளித்தல்--

• கயிறு கால் மிதிவிரிப்பு மற்றும் தரைவிரிப்புகள் தயாரிக்கும் தொழிலில் 200 கயிறுத் தொழிலாளர்களுக்கு அவர்களின் தொழில் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கான ரூ.5.00 இலட்சம் அளித்தல்

• தென்னங்கயிற்று வலைகளை பயன்படுத்தி புல்வெளி அமைத்தல் குறித்து நான்கு செயல்முறை விளக்கங்கள் செய்து காட்டுவதற்காக ரூ. 2.00 இலட்சம் அளித்தல்

• தமிழ்நாட்டில் உள்ள கயிறு தொழில் முனைவோர்களை கயிறுத் தொழில்களின் நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காக கேரளாவிற்கு விழிப்புணர்ச்சிப் பயணம் அழைத்துச் செல்வதற்கு ரூ.1.00 இலட்சம் அளித்தல்.

**25. சேகோசர்வ்**

சவ்வரிசி மற்றும் கிழங்குமாவு உற்பத்தி செய்யும் அலகுகளுக்குக் கிடங்கு வசதி, குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதி மற்றும் அன்றாட டெண்டர் முறையில் விற்க வசதி ஆகியவற்றை அளிப்பதற்காக 'சேகோசர்வ்' என்ற தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. சுமார் 800 சவ்வரிசி மற்றும் கிழங்குமாவு உற்பத்தி ஆலைகள் தமது உற்பத்திப் பொருட்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை பெறுவதற்கு இச்சங்கம் உதவி வருவதுடன், இதன் விளைவாக சுமார் ஒரு இலட்சம் சிறு விவசாயிகளும் தமது விளைபொருளுக்கு ஆதாயம் மிக்க விலை பெறுவதற்கு வகை செய்கிறது.

சேகோசர்வ் மூலம் விற்பனை செய்யப்படும் சவ்வரிசி மற்றும் கிழங்குமாவுப் பொருட்களுக்கு 7-5-2003 முதல் விற்பனை வரி சலுகையினை அளித்து 2 விழுக்காடு வசூலிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இச்சங்கம் நடப்பாண்டில் 28-02-2005 முடிய ரூ.166.12 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து, ரூ.2.65 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.



**26. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி**

1961 ஆம் ஆண்டில் ரூ.20.22 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு முதலுடன் இவ்வங்கி தொடங்கப்பெற்றது. படிப்படியாக வளர்ச்சி பெற்று 28-02-2005 அன்று ரூ.407.55 இலட்சம் மதிப்பிலான பங்கு முதலுடன் செயல்பட்டு வருகிறது. மாநிலமெங்கும் 27 கிளைகள் உள்ளன. நடப்பாண்டில் 28-02-2005 வரை, தாய்கோ வங்கி ரூ.170.74 கோடி கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்கியும், ரூ.223.13 கோடி வைப்புகளைத் திரட்டியும் உள்ளது.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவியளித்து வருவதுடன், இவ்வங்கி சிறு மற்றும் குறுதொழில்களுக்கும், சிறிய போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும் சிறு வணிகர்களுக்கும் கடனுதவி செய்து வருகிறது. இவ்வங்கி 'நபார்டு' மறுநிதியுதவித் திட்டத்தின் கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனுதவியளிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழகத்தில் சிறுதொழில்களை மேம்படுத்தி ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு தமிழக அரசின் நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சிட்கோ நிறுவப்பட்டது. சிட்கோ 41 தொழிற்பேட்டைகளை மேம்படுத்தி உள்ளது. 35 அரசு தொழிற்பேட்டைகளுக்கு முகவராகவும் இருந்து வருகிறது. இதுவரையில் சிட்கோ 4,972 மனைகளை மேம்படுத்தி உள்ளது. இது தவிர 4,222 தொழிற்கூடங்களை கட்டியுள்ளது. மேலும் 200 முதல் 600 சதுர அடி வரை அளவுகள் கொண்ட 1,841 குறுதொழிற்கூடங்களை கட்டியுள்ளது.

**2. சிட்கோவின் இலக்கு மற்றும் சாதனை**

2004-2005 ஆம் ஆண்டில் விச்சூர் தொழிற்பேட்டை பகுதி–II, கும்பகோணம் தொழிற்பேட்டை பகுதி-II மற்றும் கருப்பூர் தொழிற்பேட்டை (சேலம்) ஆகிய இடங்களில் ரூ.338 இலட்சங்கள் மதிப்பில் 316 மனைகளை மேம்படுத்தியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் கப்பலூர் மகளிர் தொழில் பூங்கா, திருமுல்லைவாயில் (மகளிர் தொழில் முனைவோருக்கென குறுமனைகள்), மயிலாடுதுறை, விண்ணமங்கலம், கும்பக்குடி, காக்களூர் பகுதி - II தேனி மற்றும் குறிச்சி ஆகிய இடங்களில் ரூ. 652.30 இலட்சம் மதிப்பீட்டில் 584 மனைகளை மேம்படுத்த உள்ளது.

[2005 மார்ச் 24

2004-2005 ஆம் ஆண்டில் விற்பனை இலக்கு 850 மனைகளும் 90 தொழிற் கூடங்களும் ஆகும். பிப்ரவரி 2005 வரையில் 201 மனைகளை விற்றுள்ளது. மேலும் 241 மனைகளை இந்த நிதியாண்டிற்குள் விற்க முடிவு செய்துள்ளது. 84 தொழிற்கூடங்களை விற்றுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் 670 மனைகளையும், 60 தொழிற்கூடங்களையும் விற்க முடிவு செய்துள்ளது.

### 3. மகளிர் தொழிற்பூங்காக்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தன்னாற்றல் மிக்க மகளிருக்கு வாய்ப்பளிக்க 5 பிரத்தியேக மகளிர் தொழிற்பூங்காக்களை தமிழகத்தில் ஏற்படுத்த அறிவிக்கப்பட்ட திட்டம் இந்நாட்டிலேயே முதன்மை திட்டமாகும். அரசு புறம்போக்கு நிலங்களில் இந்த மகளிர் தொழிற்பூங்காக்கள் அமைந்தால், நிலத்தின் விலையில் 50 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்விடங்களில் மனைகளை வாங்கிய மகளிர் தொழில் முனைவோர்கள் நடைமுறை மூலதனம் மற்றும் தவணைக்கடன் ஆகியவற்றை எந்தவொரு நிதி நிறுவனத்திடமிருந்தும் பெற விண்ணப்பித்திருந்தால் அதற்காக சிட்கோவிற்கு செலுத்தும் ஆய்வு கட்டணம் தள்ளுபடி செய்யப்படும். சென்னை மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் அமைந்துள்ள இந்த தொழில் பூங்காக்களில் மனைகளை வாங்கினால் சிட்கோ நிர்வாக கட்டணமான 15 விழுக்காட்டினை 10 விழுக்காடாகக் குறைத்து வசூலிக்கும். சென்னை அருகில் அமைந்துள்ள திருமுல்லைவாயில் மற்றும் திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள வாழவந்தான் கோட்டை ஆகிய இரு இடங்களில் புதிய தொழிற்பூங்காக்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றை மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் திருமுல்லைவாயிலில் 33.70 ஏக்கர் நிலபரப்பில் மகளிர் தொழில் முனைவோருக்கென குறு மனைகள் உருவாக்கப்படும். சேலம் அருகில் உள்ள கருப்பூரில் மூன்றாவது மகளிர் தொழில் பூங்கா முடிவடைந்து அவற்றின் ஒதுக்கீடுகளுக்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு அவைகள் ஆய்வில் உள்ளது. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் எஞ்சியுள்ள இரண்டு மகளிர் தொழில் பூங்காக்கள் 2005-2006 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

### 4. தொழில்நுட்பப் பூங்காக்கள்

2004-2005 ஆம் ஆண்டில் குறுதொழில் முனைவோர்களுக்கென மூன்று தொழில்நுட்ப பூங்காக்களை புறநகர் பகுதிகளில் அமைக்க சிட்கோ



2005 மார்ச் 24]

நிறுவனம் முனைந்துள்ளது. இவற்றிற்காக இரண்டு இடங்களில் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம் வாணியம்பாடி அருகிலுள்ள விண்ணமங்கலத்தில் தொழிற்துறைக்குச் சொந்தமான நிலங்கள் சிட்கோ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையிலுள்ள நிலத்திற்கு இந்து அறநிலையத் துறையிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெறப் பட்டுள்ளது, தேனியில் நிலம் தேர்வு செய்யப்பட உள்ளது. 2005-2006-ம் ஆண்டில் மீதமுள்ள பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிடும்.

### 5. மூலப்பொருள் உதவி

சிறுதொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருட்களை நியாய விலையில் வினியோகம் செய்வது இந்நிறுவனத்தின் பணிகளில் ஒன்றாகும். சிட்கோ கீழ்க்கண்ட மூலப்பொருட்களை விநியோகம் செய்து வருகிறது.

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரைடு
4. அச்சக காகிதம் *

*(தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து அச்சக காகிதங்கள் பெறப்பட்டு அரசு துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அச்சகக்கூடங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.)

### இலக்கு மற்றும் சாதனை

(மதிப்பு ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2004–05 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2004–05 ஆம் ஆண்டில் பிப்ரவரி முடிய அடைந்த சாதனை | | 2005–06 ஆம் ஆண்டுக்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மெ.டன் | மதிப்பு | மெ.டன் | மதிப்பு | மெ.டன் | மதிப்பு |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 10000 | 2300.00 | 19926.656 | 5564.07 | 25000 | 7625.00 |
| 2 | மெழுகு | 2000 | 760.00 | 1114.050 | 429.84 | 2300 | 961.00 |
| 3 | அச்சக காகிதம் | 2000 | 860.00 | 1431.218 | 603.53 | 2265 | 953.00 |
| 4 | பொட்டாசியம் குளோரைடு | 70 | 24.50 | 33.140 | 12.18 | 60 | 20.40 |

**6. விற்பனை உதவித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிறுதொழில் நிறுவனங்களுக்காக இதுவரை சிட்கோ கலந்து கொண்டது. 1998 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டப்படி (Tamil Nadu Transparency in Tenders Act, 1998) சிட்கோ ஓர் உற்பத்தியாளராக இல்லாததால் விற்பனை உதவித்திட்டத்தின் இலக்கினை அடையமுடியவில்லை. இருப்பினும், 2005-ம் ஆண்டு பிப்ரவரி வரை ரூ. 19.47 இலட்சம் அளவிற்கான ஆணைகளை சிறு தொழில் அலகுகளுக்காக சிட்கோ பெற்று தந்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சங்கள் அளவிற்கு ஆணைகள் பெற்று விற்பனை உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**7. ஏற்றுமதி உதவித் திட்டம்**

சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின் மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரையில் 95 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**8. தேசிய சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிட்கோ நிறுவனம் கூட்டு கடன் திட்டம்.**

இந்நிறுவனம் தேசிய சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் குறுதொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 25 இலட்சங்கள் வரையில் கூட்டு கடன் திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்க உடன்பாடு செய்துள்ளது. இத் திட்டம், மனையின் விலை, கட்டட மதிப்பு, இயந்திரங்களின் மதிப்பு, நடைமுறை மூலதனம் ஆகிய அனைத்திற்கும் சேர்த்து கடன் வழங்கும் அரிய திட்டமாகும். இக் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 12% வட்டியாக வசூலிக்கப்படும். இக் கடனுக்கு ஈட்டு பிணையம் செலுத்த தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசு வட்டியின் அளவை குறைக்கும் பொருட்டு வட்டி மானியமாக ஆண்டிற்கு 3 விழுக்காடு வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. வட்டியினை கணிசமாக குறைப்பதற்கு இந்த வட்டி மானியம் உதவும்.



**9. தமிழகத்தில் உள்ள சிறுதொழில் மற்றும் குறுதொழில் பற்றிய மின்னணு தகவல் பெட்டகம்**

தமிழகத்தில் உள்ள சிறுதொழில் பற்றிய அன்றாட தகவல்கள் அடங்கிய மின்னணு தகவல் பெட்டகம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இணையதளத்தில் வெளியிடப்படும் இவற்றில் தொழில்கூடங்களில் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம், உற்பத்தி திறன், உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படும் தொழில்முறைகள் மற்றும் இதர விவரங்கள் அடங்கியிருக்கும் இந்த பெட்டகம் சிறுதொழில் அலகுகள் பயனடைய உதவிகரமாய் இருக்கும்.

**10. சிட்கோவின் இணையதளம்**

சிட்கோவின் இணையதளத்தில் சிட்கோவின் திட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள சிறுதொழில் மற்றும் குறுதொழில் கூடங்கள் மற்றும் மனைகள் பற்றிய விபர அறிக்கை, சிட்கோ மூலம் விநியோகிக்கப்படும் மூலப்பொருட்களின் விபரங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கான ஆலோசனைகள் போன்றவை இடம்பெற்றுள்ளது.

**11. மாற்றுக் கொள்முதல் முகவர்**

சிட்கோ உற்பத்தியாளராக இல்லாததால், அரசு மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களின் மூலம் வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டப்படி (Tamil Nadu Transparency in Tenders Act) சிட்கோ நேரடியாக ஈடுபட இயலாததால் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சிட்கோவை 'மாற்றுக் கொள்முதல் முகவராக' (Optional Procurement Agency) அறிவிக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**12. சிட்கோ தொழிற்பேட்டைகளுக்கு அடிப்படை வசதிகளை பலப்படுத்துதல்**

சிட்கோவின் தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகள் நீண்டகால பயன்பாட்டினால் பாதிப்படைந்துள்ளன. இவையனைத்தையும் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியினால் பலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 24

(அ) கிண்டி, திருவிக. தொழிற்பேட்டையை ரூபாய் 1002.24 இலட்சங்கள் செலவு மதிப்பீட்டில் 'ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (IID) மூலம் மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக 'கிண்டி தொழிற்பேட்டை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்' என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான வேலைகளை சிறப்பு நோக்கு குழுமம் செயல்படுத்தும். 'தமிழக சாலை மேம்பாட்டு நிறுவனம்' இதற்கான திட்ட ஆலோசகராக இருக்கிறது. விரிவான மதிப்பீடுகளும், நில அளவுகளும், நில மதிப்பு விவரங்களும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் டிசம்பர் 2005 இல் முழுவதுமாக நிறைவுபெறும். இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 1 கோடி வழங்கியுள்ளது.

இத்திட்டம் ஓசூர் தொழிற்பேட்டையிலும் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு ஜூன் 2005க்குள் முடிக்கப்பட்டுவிடும். தமிழக அரசு இத்திட்டத்திற்கு அதன் பங்கீடாக ரூ.23.94 இலட்சம் அளித்துள்ளது. ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதி திட்டத்தின்கீழ் கப்பலூர் பகுதி–II, குறிச்சி, மேட்டூர் மற்றும் விருதுநகரில் உள்ள தொழிற்பேட்டைகளும் மேம்படுத்தப்படும். தொழிலதிபர்கள் பங்கான 20 விழுக்காடுகள் பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(ஆ) கப்பலூர் தொழிற்பேட்டை பகுதி—I, பேட்டை, காக்களூர், இராணிப்பேட்டை ஆகிய தொழிற்பேட்டைகள் 'கூடுதல் மத்திய உதவித் திட்டத்தின்' மூலம் மேம்படுத்தப்பட உள்ளன. இந்த தொழிற்பேட்டைகளைச் சார்ந்த ஒதுக்கீட்டாளர்களின் பங்குத்தொகை பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(இ) அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள், 'தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' மூலம் ரூ.47.20 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளது. தமிழக அரசு ரூபாய் 80 இலட்சம் அதனுடைய பங்களிப்பாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த 'சென்னை வாகன உதிரி பாகங்கள் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்' என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது இதற்கான பொறியியல் திட்ட மதிப்பீடு தயாரிக்க விரிவான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது.



2005 மார்ச் 24]

## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965 ஆம் ஆண்டு, மாநிலம் முழுவதுமுள்ள சிறுதொழில் கூடங்களின் கூட்டமைப்பாக, ஆரம்ப திட்ட காலங்களில் தொழில் மற்றும் வணிகத் துறையினால் பரவலாக நிறுவப்பட்ட 64 சிறு தொழிற்கூடங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. கடிகார உதிரி பாகங்களை கொண்டு கடிகாரம் செய்தல், சாராவி மூலம் பொருட்கள் உற்பத்தி செய்தல், ஆழ்குழாய் கைப்பம்புகள் மற்றும் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றிற்கான உற்பத்தி கூடங்களை பின்னர் டான்சி நிறுவியது. டான்சியின் கட்டமைப்பு வசதிகளை தனியார் தொழில் முனைவோர்கள் தாராளமாக பயன்படுத்தியதன் மூலம் டான்சி நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் சிறப்பான சேவை செய்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2. மாநிலத்தில் தொழில் துறை நடவடிக்கை குறைவாக இருந்த நிலையில் டான்சி முன்னோடியாக டைகாஸ்ட்டிங், ஃபோர்ஜிங், இனாமல்டு வயர், வார்ப்பட பொருட்கள், தோல் பதனிடுதல், தோல் பொருட்கள், மின்சார கருவிகள், இயந்திர தொழிற்கூடங்கள், நுண்கருவிகள், இயந்திர கருவிகள், உயர்கட்டுமான பொருட்கள், துத்தநாக முலாம் பூசுதல், சிறுசிறு பொறியியல் பொருட்கள், எஃகு மற்றும் மரத்திலான அறைகலன்கள் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து, பல்வேறு துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்தது. மேலே குறிப்பிடப்பட்ட தொழில்களை இம்மாநிலத்தில் தனியார் துவங்குவதற்கு டான்சி முன்னோடியாக திகழ்ந்து வந்தது.

3. காலப் போக்கில் தொழில் வளர்ச்சியில் தனியார் ஈடுபட்ட நிலையில் வார்ப்படம், போர்ஜிங்ஸ், எனாமல்ட் ஒயர்ஸ், பவுண்டரி மற்றும் இயந்திர கருவிகள் ஆகிய தொழில்களிலிருந்து டான்சி விலகிக் கொண்டது. தற்பொழுது 25 உற்பத்தி கூடங்கள் மற்றும் 6 செயல் பிரிவுகள் டான்சியின் கீழ் இயங்கி வருகின்றன.

4. உயர்கட்டுமான பொருட்கள், நுண் அலைகோபுரங்கள் மற்றும் உயர் அழுத்த மின்கடத்தி கோபுரங்களுக்குத் தேவையான துத்தநாக முலாம் பூசிய கோபுரப் பாகங்கள், மின்கடத்திப் பொருட்கள், சிறுசிறு பொறியியல் பொருட்கள், மரம் மற்றும் எஃகு பொருள்களால் ஆன அறைகலன்கள், துத்தநாக முலாம் பூசுதல், இந்தியா மார்க்-II ஆழ்குழாய் கைப்பம்புகள், காஸ்கெட் ஷெல்லாக், சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற சாராவியை (ஸ்பிரிட்) மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி

செய்யப்படும் பொருட்கள், கடிகார உதிரி பாகங்களை கொண்டு கடிகாரம் செய்தல் போன்றவை டான்சி உற்பத்தி செய்யும் பொருட்களாகும்.

5. பலவகையான பெயிண்ட்களை உற்பத்தி செய்யும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும், "டாப்பாப்" நிறுவனம் டான்சியின் துணை நிறுவனமாகும்.

6. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 6 இடங்களில் டான்சியின் விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில / மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் பெயர் பெற்ற தனியார் நிறுவனங்களுக்கு தேவையான பல்வேறு பொருட்களையும் சேவைகளையும், கடந்த நாற்பது வருடங்களாக டான்சி வழங்கி வருகிறது.

7. துத்தநாக முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண் அலை கோபுரங்கள், பல வகையான உயர் கட்டுமானங்கள், துத்த நாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் கைபம்புகள், தரமிக்க அறைகலன்கள் முதலியன உற்பத்தி செய்வதில் டான்சி தன் முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது.

8. நமது அரசின் சமுதாய நலப் பணிகளை நிறைவேற்றுவதிலும் டான்சி அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக எல்லோருக்கும் கல்வித் திட்டம், கரும்பலகை வழங்கல் திட்டம், வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஆழ்குழாய் கைப்பம்புகள் நிறுவுதல் மற்றும் அதற்கான உதிரி பாகங்களை உற்பத்தி செய்து வழங்குதல் போன்ற சீரிய பணிகளையும் டான்சி ஆற்றி வருகிறது. மற்றும் இந்திய வானாராய்ச்சி நிலையம், பாரத கனரக மின் நிறுவனம், பாரத விமானவியல் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு உயர் தொழில்நுட்பமிகு பாகங்களை உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது.

9. டான்சி உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்க ஏற்கெனவே அரசு ஆணைகளில் வழங்கப்பட்ட கொள்முதல் முன்னுரிமை உத்திரவு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998, பிரிவு 16(c)ன்கீழ் தொடர்ந்து அமலில் உள்ளது எனவும் அனைத்து கொள்முதல் செய்யும் அரசு நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இச்சலுகையின் மூலம் அரசுத் துறைகள், வாரியங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பணி ஆணைகளை டான்சி பெற இயலும். கடந்த நான்கு வருடங்களாக டான்சி செயல்பாட்டில் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறது.



10. உலகமயமாக்கல் கொள்கை நிலவி வரும் சூழ்நிலையில் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாப்பாப்) மற்றும் டான்சியின் இரு ஆழ்குழாய் கைப்பம்புகள் தொழிற்சாலை மற்றும் அறைகலன்கள் உற்பத்தி செய்யும் மூன்று தொழிலகங்களுக்கு ISO-9001:2000 சான்றிதழ் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்வது அவசியமாகும். இச்சான்றிதழ் பெறுவதன்மூலம் உபயோகிப்பாளர்களுக்கு தரத்தினை உறுதி செய்து முனைப்புடன் வெளிச்சந்தையில் போட்டியிட இயலும். அம்பத்தூர் டான்சி பம்பு தொழிற்சாலைக்கு ISO-9001:2000 சான்றிதழ் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

**சிறுதொழில்கள் துறை - வரவு செலவுத் திட்ட மதிப்பீடு**

**கோரிக்கை எண் - 42**

ரூபாய் ஆயிரத்தில்

| | கணக்குத் தலைப்பு | 2004–05 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2004–05 திருத்திய மதிப்பீடு | 2005–06 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2407 | மலைத்தோட்ட பயிர்கள் | 1,15,00 | 1,15,00 | 1 |
| 28.51 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 55,13,99 | 44,28,08 | 48,73,39 |
| 28.52 | தொழில்கள் | 3,69,19 | 3,19,66 | 3,84,38 |
| 2885 | தொழில்கள், கனிமப் பொருள்கள் குறித்த ஏனைய செலவுகள் | 7,00,00 | 7,00,00 | 3,00,00 |
| 3451 | தலைமைச் செயலகம் — பொருளாதாரப் பணிகள் | 1,10,17 | 1,20,95 | 1,30,38 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 20,00 | 20,00 | 1 |
| 48.51 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1,23,50 | 2,55,72 | 51,98 |

[2005 மார்ச் 24

| கணக்குத் தலைப்பு | 2004–05 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2004–05 திருத்திய மதிப்பீடு | 2005–06 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 6851 கிராமத் தொழில்கள் சிறு தொழில்களுக்கான கடன்கள் | 50,00 | 50,00 | .. |
| 6860 நுகர்வோர் தொழில்களுக்கான கடன்கள் | .... | 1,02,45 | .. |
| 6885 ஏனைய தொழில்கள், கனிமப் பொருள்கள் குறித்த கடன்கள். | .... | 7,01,00 | .. |
| மொத்தம் | 70,01,85 | 68,12,86 | 57,40,15 |

D
V2ட, 31'05
Y05.73.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226620.
சென்னை-600 008
நூலகம்

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 112, Anna Salai, Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.